https://tamileelamarchive.com/

ஒக்ரோபர் 2006

# எரிமலை
# ERIMALAI



தமிழீழப் பெண்கள் நாள்

ஒக்ரோபர்-10



# முதற் பெண் மாவீரர்
# 2ம் லெப் மாலதியின்
## பத்தொன்பதாவது ஆண்டு நினைவாக....

மண்ணாரில் ஊற்றாகி
மறத்தமிழுக்கு உரித்தாகி
பெண் விடுதலைக்கு வேராகி
மண் விடுதலைக்கு விதையான - மாலதி

கோப்பாய் வெளியில் வெடித்த எரிமலை
பூ என்ற சொல்லை புறந்தள்ளி
புலி என நிமிர்ந்த புதிய வரலாறு
மென்மையின் உவமானம் அழித்து
வேங்கையாய் உருவான வீரவரலாறு
பேயும் இரங்கும் எனச் சொன்னோர் முன்
பேய் வேட்டை ஆடிய புற நானூறு

ஆணுக்கு சரிநிகர் பெண்ணென
அரிவரி கொடுத்த அரியாத்தை வாரிசு - இனி
விடுதலைக்கு உயிர் கொடுத்து
படையணிக்கு பெயர் கொடுத்த
சரித்திர நாயகியின் தடம் தேடு



நினைவு நாள்:
ஒக்ரோபர் -10

https://tamileelamarchive.com/

# எரிமலை

உள்ளே...

## தமிழர்களின் டில்லிப் பயணம் 04





சிங்கள அரச பயங்கரவாதமும் சர்வதேசத்தின் மௌனமும்



தொங்குநிலை மகிந்தரும் தாங்குநிலைத் தமிழரும் 14

கலந்துரையாடல்




ஈழவேந்தன் (பா.உ)




எமது இராச்சியத்தின் விடுதலைக்காக...

### கட்டுரைகள்


நாதன் 04

நவீனன் 06

காண்டீபா 09

க.வே.பாலகுமாரன் 14

ம.தனபாலசிங்கம் 22

அருஷ் 50


### கலந்துரையாடல்


ஈழவேந்தன் (பா.உ) 10


### கவிதைகள்


ந.ஹேமராஜ் 10

செந்தோழன் 20

கோகுலராகவன் 39

கந்தையா நவரேந்திரன் 53

ஐ. துஷ்யந்தன் 60


### சிறுகதைகள்


திசேரா 24

திருமதி வேணி கிருபாகரன் 32

மண்டைதீவு கலைச்செல்வி 40

கீர்த்திகா 44

சாந்தினி வரதராஜன் 46

குமுதினி 54

https://tamileelamarchive.com/



"

தார்மீக அடிப்படையில் நாம் உறுதியான அத்திவாரத்தில் நிற்கின்றோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது; சர்வதேச மனித அறத்திற்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். தனியரசு அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது.

"

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன் அவர்கள்

https://tamileelamarchive.com/




# தலைவாசல்

## திலீபம்

மகாத்மா காந்தியின் காந்தீயம் விளங்குவது போல் திலீபன் பெயரால் திலீபம் விளங்குகிறது. மேலோட்டமாகப் பார்க்கும்போது காந்தீயத்திற்கும் திலீபத்திற்கும் இடையில் ஒற்றுமை காணப்பட்டாலும் அடிப்படை வேறுபாடுகள் நிறைய உண்டு. காந்தியின் உண்ணா நோன்பு ஒருவகை இராசதந்திரம். அவர் சாவை இலக்காகக் கொண்ட வைராக்கியத்தோடு தனது சத்திய விரதத்தை மேற்கொள்ளவில்லை. அவருக்குத் தனது உயிர் மீது பற்றுதல் இருந்தது. சா வந்துவிடுமோ என்ற அச்சம் அவருக்கிருந்தது. மிகவும் எச்சரிக்கையாக இருந்தார். தன்னைச் சாகவிடாது பார்த்துக் கொள்ளும்படி அவர் தன்னுடைய நெருங்கிய சகாக்களைக் கேட்டுக்கொண்டார். இதற்கான உறுதிமொழியையும் அவர் பெற்றுக் கொண்டார். உண்ணா நோன்பின் போது காந்தி பாதாம் பருப்பு கலந்த ஆட்டின் பாலைப் பருகினார். சிறந்த சத்துணவாக அது அமைந்தது. மயக்கமுறாமல், பசிப்பிணி ஆட்கொள்ளாமல் அவர் பல தடவை உண்ணாவிரதம் இருந்தார். பிரிட்டிஷ் தலைவர் வின்ஸ்ரன் சேர்ச்சில் காந்தியை இறக்க விடுங்கள் என்று சொன்னார். அது நடைபெறவில்லை. காந்தி மத ஈடுபாடு உள்ளவர். அவர் உள்மனதிலும் வெளியிலும் இந்துவாக வாழ்ந்தார். உபகண்டம் இருநாடாகப் பிளவுபடுவதற்கு இது மூலகாரணமாக அமைந்தது. திலீபன் மதத்திற்கு முன்னுரிமை வழங்காத தமிழீழ விடுதலைப்புலி அமைப்பினன். புலிகள் அமைப்பு மதத்தை நிராகரிக்கும் அமைப்பல்ல. மதம் தனிப்பட்ட விடயம். அதை விடுதலைப்போரில் கலக்கக் கூடாது என்பது புலிகள் நம்பிக்கை. திலீபன் இதற்கு சிறந்த உதாரணமாக இருக்கிறான் மக்கள் மீது பெரும் பாசம் கொண்டவர் அவர்களுக்காக வாழ்ந்து வீரச்சாவடைந்தவன். புலி உறுப்பினன் என்பதால் கொள்கைப் பிடிப்பும், அதற்காக உயிர் துறக்கும் திடசங்கற்பமும் திலீபனுக்கு இருந்தது. அவன் தமிழீழத்தின் சிதைவைத் தடுக்கும் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்தான் காந்தி தேசம் தானே உருவாக்கி காந்தீயத்தைத் தோல்வியுறச் செய்தது. திலீபன் தோல்வி அடையவில்லை. அவன் அடைந்த மகத்தான வெற்றி மானுடம் இருக்கும் வரை நிலைக்கும். திலீபனின் வீரச்சாவு காந்தி தேசத்திற்கு அகற்றமுடியாத களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. காந்தீயமும் திலீபமும் தமிழீழ மண்ணில் சந்தித்தன. காந்தீயமும் திலீபமும் சரி நிகரானவை அல்ல. ஆக்கிரமிப்புப்படை தனக்கு அமைதிப்படை என்ற பெயர் சூட்டிக்கொண்டு ஆக்கிரமிப்பை மேற்கொண்டது. காந்தீயத்தின் தோல்வி இந்தியப்படையின் நுளைவோடு தொடங்கியது. காந்தீயம் காலத்தைவென்று நிற்க முடியாத தற்காலிக ஏற்பாடு என்பது நிரூபிக்கப்பட்டது. தமிழீழ மக்கள் மீது காந்தி தேசத்தின் படை நடத்திய ஒவ்வொரு கொலை வெறித்தாக்குதலும் காந்தீயத்தின் போலித் தன்மையையும் திலீபத்தின் வலிமையையும் உலகிற்கு உணர்த்தியது. காந்தீயம், திலீபம் ஆகிய இரு கோட்பாடுகளின் ஒப்பு ஆய்வு நேர்மையுடன் நடத்தப்படுமேயானால் திலீபத்தின் உயர்வை உணரமுடியும். காந்தி பிறந்த நாட்டில் காந்தீயம் முற்றாக மறைந்து விட்டது. திலீபம் பிறந்த மண்ணில் அது மக்கள் மனதை விட்டகலாப் பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கிறது.

திலீபம் ஒரு வித்தியாசமான பிறப்பு விடுதலைக்காக ஆயுதப்போரில் பங்குபற்றிய ஒரு போராளி. ஆக்கிரமிப்பாளர்களுக்கு நன்கு பரீட்சியமான அகிம்சை மார்க்கத்தின் வெளியீடான உண்ணாநோன்பு மூலம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்தான். காந்தீயத்தை மறந்து விட்ட காந்திதேசத்திற்கு திலீபத்தின் புனிதத்தை உணரமுடியவில்லை. அன்று மகாத்மா காந்தியைச் சாக விடுங்கள் என்று வின்ஸ்ரன் சேர்ச்சில் கூறியதைப்போல் காந்தி தேசமும் அவ்வாறே செயற்பட்டது. இதுதான் வரலாற்றுச் சுழற்சியின் பாடம். 1942ம் ஆண்டு ஆகஸ்த்து மாதம் 7,8ஆம் நாட்களில் இந்திய தேசிய காங்கிரஸ் நிறைவேற்றிய இந்தியாவை விட்டு ஆங்கிலேயனே வெளியேறு என்ற தீர்மானத்தில் 'உலகின் விடுதலைக்கு இந்தியா பாடுபடவேண்டுமானால் அது (இந்தியா) முதலில் விடுதலை பெற்றாக வேண்டும்' என்ற வாசகம் காணப்படுகிறது. உலகின் விடுதலைக்கு பாடுபடும் வேட்கை ஈழத்தமிழனை அடிமைப்படுத்தும் இராணுவ நடவடிக்கையாக மாறியதை எமது தலைமுறையில் நாம் பார்க்கிறோம். காந்தீயத்தின் போலித்தன்மையை உலகிற் உணர்த்திய திலீபன் ஒரு ஈழத் தமிழன், தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினன் என்பதையிட்டு நாம் காலம் காலமாகப் பெருமிதம் அடைவோம்.

எரிமலை
கலை பண்பாட்டு அரசியல் சமூக ஏடு
ஒக்ரோபர் 2006
இருபத்தைந்தாம் ஆண்டு
தாய்மண் வெளியீடு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, பிரான்ஸ்

https://tamileelamarchive.com/

■ நாதன்

# தமிழர்களின் டில்லிப் பயணம்

## ■ இந்தியா வெளிவிவகார தர்க்கம் பற்றிய பார்வை ■

**அரசுகளுக்கிடையேயான உறவுகள் தார்மீகநெறிகளினால் ஆளப்படுபவையல்ல. அவை எப்போதும் தார்மீகமற்ற வழிநெறிகளிலேயே இயங்கின - இயங்கும்.**

- முன்னாள் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளரும், பிரதமர் மன்மோகன்சிங்கின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகருமான ஜே.என்.டீக்சிற் பெப். 1998



■ தமிழீழ தேசியத் தலைவர்

தமிழ் தேசியக் கூட்டமைப்பினின் இந்தியப் பயணம் மீண்டும் இந்தியா - தமிழீழம் என்பனவற்றிற் கிடையேயான உறவு பற்றிய விவாதத்தினை கிளறிவிட்டுள்ளது. இந்தப் பயணம் இருதரப்புக்கும் இடையேயான உறவுகளில் குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றத்தினை வெளிப்படுத்துகின்றது என்கின்ற வாதம் ஒருபுறத்தே நிலவுகின்றது. நீண்ட நாட்களின் பின்னர் இந்தியா - தமிழீழம் - புலிகள் என்கின்ற நிலைப்பாடு கொண்ட தரப்பினை உத்தியோகபூர்வமாக டில்லிக்கு அழைப்பது அரைவீதியைக் கடப்பதற்கு ஒத்தது என இந்த வாதங்கள் கூறுகின்றன. ஆனால், பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுடனான சந்திப்புக்காக தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவினரை டில்லிக்கு அழைத்துவிட்டு - நீண்ட காத்திருப்பின் பின் - உயர் அதிகாரிகளுடனும், பிரதி வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்புக்களுடன் திருப்பி அனுப்பியமை இருதரப்புகளுக்குமிடையேயான உறவுகளின் நிச்சயமற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றது என்கின்ற வாதம் மறுபுறத்தே வலுத்து வருகின்றது. மேலும், இராணுவக் துணைக் குழுவான புளோட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஆனந்தசங்கரி குழுவினரின் டில்லிப் பயணம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்ட பயணத்தின் முக்கியத்துவத்தினையும், எதிர்பார்ப்பையும் வலுவாக குறைத்துவிட்டது. தமிழர் தரப்பின் உண்மையான பிரதிநிதித்துவம் மீதும், அவர்களது சுதந்திரமான தேர்வுகள் மீதும் தமக்குள்ள நம்பிக்கையின்மையை துணைக்குழுக்களை அழைத்ததன் மூலம் இந்தியா பகிரங்கமாகவே வெளிப்படுத்தியுள்ளது என இந்தியா தொடர்பான அதிருப்தியாளர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

இந்த நியாய வியாக்கியானங்களை தமிழீழ மக்கள் தமக்குள் கேள்விக்குட்படுத்துவது இன்றைய காலச்சந்தியில் முக்கியமான விடயமாகும். குறிப்பாக, இந்தியாவுக்கும், தமிழீழத்திற்கும் இடையேயான உறவு எத்தகைய தர்க்க அடிப்படையில் செயற்படுகின்றது என்கின்ற பெரிய கேள்வியினை சுருக்கமாக எமக்குள் எழுப்புவது முதன்மையானது.

இந்தியா இன்று அதன் வரலாற்றுப் போக்கில் முக்கிய காலகட்டத்தினைக் கடக்கின்றது. தன்னை ஒரு வல்லரசாக நிலைநிறுத்த விரும்பும் நோக்குடன் தனது பொருளாதார, இராணுவ மற்றும் இராஜதந்திர செயற்பாடுகளை இந்தியா விரிவாக்கி வருகின்றது. திறந்த பொருளாதார அமைப்பு ஏற்படுத்திக் கொடுத்த கட்டற்ற சந்தை வாய்ப்புக்களைப் பற்றிப்பிடித்து பலமான மத்தியதர வர்க்கத்தினைக் கொண்டதும், தகவல்தொழில்நுட்ப துறையில் முக்கியமான பாத்திரத்தினை வகிப்பதுமான சக்தியாக இந்தியா விரிவடைந்து வருகின்றது. தொடர்ச்சியாக, இந்த பொருளாதார



■ இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்

வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் இராணுவ விரிவாக்கத்தினையும், இராஜதந்திர வலுப்படுத்தல்களையும் இந்தியா மேற்கொண்டு வருகின்றது. அணுகுண்டு, மத்தியதூர ஏவுகணைகள், கடற்படை ஆற்றல் என்பன இந்தியாவின் எதிர்காலம் பற்றிய கனவுகளுக்கு கட்டியம் கூறுகின்றது. மறுபுறம், இந்த இந்தியக் கனவு எதுவித சர்வதேச எதிர்ப்புக்களுமற்ற பூக்களால் நிரப்பப்பட்ட பாதை வழியே நடப்பது சாத்தியமற்றது. ஒற்றை துருவ உலகை நோக்கிப் பயணம் செய்யும் அமெரிக்கா, ஆசிய வல்லரசாக தங்களை கருதும் சீனா - ஜப்பான், இந்தியாவின் நிச்சயமற்ற நட்பினால் சந்தேகம் கொள்ளும் ரஸ்சியா, பிராந்திய ரீதியில் இந்தியாவுடன் கூர்மையான முரண்பாடுகளைக் கொண்ட பாகிஸ்தான் எனப் பல சக்திகளும் இந்தியாவின் சர்வதேச சக்தியாகும் கனவுகளுக்கு எல்லைகளுக்குட்பட்ட ஆதரவையே வழங்கும்.

இந்தப் பின்னணியில், இலங்கைத் தீவு தொடர்பான அணுகுமுறையிலும் இந்தியாவின் இந்தச் சர்வதேச கனவுப் பின்னிப்

https://tamileelamarchive.com/

பிணைந்துள்ளது. ஆரம்பத்தில், இலங்கை இனச்சிக்கல் விவகாரத்தினை தனது பிராந்திய செல்வாக்குக்குட்பட்ட விடயமாக கருதிய இந்தியா அனைத்துலக தலையீடு என்கின்ற நிலை அங்கு ஏற்பட்ட போது தன்னையும் அதற்குள் பொருத்திக் கொண்டது. இலங்கை இனச்சிக்கல் தொடர்பாக நோர்வேயின் இந்தியாவுடனான தொடர்ச்சியான தொடர்பாடல் இதனடிப்படையிலேயே அமைந்தது.

சர்வதேசமயப்பட்ட இலங்கை இனச்சிக்கல் தொடர்பான அணுகுமுறை (ரணிலின் சர்வதேச பாதுகாப்பு வலையும், மகிந்தரின் ஆசிய தோழமையும்) தவிர்க்க முடியாத விதத்தில் தான் வகுத்த வியூகத்தை விட்டு வெளியே பயணம் செய்யும் என்பதை இந்தியா உணர்ந்தே வந்துள்ளது. குறிப்பாக அண்மைக்காலமாக மிகதீவிர அளவில் அதிகரிக்கப்பட்ட அமெரிக்காவின் நேட்டோ இல்லாத இராணுவத் தோழன் (non-Nato Allay)என்கின்ற அந்தஸ்துப்பெற்ற பாகிஸ்தானின் தலையீடு, சீனா நிலைப்பாடு என்பன இந்தியாவின் கரிசனைக்குரியதாகவே இருந்து வருகின்றது.

மறுபுறம், இலங்கைத்தீவின் தேசிய இனச்சிக்கல் இந்திய விருப்பு - வெறுப்புக்களினை மட்டும் கருத்தில் எடுத்து இயங்குகின்றது என்கின்ற பொய்யான மிதப்பிலும் இன்று இந்தியா இல்லை.

இந்தக் கள உண்மைக்கும் தனது நோக்கத்திற்கும் இடையேயான இடைவெளி இந்தியாவின் சர்வதேசக் கனவுக்கு முன்னுள்ள பாரிய சவாலாகும். தனது பிராந்தியத்தில், தனது செல்வாக்குக்கு உட்பட்டு சீவிக்க வேண்டிய தீவில் நிலவும் முரண்பாட்டை தன்னால் களைய முடியாது இருப்பதும், அதன் விளைவாக தனது நலன்களுக்கு சாதகமற்ற சக்திகளின் வலையில் இந்தவிவகாரம் வீழ்வதும் இந்தியாவினை அச்சுறுத்துகின்றது.

இந்தியாவின் இலங்கைக் கொள்கை எண்பதுகளில் ஒன்றுபட்ட இலங்கைக்குட்பட்ட தீர்வு என வகுக்கப்பெற்றதாக இருந்தது. பனிப்போர் காலத்து இறுக்கத்தினையும், தகவல் தொழில்நுட்பம் விரிவாக்கம் பெற்று உலகம் கிராமம் ஆகிவிட்ட யதார்த்தம் புலப்படுவதற்கு முற்பட்ட காலத்து பிராந்திய வயப்பட்ட சிந்தனைகளையும் கொண்ட நிலைப்பாடே இந்த ஒற்றை நாடு என்கின்ற நிலைப்பாட்டில் பிரதிபலித்தது.

இனச்சிக்கலைப் பயன்படுத்தி தனது பிராந்திய கணிப்புக்களை கையாண்ட இந்தியா, முரண்படும் இலங்கைத் தீவின் தேசிய இனங்களிற்கு இடையேயான துருவமயப்பட்ட தன்மையை கருத்தில் எடுக்கவில்லை. இந்த இறுக்கமான இந்திய நிலைப்பாடே 1987 உடன்படிக்கையின் தோல்விக்குப் பிரதான காரணமாகவும் அமைந்தது.

இந்தியா தனது நலன் என வகுத்த ஒற்றை இலங்கைக்கும், தமிழர்கள் தங்கள் நலன் எனக் கருதிய தமிழீழ விடுதலைக்கும் இடையே தவிர்க்க முடியாத இடைவெளியும் - முரண்பாடும் ஏற்பட்டது. இலங்கை இனச்சிக்கலில் தமிழீழ மக்களின் விடுதலையை ஆதரித்து தமிழ்நாடே தார்மீகரீதியாக கிளர்ந்தெழுந்த போதும் இந்தியா தனது நலன் என இனங்கண்ட இலக்கு நோக்கி இறுக்கமாக நகர்ந்தமையை 1986-87 காலத்து நிகழ்வுகள் புலப்படுத்தும். இது தமிழீழ தேசத்திற்கும் இந்தியாவுக்கும் இடையேயான போராக வெடித்து பல்லாயிரம் உயிரிழப்புக்களுக்கும், சேதாரங்களுக்கும் வழிசமைத்தது.

எனினும், 90களில் ஏற்பட்ட உலகின் பல மாற்றங்கள் இந்தியாவின் ஒற்றை இலங்கை எனும் கோட்பாட்டின் விஞ்ஞானபூர்வமற்ற தன்மையை வெளிப்படுத்தியது. கிழக்கை ரோப்பிய நாடுகள் உடைந்தமையும், கிழக்குத் தீமோரின் விடுதலையும் பனிப்போருக்குப் பிந்திய காலத்து உலக மனப்பாங்குகளை முன்னிலைப்படுத்தியது. கொசோவாப் பேச்சுக்களின் போது கொசோவா தனித்த நாடாகுவதை பலவித காரணங்களுக்காக பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள மறுத்த அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் அந்த மக்கள் சர்வசன வாக்கெடுப்பு ஊடாக இந்த விடயத்தினை தீர்க்கலாம் என்பதை மறுக்கவில்லை. சூடான் முரண்பாடுகளிலும் சனநாயக வயப்பட்ட முறையில் பிரிந்து செல்வதற்கான உரிமையை சர்வதேச சமூகம் பறித்தெடுக்கவில்லை.

இந்தப் பின்னணியில் இன்று இந்தியா புதிய சூழலை எதிர்கொள்கின்றது. ஒருபுறம், இலங்கைத் தீவு பிரிந்துவிடக் கூடாது என திரும்பத்திரும்பக் கூறி சிங்கள பேரினவாத அரசை தன்பக்கத்தில் வைத்திருக்க முனையும் இந்தியா, தமிழர்களின் தொடர்ச்சியான போரும், எழுச்சியும் மற்றுமொரு திசையில் இலங்கை அரசியலை நகர்த்துகின்றது என்பதை கணித்து வருகின்றது. தமிழர்களின் எழுச்சியானது இலங்கைத் தீவில் மேற்குலகின் தலையீட்டுக்கான வலுவான தளத்தைப் போட்டுக் கொடுத்தது. பாக்கிஸ்தான், சீனா போன்றனவற்றின் தலையீட்டுக்கும், நடவடிக்கைகளுக்குமான இடைவெளியையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இது இலங்கை தொடர்பான தனது கொள்கை மீள்பரிசீலனையை இந்தியா செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகின்றது.

இந்தியாவின் புதிய கொள்கையானது இன்றுள்ள புதிய உலக அமைவிலே தனது நலன்கள் என்ன என்பதை மட்டும் வரையறை செய்து அதற்கு ஏற்ப இலங்கையின் இரு தரப்பினரையும் கையாள்வதாக அமையும். முக்கியமாக, இந்தப் புதிய அணுகுமுறை தமிழீழ மக்களின் துன்பத்தையும், துயரங்களையும் கவனத்தில் எடுத்து வகுக்கப்பெற்றதாக அமையாது. அதுவே அரசுகளின் பொதுவான வெளிவிவகாரத் தர்க்கமாகும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் டில்லிப் பயணத்திற்கான அழைப்பினை இந்த வரைபடத்தில் பொருத்திப் பார்த்தால், தமிழர் தரப்புடன் ஒருவித தொடர்பாடலை நடத்த இந்தியா முயல்வதைப் பார்க்கலாம். இந்தத் தொடர்பாடல் பகிரங்கமானதாகவும், உத்தியோகபூர்வமானதாகவும் இருப்பதையும் இந்தியா உறுதிப்படுத்தியுள்ளது. எனினும், அது இன்னமும் பயணம் செய்து இந்தியாவின் உருவாகிவரும் புதிய அணுகுமுறையின் எண்ணங்களை சந்திக்க வேண்டியுமுள்ளது. அப்போதுதான் அது அங்கீகரிக்கப்பட்டதாக - மன்மோகன்சிங்கை சந்திக்கும் தகுதி கொண்டதாக அமையும்.

மறுபுறத்தால் பார்த்தால், இந்தப் பயணம் தனித்து தமிழர்கள் தங்கள் நலன்களுக்காக மட்டும் மேற்கொள்ளப்பட்ட பயணமல்ல. இந்தியாவின் நலன்களுக்கு அது ஏற்புடையதாக இருப்பதால் இடம்பெற்ற பயணம். இதனை மிகச்சாதகமாகப் பார்ப்பதாயின், தமிழர்களின் நலன்களுடன் இந்திய நலன்கள் ஒரு பொதுப்புள்ளியை நோக்கி நகர்வதாகக் கொள்ளலாம்.

எனினும், இதன் சாதகமான எதிர்காலம், தொடர்ச்சியான தமிழர்களின் வலுவிரிவாக்கத்துடன் தொடர்புபட்டது.

முடிவாக, அரசுகளுக்கு நலன்கள் மட்டுமே முக்கியமானது - உறவுகள் நலன்கள் சார்ந்து மாற்றம் காணும்.

https://tamileelamarchive.com/



# சிங்கள அரச பயங்கரவாதமும் சர்வதேசத்தின் மௌனமும்









நவீனன்

யாழ்குடாநாடு தமிழ் மக்களின் கலாச் சார நகரம் மட்டுமல்ல மக்கள் செறிந்த யாழ் நகரத்தையும் கொண்ட பிரதேசம். இன்று முற்று முழுதான ஒரு இராணுவ முற்று கைக்குள் சிக்குண்டு ஒரு திறந்த சிறைச் சாலையாக மாறியுள்ளது. கடந்த ஆவணி 11 ஆம் நாள் முகமாலைப்பகுதியில் ஏற்பட்ட மோதலுடன் மூடப்பட்ட A-9 பிரதான நெடுஞ் சாலை இன்றுவரை திறக்கப்படவில்லை.

யாழ்குடாவிற்கான வெளியுலக தொடர்பு களை முற்றாக முடக்கும் வகையில் மக் களின் போக்குவரத்துக்கள் தடுக்கப்பட்டுள் ளதுடன், பாடசாலைகள், உயர்கல்வி நிலை யங்கள், அரச அலுவலகங்கள் வர்த்தக நிலையங்கள் போன்றனவும் மூடிக்கிடக்கின் றன. திட்டமிட்ட முறையில் மக்களுக்கான உணவு விநியோகமும் தடுக்கப்பட்டுள்ளது. தமிழீழத்தின் வரைபடத்தில் மிகவும் மக்கள் செறிவான பகுதி யாழ்குடாநாடுதான். தமி ழீழப்போராட்டம் கருவாகி உருவாகி விருட்ச மானதும் இங்கு தான். எனவே தான் யாழ் குடா மக்களை ஆக்கிரமிப்புக்குள் வைத்து தினம் தினம் சித்திரைவதைகளை புரிகிறது சிங்களப்படை இதன் மூலம் இம் மக்களின் மனவலிமையை சிதைக்கலாம் என்பது அர சின் நோக்கம்.

1995 இல் சிங்களப்படைகள் யாழ் குடாவை கைப்பற்றிய போது விடுதலைப் போரின் ஆணிவேரை நசுக்குவதே உள் ளார்ந்த நோக்கம். போரிற்கு விழுதாக நிற் கும் மக்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதன் மூலம் புலிகளுக்கான நிதிவளம், படைபலம், தார்மீக ஆதரவு என்பவற்றை முடக்கலாம் என்பதுடன். யாழ்ப்பாண போதனாவைத்தியசாலையை கைப்பற்றுவதன் மூலம் பெருமளவில் காய மடையும் போராளிகளை புலிகள் பராமரிக்க முடியாத நிலை ஏற்படும். எனவே பாரிய தாக்குதல்களில் புலிகள் ஈடுபடமுடியாது எனவும் சிங்கள அரசு கனவு கண்டது. ஆனால் நடந்தவை எல்லாம் எதிர்மறை யானவை.

சிங்களப்படை வரலாறு காணாத இழப் புக்களை சந்தித்ததும், புலிகள் இராணுவ வல்லமையில் மேலோங்கியதும் இதற்கு பின்னர் தான். அதாவது இதற்கு பின்னர் ஏற்பட்ட சமர்கள் தான் சிங்கள அரசுகளால் தமிழ் மக்களிற்கு இழைக்கப்படும் துன்பங் களையும், அநீதிகளையும் உலகிற்கு காட்டி யது.

தற்போது போர்நிறுத்தத்தின் எல்லா சரத்துக்களையும் மீறிய அரசு கண்காணிப் புக்குழுவினால் வகுக்கப்பட்ட எல்லைக் கோடுகளையும் மாற்றியுள்ளது. சம்பூர், மாவிலாறு ஆக்கிரமிப்பு என தொடர்ந்த

https://tamileelamarchive.com/

நடாத்தப்பட்ட திட்டமிட்ட நில ஆக்கிர மிப்புக்கள் முகமாலையிலும் தொடர்வதற்கு அரசு முயன்றுவருகின்றது. இதன் மூலம் போர்நிறுத்தத்தை கேடயமாக பயன்படுத்தி தனது அரசியல் செல்வாக்கை தெற்கில் உயர்த்துவது ஒரு உத்தி. புலிகளின் படை பலத்தையும், கனரகஆயுத வளத்தையும் சிதைப்பதுடன் தமிழ் மக்களின் மனதில் பீதியை ஏற்படுத்தி உளவியல் தாக்கத்தை ஏற்படுத்துவது மறு உத்தி.



இந்த நோக்கங்களுடன் தான் அரசு செயற்படுகின்றது என்பதற்கு கைப்பற்றிய பிரதேசங்களை தெற்கில் கேக் வெட்டி கொண்டாடியது, போலியான பிரச்சாரங் களை முடுக்கிவிடுவது, புலிகளின் பகுதிகள் மீது தொடர்ச்சியான விமானத்தாக்குதல் களை நிகழ்த்துவது, தமிழ் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் கொடூரமான படுகொலைகளை நிகழ்த்துவது போன்றன எடுத்துக்காட்டு. முகமாலையில் இருந்து ஆனையிறவையும் கைப்பற்றிவிட்டால் தனது அரசியல் செல்வாக்கை தென்பகுதி யில் உயர்த்தி அதன் மூலம் அரசியல் நன் மைகளை பெற்றுவிடலாம் என்பது தான் மகிந்தாவின் முக்கிய அவா.

ஆனால் சிங்கள அரசு தனது அரசியல் நாடகத்திற்காக தமிழ் மக்களின் மீது மேற் கொள்ளும் நடவடிக்கைகள் தான் மிக கொடூரமானது. 15,000 சிங்களமக்களின் விவ சாயத்திற்கான நீர் பிரச்சனையை மனிதா பிமான பிரச்சனையாக உலகிற்கு காட்டிய வேகமும், அதை தீர்க்க மேற்கொண்ட முயற்சிகளும் யாழ்குடாவில் தவிக்கும் மக்களின் விடயத்தில் இல்லை. 5 இலட்சம் மக்களின் உணவு, பாதுகாப்பு, போக்கு வரத்து, மின்சாரம், கல்வி எல்லாம் திட்ட மிட்டு தடுக்கப்பட்டுள்ளது. சுருக்கமாக சொல்லப்போனால் குடாநாட்டில் சிக்கியுள்ள தனது 40,000 படையினருக்காக 5 இலட்சம் மக்களையும் மனிதகேடயங்களாக்கி உள் ளது சிங்கள அரசு.

குடா நாட்டு மக்களை அச்சுறுத்தி தனது நலன்களை பாதுகாப்பதற்காக படுகொலை களை வெள்ளை வான்குழு, உந்துருளிக் குழு என்பன மூலம் நிறைவேற்றி வருகிறது சிங்களப்படை. கடந்த ஆவணி மாதம் 64 படுகொலைகளும், புரட்டாதி மாதம் 70 படுகொலைகளும் நிகழ்த்தப்பட்டதுடன் 50 இற்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் காணாம லும் போயுள்ளார்கள். இவை மட்டுமல்லாது நாடுமுழுவதும் படுகொலை செய்யப்பட்ட, காணாமல் போன மக்கள் ஆயிரத்திற்கும் அதிகம். தெற்கிலும் 50 இற்கு மேற்பட்ட தமிழ் வர்த்தகர்கள் கடத்தப்பட்டும், படு கொலை செய்யப்பட்டும் உள்ளார்கள். சர்வ தேச நாடுகளின் மன்னிப்புச்சபைகள், பொது அமைப்புக்கள் கண்டனங்கள் செய்த போதும் அரசு நிறுத்தவில்லை.

வன்முறைகளை கைவிட்டு அரசு பேச் சுக்களுக்கு திரும்பவேண்டும் என இணைத் தலைமை நாடுகள் கடுமையான அறிக்கை விட்ட பிற்பாடும் சிங்கள அரசு தமிழ் மக்க ளின் மனித உரிமைகளையோ, அவர்களின் உயிர்களையோ மதிக்கவில்லை. அப்பாவி மக்களின் அவலநிலை கருதி புலிகள் பாதையை திறக்க முன்வந்தபோதும் தனது இராணுவ நலன்களை கருத்தில் கொண்டு அரசு இழுத்தடித்து வருகிறது. அது மட்டுமல்லாது முகமாலை பாதையை மூடி விட்டு புநகரி அல்லது நாகர்கோவில் ஊடான மாற்றுப்பதைக்கான யோசனைகளையும் அல்லது கடல்வழிப்பயணத்திற்கான திட்டத் தையும் முன்வைத்துள்ளது. அரசு ஏன் முகமாலையை மூடியுள்ளது. ஏன் மாற்றுப் பாதையை திறப்பதில் ஆர்வமாயுள்ளது.

* முகமாலையை நிரந்தரமாக மூடுவதன் மூலம் தற்போது களத்தில் அரசு பெரும் வெற்றியீட்டியது போன்றதான மாயையை தக்கவைத்தல்.

* புநகரி ஊடான பாதை ஒன்று திறக் கப்படின் மனிதநடமாட்ட பகுதிகள் போன்ற வற்றை ஏற்படுத்தி புலிகளின் ஆட்டிலறி நிலைகளில் இருந்து தனது தளங்களை பாதுகாத்தல்.

* நாகர்கோவில் ஊடாக பாதை திறக்கப் படினும் புலிகளின் நிலைகளை பின்தள்ளி தனது நிலைகளுக்கான பாதுகாப்பை ஏற் படுத்தலாம் என்பது அரசின் நோக்கம். எனவே முகமாலையில் இருந்து ஆனையி றவை நோக்கி படைநகர்வு ஒன்று ஏற்படின் நாகர்கோவில் பகுதியை போக்குவரத்து பாதையை கொண்டு பாதுகாப்பது அரசின் தந்திரம்.

* கடல்வழிப்பயணத்தை பொதுமக்க ளுக்கான பாதையாக பயன்படுத்தின் படை யினருக்கான விநியோக வழிகளும் இலகு வாகிவிடும். அதாவது கடற்படை படகுகள் கடற்புலிகளின் அச்சுறுத்தலில் இருந்து தப் பிக்க சர்வதேச கடற்பரப்பை நாடவேண்டி இருக்காது.

மேலும் போர்நிறுத்தத்தில் எஞ்சியுள்ளது மக்களின் போக்குவரத்திற்கு திறக்கப்பட்ட A-9 பாதை மட்டும் தான். அதையும் மூடிவிட் டால் போர்நிறுத்த சாரங்களை முற்று முழு தாக அரசு மாற்றி அமைத்துவிட்டது என்ற பிரச்சாரத்தை தெற்கில் ஏற்படுத்தலாம். மகிந்த சிந்தனைகளில் அதுவும் ஒன்று.

அதாவது மக்களின் அவலநிலையைவிட தனது படையினரின் நலன்களும், அரசியல் நலன்களும் தான் அரசிற்கு முக்கியமானது. தமிழ் மக்களின் மனித அவலங்களை சிங்கள அரசு கருத்தில் எடுக்கவில்லை. இனவாத சிங்கள அரசுகள் காலம் காலமாக இதைத் தான் செய்து வந்துள்ளன எனவே தமிழ் மக்களுக்கு மகிந்த அரசு செய்வது ஒன்றும் எதிர்பார்க்காதது அல்ல.

ஆனால் மக்களின் மனங்களில் எழும் மில்லியன் டொலர் கேள்வி சர்வதேச சமூகம் இந்த அப்பாவி மக்களின் அவலங்களை தடுக்க என்ன முயற்சி எடுத்துள்ளன அல்லது எடுக்கப்போகின்றன என்பது தான். போர் நிறுத்தம் முழுக்க முழுக்க அப்பாவி பொதுமக்களின் பாதுகாப்பை முன்வைத்து தான் மேற்கொள்ளப்பட்டது அது சிங்கள மக்களானாலும் சரி தமிழ் மக்களானாலும் சரி. ஆனால் அந்த ஒப்பந்தம் தற்போது மக்களின் பாதுகாப்பிற்கு எவ்வளவு தூரம் ஆதாரமாக உள்ளது. சரி அதை மீறும் அரசு மீது கண்காணிப்புகுழுவினாலும் அல்லது இணைத்தலைமை நாடுகளினாலும் என்ன நடவடிக்கை எடுக்கமுடிந்தது.



https://tamileelamarchive.com/

**கடந்த வருடம் கார்த்திகையில் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள் புதிய மகிந்த அரசிற்கு அமைதிமுயற்சிகளில் நகர்வை ஏற்படுத்துவதற்கு ஒரு கால அவகாசத்தை வழங்கியிருந்தார். ஆனால் அந்த காலஅவகாசத்தில் அரசு அமைதிமுயற்சிக்கு உரிய ஒரு சிறிய நல்லெண்ண சூழலை கூட உருவாக்க முயற்சிக்கவில்லை. மாறாக அரசபயங்கரவாதத்தை தான் அப்பாவி மக்களின் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது.**

* கெப்பிட்டிகொல்லாவையில் சிங்கள மக்கள் கொல்லப்பட்ட போது முதலைக்கண்ணீர் விட்ட சர்வதேசம் இரு மாதங்களில் 134 அப்பாவி மக்களை கொன்ற சிங்கள அரசிற்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது?

* சிங்களப்படைகள் கிளைமோரில் உயிர்விட்டால் கண்டனம் எழுதும் அமெரிக்கா அநியாயமாக சிங்கள படைகளாலும் அதன் கூலிக்கும்பலாலும் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு என்ன பதிலை கூறப் போகின்றது?

* மக்களின் இயல்புநிலை வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்த ஒரே ஒரு போக்குவரத்து பாதையையும் மூடியுள்ள சிங்கள அரசின் பயங்கரவாத செயலுக்கு கண்காணிப்புக் குழுவின் பதில் என்ன?

* தனது படையினரின் விநியோகத்திற்கு பாதுகாப்பாக மனிதக்கேடையங்களாக கப்பலில் கொண்டு செல்லப்படும் அப்பாவி மக்களின் நிலை தொடர்பாக சர்வதேச மனிதஉரிமைவாதிகளின் கருத்து என்ன?

* சிங்கள அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் கொல்லப்பட்டும், இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட சிறார்களின் கல்வி பாதிக்கப்பட்டும் உள்ளது இதற்கு ஐ.நா சிறுவர் அமைப்பின் பதில் என்ன?

அமைதிப்பேச்சு ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வமாயுள்ள சர்வதேச நாடுகளும், இந்தியாவும், கண்காணிப்புக் குழுவும், நோர்வேயும் அப்பாவி தமிழ் மக்களின் இயல்புவாழ்க்கையும், பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் ஆர்வமாக இருப்பதாக தெரியவில்லை. புலிகள் தமது போராளிகளின் இயல்பு நிலையை பற்றி பேசவில்லை மக்களின் இயல்புவாழ்க்கை திரும்பவேண்டும் என்றும் அதற்கு ஏதுவாக போர்நிறுத்தம் முழுமையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றே கோரி வந்துள்ளார்கள்.

ஆனால் வெறும் வாய்சொல்லின் மூலம் சிங்கள அரசை அதன் பயங்கரவாத நடவடிக்கைகளை கைவிட்டு அமைதிவழிக்கு திரும்ப வைக்க முடியாது என்பதை முதலில் சர்வ தேச சமூகம் உணரவேண்டும். அப்படி முடியுமானால் 1987 இல் இந்திய விமானப்படை விமானங்கள் அத்துமீறி நுழைந்து உணவுப் பொதிகளை வீசவேண்டிய தேவை இருந் திருக்காது.

மூதூரில் பிரான்ஸ் தொண்டர் நிறுவன (Action Contre La Faim -ACF) பணியாளர்களின் படுகொலை, முல்லை வள்ளி புனத்தில் பாடசாலை மாணவிகள் மீதான படுகொலைகள் போன்றவற்றை அரசபடை தான் நடாத்தியது என கண்காணிப்புக்குழு தெளிவாக கூறிய பின்னரும் சர்வதேசம் வெறும் கண்டனத்துடன் நிறுத்துவது ஏன்? மனித உரிமை மீறல்களிலும், படுகொலைகளிலும் ஈடுபடும் அரசுகள் மீது ஆயுத, பொருளாதாரத்தடைகளையும், அந்த நாட்டு அரசுத்தலைவர், மந்திரிகள் மீது பயணத் தடைகளையும் முன்னைய காலங்களில் விதித்ததை மறந்துவிட்டார்களா.

* அன்டிஜான் படுகொலைகளுக்காக (Andijan massacre) உபெகிஸ்த்தான் (Uzbekistan) அரசு மீது ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரத்தடை விதித்திருந்தது.

* ரியான்மன் சதுக்கத்தில் (Tiananmen Square massacre) நிகழ்ந்த படுகொலைகளுக்காக அமெரிக்கா சீனா மீது பொருளாதாரத்தடையை விதித்திருந்தது.

* சரஜீவோவில் (Sarajevo) முஸ்லீம் மக்களை படுகொலை செய்தமைக்காக ஐ.நா யுக்கோஸ்லாவாக்கியா மீது பொருளாதாரத்தடையை விதித்திருந்தது.

* மெற்றாபீல்லான்ட் (Matabeleland) இல் 20,000 மக்களை படுகொலை செய்தமைக்காக சிம்பாபே அரசுத்தலைவர் றொபேர்ட் முகாபி (Matabeleland) மீது ஐரோப்பிய ஒன்றியம் பயணத்தடையை விதித்திருந்தது.

அதாவது அரசுகள் மீது தடைகளையும் அழுத்தங்களையும் இடுவது ஒன்றும் உலகில் நடக்காதது அல்ல. தற்போது சிங்கள அரசுமீது என்ன நடவடிக்கைகளை சர்வதேசம் பிரயோகிக்க போகின்றது என்பதில் தான் அமைதி முயற்சி தங்கியுள்ளது. ஜெனிவா பேச்சுக்களின் போது அரசினால் கூறப்பட்டவை எதுவுமே நிறைவேற்றப்படவில்லை என்பதுடன் மாறாக தமிழ் மக்களின் மீது அதிக அளவில் படுகொலைகளையும் வன்முறைகளையுமே அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது.

எனவே பேச்சுவார்த்தை மேடையில் இருதரப்பையும் ஏற்றமுனைவதை விட முதன்மையானது போர்நிறுத்தத்தை அரசு நடைமுறைப்படுத்தி தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அரசபயங்கரவாத நடவடிக்கைகளையும் கைவிட வைப்பதாகும் ஆகும். அது தான் அமைதி முயற்சிக்கான ஆரம்ப படிக்கல்லாகும்.

கடந்த வருடம் கார்த்திகையில் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் புதிய மகிந்த அரசிற்கு அமைதிமுயற்சிகளில் நகர்வை ஏற்படுத்துவதற்கு ஒரு கால அவகாசத்தை வழங்கியிருந்தார். ஆனால் அந்த கால அவகாசத்தில் அரசு அமைதிமுயற்சிக்கு உரிய ஒரு சிறிய நல்லெண்ண சூழலை கூட உருவாக்க முயற்சிக்கவில்லை. மாறாக அரசபயங்கரவாதத்தை தான் அப்பாவி மக்களின் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது.

சர்வதேச நாடுகள்கூட அரசை அமைதி வழிக்கு திரும்பவைக்க ஒரு காத்திரமான பங்களிப்பை ஆற்றவில்லை என்பது தான் தமிழ் மக்களின் ஆதங்கம். எனினும் அழுத்தங்களின் மூலம் அரசை சர்வதேசம் பணியவைக்கமுடியும் என்பதும் அதற்கான' இறுதிச்சந்தர்ப்பமாகவே இணைத்தலைமை நாடுகளின் தற்போதைய முயற்சியும் நோக்கப்படுகின்றது. எனவே இந்த இறுதிச் சந்தர்ப்பமும் சர்வதேசத்தால் தவறவிடப்படின் தமிழ் மக்கள் தம்மையும் தமது மண்ணையும் காப்பாற்றவும், தமது உரிமைகளை வென்றெடுக்கவும் ஆயுதப்போராட்டத்தை தீவிரப்படுத்துவதை தவிர மாற்றுவழிகள் இருக்கப்போவதில்லை.

https://tamileelamarchive.com/

# உளப்போர் புரியும் நிழற்போர்

காண்டீபா

ஒரு விடுதலைப் போராட்டம் யுத்த காலத்தைவிட சமாதான காலத்திலேயே மூச்சிழந்து போவது உலக போராட்ட வரலாறுகள் எமக்கு உணர்த்துகின்ற பாடமாகும். பாலஸ்தீனம், சூடான், அயர்லாந்து போன்ற போராட்ட வரலாறுகள் இதற்கு முன் உதாரணங்களாகும்.

இலங்கைத்தீவில் 2001ல் உடன்பாட்டிற்காக வந்த படைக்கள யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்தது ஆனால் படைக்கல யுத்தத்திற்குப் பதிலாக நிழல் யுத்தத்தை ஆரம்பித்து வைத்தது. இவ்நிழல் யுத்தத்தின் நீட்சியே 2005ன் பிற்பகுதியில் அது உக்கிரமடைந்து நிழல்ப்போர் என்னும் போது அங்கீகரிக்கப்பட்ட இரு அரசுகளிடையோ அல்லது அமைப்புகளிடையேயான படை நகர்த்தலின்றி அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியான மறைமுக யுத்தமாகும். இங்கு தாக்குதல்கள் உரிமைக் கோரப்படும் இரு தரப்பினதும் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் படுகொலை செய்யப்படுவார்கள். தேடுதல்கள், ஆள்கடத்தல்கள், குண்டு வீச்சுக்கள், சிறிய சிறிய மோதல்கள் என இதன் அவலம் நீளும்.

வலிமையான படைக்கள யுத்தத்தின் விளைவைவிட நிழல் போரின் விளைவுகளே விடுதலை அமைப்பை, விடுதலை அமைப்பு சார்ந்து நிற்கும் மக்கள் கூட்டத்தை சின்னாபின்னமாக்கும். ஏனெனில் படைக்கள யுத்தத்தில் எதிரி ஒருவனே அவனை வெல்ல வேண்டும் என்ற ஓர்மம் மக்களை வழிநடத்தும் அராஜகத்திற்கு எதிராக போராடி வெல்வதே எமக்கான ஒரே வழி எனவே இங்கு போராடினால் தான் நாம் உயிர்வாழ முடியம். ஆனால் நிழற்போர் புற்று நோய் போன்று விடுதலை வேண்டிநிற்கும் சமூகத்தையும், அச்சமூகத்தின் அபிலாசைகளையும் ஒன்றாக அழிக்கும் வல்லமை பொருந்தியது.



இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பிரதேசங்களில் நிகழும் நிழற்போரின் அவலங்கள் எண்ணற்றவை. குண்டுவெடிப்புக்கள் படுகொலைகள், சிறுவர் கொலைகள், பாலியல் வல்லுறவுகள், ஆட்கடத்தல்கள், தேடுதல் வேட்டைகள், உடற்பரிசோதனைகள், வீதியோர துப்பாக்கி முண்டங்களின் வெருட்டல்கள் என்பவற்றால் மேலெளும் அந்தப்பயம், இராணுவ வன்முறை பற்றிய ஏக்கம் மக்களின் சாதாரண மனமகிழ்ச்சியில் இருந்து மனநிலை பிறழ்வு நடத்தைக்கு இட்டுச் செல்கின்றது. இவ்மனப் பிறழ்வின் வடு தொடருமானால் இராணுவகட்டுப்பாட்டு பகுதியினுள் வாழும் மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

குறிப்பாக குடாநாட்டில் நவிண்டில், அல்லைப்பிட்டி, புளியங்கூடல் எனத் தொடரும் படுகொலைகள் என்றும் மன்னாரின் வங்காலைவரை விரிந்து செல்கின்றது இன்னும் நாளுக்கு நாள் கருத்தரிக்கும் செம்மணிகளும், பிரசவிக்கும் செம்மணிகளும் எம் கண் முன்னே தேடுதல் வேட்டைகள் ஆள்கடத்தல்கள், சுற்றிவளைப்புக்கள், உடற்பரிசோதனைகள் எனத் தொடரும் பல வன்முறைகள் குடாநாட்டின் இயல்பு நிலையை முற்றாகப் பாதித்துள்ளது.

துப்பாக்கிகளால் நிறைந்துள்ள வீதிகளில் கால்வைக்கவே பதற்றம். நான்கு மணியுடன் மூடப்படும் கடைகள், வெறிச்சோடும் வீதிகள் கூடிநின்று கதைக்கமுடியாத அவலம், இரவு நேரங்களில் வீட்டுக்கதவுகளை திறக்கமுடியாது பிரசவம் என்றாலும் அவசரமாகச் செல்லமுடியாத அவலம் எனச் சோகம் நீண்டு செல்கின்றது.

நாளும் பொழுதும் துப்பாக்கி சுவர்களுக்கு நடுவாலேயே எமது பயணம் நடைபெறுகின்றது. எமது நறுமணம் எதற்கும் அந்த இருண்ட முகங்களே எமக்கு முன் காட்சியளிக்கிறது வீதிகளில் என்ன எப்போது எப்படி என்று எவருக்கும் தெரியாது. தெருமுண்டங்களின் முனகல் அசைவாக மாறும் போது அவ்வூரேகலமாக மாறும் கனவிலும் கறுத்த அவ்இராணுவ முண்டத்தின் உருவமே எம்முன்.

கனவில் வரும் இவர்களே நியத்தில் எம் தாய் நிலத்தின் மூலை முடுக்குகள் எல்லாம் தேடுகிறார்கள் அங்கு எம் நிலமகள் அம்மணமாக்கப்பட்டு அங்கம் அங்கமாக பரிசோதிக்கப்படுவதுடன் கயவர்களால் கற்பழிக்கப்படுகின்றாள்.

எனவே இந்நிலை மாற்றமடைய வேண்டுமெனின் துரிதகதியில் பனிப்போர் முடிவிற்கு கொண்டு வரப்படவேணடும். இப்பனிப்போரின் முடிவு மீண்டும் ஒரு சமாதானப் பேச்சிற்கு வழிவகுக்குமானால் இது அவலத்தின் உச்சத்திற்கே எம்மை இட்டுச் செல்லும் எனில் சமாதானப் பேச்சு என்பது வல்லரசுகளின் அரசியல் அனுகுண்டை மீண்டும் நாம் ஏற்க முடியாது ஏனெனில் உலக போராட்ட வரலாற்றில் எந்த ஒரு விடுதலைப் போராட்டமும் பேச்சு மேசையில் நீதியான கௌரவமான தீர்வை பெற்றுக்கொண்டதாக வரலாறு நம்பிக்கையூட்டவில்லை. இல்லை பேச்சுகள் போரின் உக்கிரத்தை குறைக்குமே தவிர தீர்வைத்தராது தீர்வு என்பது அல்லது விடுதலை என்பது விடுதலை வேண்டி நிற்கும் மக்கள் கூட்டத்தால் அடையப்படவேண்டிய இலக்காகும். இவ் இலக்கிற்காக எழுச்சியடைந்த எம் மக்கள் தொடரும் மாபெரும் புரட்சியின் பங்காளராவதன் மூலமே பனிப்போரை முடிவிற்கு கொண்டு வருவதுடன் எம் நெற்றிக் கண் முன்னே தெரியும் இறுதி வெற்றியைத் தீர்மானிக்க முடியும்.

https://tamileelamarchive.com/

**மூத்த அரசியல் அறிவியலாளரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான ஈழவேந்தன் அவர்கள் பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பிரயாணத்தை மேற்கொண்டு ஐரோப்பாவில் வாழும் ஈழத் தமிழ் மக்களைச் சந்தித்து நிலைமைகளை விளக்கி வருகிறார். எரிமலை சஞ்சிகைக்காக அவருடன் கலந்துரையாடியபோது.**



**சிங்கள பேரினவாத அரசு மிகப் பெரிய இன அழிப்புப் படுகொடுலையை மேற் கொண்டுவருகின்றது; இந்த தமிழின அழிப்பு மிகவும் திட்டமிடப்பட்டு செய்யப்படுகிறது. இவ்வின அழிப்பை இந்தியா எவ்வாறு புரிந்து கொண்டிருக்கின்றது. நீங்கள் இந்தப் பயணத்தின்மூலம் மிகவும் துன்பகரமான நிலையை எவ்வாறு வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றீர்கள், எவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றீர்கள் என்பது பற்றிப் பேசுவீர்களா எனக்கேட்டபோது...**

இதற்கு விடை சொல்ல வேண்டியது என்னுடைய பொறுப்பு. இன்று அழிவின் விளிம்பில் தமிழினம் வாழ்கின்றது. இந்தச் சொற்களை அடிக்கடி பாவித்தாலும் தற்போது தமிழினத்தை பூண்டோடு அழிக்கும் முயற்சி நாளும், பொழுதும் நிமிடத்திற்கு நிமிடம் நடந்து கொண்டிருக்கிறது. தனியே யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை என்றில்லாமல் தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இப்படுகொலை நடைபெறுகிறது. அத்தோடு கொழும்பிலும் நடைபெறுகிறது. நீர்கொழும்புப் பகுதியில் எந்த ஒரு இளைஞனின் நிலையும் கேள்விக்குறியே இன்று தமிழராய்ப்பிறப்பதே முதற் குற்றம். தமிழ் இளைஞராய் இருந்தால் இரட்டிப்புக்குற்றம். தாடி மீசை இருந்தால் அல்லது அவரது உடையிலே ஏதும்

https://tamileelamarchive.com/



வளக்கத்திற்கு மாறான தன்மை இருந்தால் அவர் புலி. அல்லது புலி ஆதரவாளர், அவர்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற முறையில்தான் வெறிகொண்ட செயல் நடைபெறுகின்றது. நூற்றுக்கணக்கிலே ஒரே நாளில் சாகடிக்கின்ற போது உலகின் கவனத்தை ஈர்க்க வாய்ப்பு இருக்குமோ தெரியவில்லை. அதனால், 37, 38 என முடிக்கிறார்கள். அதனால் உலகின் கவனத்தை ஈர்க்க வாய்ப்பில்லைப் போலும். ஆனால் அங்குதான் ஆபத்து இருக்கு, குறிப்பாக இளைஞர்களை யுவதிகளை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி சாகடிக்கிறார்கள், நீங்கள் வணிகர் என்றால் உங்களைச் சாகடிப்பார்கள். நீங்கள் புலிகளுக்கு பணம் கொடுக்கிறீர்கள், நீங்கள் ஓட்டோ சாரதி என்றால் விடுதலைப்புலிகளிடம் பயிற்சி எடுத்துள்ளீர்கள்; பல்கலைக்கழக விரிவுரையாளர் என்றால் நீங்கள் தமிழர்களுடைய வரலாற்றை சொல்லிக் கொண்டிருப்பீர்கள் ஆகவே ஒழிக்கப்பட வேண்டும். நீங்கள் நீதித்துறையில் நேர்மையாக நடந்தால்... அச்சுறுத்தல். சிறிநிதி நந்தசேகரனுக்கு நடந்த அச்சுறுத்தல் (யாழ்மாவட்டநீதிபதி) என் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை மறித்து தெருவிலே எமது பொருட்களை கவிட்டுக் கொட்டி, "நீ பெரிதா, நான் பெரிதா?" என்று தெருவிலே நிற்கும் ஒரு இராணுவவீரன் எம்மை அச்சுறுத்தி எமக்கு அவல நிலை ஏற்படுத்துவது, பாதுகாப்போடு வாழ்ந்த எமது யோசப்பரராசசிங்கத்தை தேவாலாயத்தில் வைத்து சாகடித்தது எமது தேசியப்பட்டியலில் இடம் பெற்றிருந்தது. திரு. விக்கினேஸ்வரனை அவர் பணிபுரியும் வங்கியின் வாசலிலே வைத்து சாகடித்தது, அதற்கு முன்பு அரசியலிலே ஈடுபடாத கல்வியில் மாத்திரம் ஈடுபட்ட ஐந்து மாணவர்களை சாகடித்தது. சுடரொளி நிறுவர் சாகடிக்கப்பட்டது. யாழ்ப்பாண உதயன் போன்ற பத்திரிகை அலுவலகத்தில் வெறியாட்டம் ஆடியது கொழும்பில் என எத்தனை கொடுமைகள். இதைவிட கல்வி வட்டாரம், வணிகவட்டாரம், பல்கலைகழக வட்டாரம், ஊடக வட்டாரம், சாதாரண விவசாயிகள், மீனவர்கள், கத்தோலிக்க குருமார்கள் (அல்லைப்பிட்டி) என்று யாரை எந்தப்பகுதியை விட்டு வைத்தார்கள். என்று பார்க்க வேண்டும்; எல்லாவற்றையும் விட வெளிச்சம்போட்டுக்காட்ட வேண்டியது பேசாலை நிகழ்ச்சி. அங்கு மக்கள் தங்கி இருந்த தேவாலயத்தில் அவர்களை கோயிலுக்குள் வைத்து கொலை செய்தமை. அதை அங்குள்ள பேராஜர் ராஜப்பு யோசப் அவர்கள் போப்பாண்டவருக்கு கொண்டு சென்றமையால் அது இணையங்களில் முக்கியத்துவம் பெற உலக அரங்கிலே ஒலிக்கின்ற சிக்கலாக மாறி உலகிற்கு வெளிக்காட்டப்பட்டதாகியது. அதை அவர் செய்திராவிட்டால் அதைக் கூட மூடி மறைத்திருப்பார்கள்.

இதில்தான் வேதனை மிக்க ஒரு நிகழ்ச்சி திருகோணமலையில் ஒரு இளைஞன் சாகடிக்கப்பட்டது. அவரது தகப்பனார் பிரபல வியாபாரி. அவரது எட்டு கடைகள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது. இப்போது அவர் கொழும்பில் தஞ்சம் அடைந்துள்ளார். அவர் செய்த பிழை உயிர்த்துடிப்புடன் விடுதலைப்புலிகளுக்கு பணியாற்றினார் என்பதேயாகும். அதைவிட இஸ்லாம் தழுவிய எமது அருமையான உயிரினை உடன் பிறப்புக்களுக்கும் அழிவுதான், அது மூதூராக இருந்தாலும் சரி கல்முனையானாலும் சரி, பொத்துவிலானாலும் சரி.

ஆகவே தமிழ் பேசுகின்ற மக்கள் எந்நிலையில் இருந்தாலும்

https://tamileelamarchive.com/



எப்பகுதியில் இருந்தாலும் முடித்துக்கட்டும் நிலைக்கு அரசு வந்துவிட்டது. முன்பும் நடந்திருக்கிறது. 83ம் ஆண்டு நடைபெற்ற இனப்படுகொலை தெரியும் அதைவிட 95ல் யாழ்ப்பாணத்தை கைப்பற்றி வீம்புபேசிய ரத்வத்தையின் செயற்பாடும் தெரியும். அவருக்கு பரிசு கொடுத்த மருமகள் செயற்பாடும் தெரியும். இவ்வாறான செயல்கள் யாவற்றையும் நான் குறைத்து மதிப்பிடவில்லை. அவையெல்லாவற்றையும் நான் மறந்து விடவில்லை. ஒரு பெண்ணின் வயிற்றைக் கிழித்து தமிழ்ப்பிள்ளை உருவாகக்கூடாது என அப்பிள்ளையை வீசிய காட்சி, பாணந்துறை குருக்களை கப்போடு கட்டி பெற்றோலை ஊற்றி எரித்து வீசியகாட்சி, அக்கதை பிரபாகரனுக்கு சொல்லப்பட்டதன் விளைவு குழந்தைக்கு ஏற்பட்ட தாக்கம், இவையெல்லாம் நடந்தவை. நாம் மறந்துவிடவில்லை. 1977 ல் ஜே. ஆர் சொன்னார். "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" என்று நாட்டின் குடியரசுத் தலைவர் தமிழ் மக்களை நாட்டு மக்கள் என்று சொல்லவில்லை. சிங்களவர் தான் தன் மக்கள் என்று சொன்னவர். இதன்பின் 83 இனப்படுகொலை நடந்தது உங்களுக்குத் தெரியும், அதுதான், உலகவரலாற்றில் இனி மேல் இந்த மண்ணில் வாழமுடியாது என்று தமிழர் வெளியேற்றப்பட்ட நிகழ்ச்சி. ஆகவே 83 தொடங்கிய இந்நோய் பல்வேறு வடிவத்திலே பரவி யாழ்ப்பாணத்திலே இருந்து மட்டும் ஏழு லட்சத்திற்கும் மேலான மக்கள் வெளியேற்றப்பட்டுவிட்டார்கள். ஐந்து லட்சத்திற்கு குறைந்தவர்கள் தான் வாழ்கிறார்கள்.

எமது மதிப்பீட்டின்படி ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட இராணுவம் இலையான் மொய்த்த நிலையில் இருக்கிறது, ஓரிடத்திற்கு போனால் உயிருடன் திரும்பிவர முடியாது என்ற நிலைக்கு செயற்படுகிறார்கள். மாவை சேனாதி ராசா தொடுத்த வழக்கின் பிரகாரமாக உயர்பாதுகாப்பு வலயத்தினுள் மக்கள் மீண்டும் திரும்பி வரலாம் என்ற தீர்ப்புக் கூறியும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதையொட்டி நான் மகிந்த ராஜபக்சவோடு தொடர்பு கொண்டு தனித்து இயங்குகின்ற சுதந்திரத்தோடு இயங்குவதுதான் நீதிமன்றம். நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நீங்கள் நடைமுறைப்படுத்துவீர்களா என்று கேட்டபோது


"அதாவது நான் விட்டுக் கொடுத்து மக்களை உள்ளேபோக விட்டால் புலிகள் அனைவரும் போய்விடுவார்கள்" என்றார். நான் சொன்னேன், புலிகள் தான் தமிழர் தமிழர் தான் புலிகள் என்று வெளிப்படையாக சொல்லுவது போல் இருக்கிறது என்று; அதற்கு அவர் பதில்சொல்லவில்லை. படித்த படிப்பு வீணாகப்போகுமளவிற்கு, சுதந்திரமாய் இவர் கூறுவது நீதிமன்றம் அதனுடைய கட்டளைக்கு அரசு கீழ்பணிய வேண்டும். நீங்கள் இதற்கு என்ன விளக்கம் சொல்லுகின்றீர்கள் என்று கேட்டபோது, அவர் பதில் ஏதும் சொல்ல மறுத்தார். அவரை நான் சுவைபட சொல்வதென்றால் குடியரசுத்தலைவர் அல்ல கொடிய அரசுத்தலைவர் அவர் யாழ்ப்பாணத்திலே சர்வதேச மாணவர் மன்றக் கட்டிடம் எரிக்கப்பட்டது; அன்று கஜன் போன்றவர்கள் இருந்திருந்தால் அவரும் சேர்ந்து எரிக்கப்பட்டிருப்பார். நல்ல வேளையாக அவர் தப்பியது.

அதைவிட வன்னியிலே குண்டு வீசியது இதையும் நான் கேட்ட போது அதுகாட்டில் வீசியதாக சொல்கிறார். காட்டில் வீசினால் என்ன நாட்டில் வீசினால் என்ன மருத்துவமனையில் வீசினால் என்ன இது செய்தது மன்னிக்கமுடியாத குற்றம். நான் அவருடன் வாதங்களை தொலைபேசியிலேயே நடத்தினேன். இதைவிட வெற்றிலைக்கேணியில் தாக்குதல் நடத்திய போது நீங்கள் எங்களுடன் மோதவருகிறீர்கள் என்று நான் சிரித்துக் கொண்டே சொன்னேன்; நீங்கள் எங்களைக் காதலிக்க வரவில்லை; எங்களுடன் தேனீர் அருந்தவரவில்லை. சிங்களப்படைகள் எங்கள் மண்ணிலே கால் கொண்டுள்ள வரைக்கும் நாம் எதிர்த்துத்தான் தீருவோம் என்றும் தற்போது காப்பு நடவடிக்கை என்றும் சொன்னேன் அதற்கு அவர் "என்ன ஈழவேந்தன் இது உங்கள் மொழியாய் இல்லை. தமிழ்ச் செல்வன் மொழியாய் உள்ளது" என்று சொன்னார். நான் சொன்னேன் தமிழ்ச் செல்வன் பேசினால் என்ன, ஈழவேந்தன் பேசினால் என்ன, பிரபாகரன் பேசினால் என்ன, எந்தத்தமிழன் பேசினாலும் அதாவது தன்மானம் உள்ள தமிழன் இந்த மொழியைத்தான் பேசுவான். எங்கள் மண்ணை நீங்கள் எந்நிலையிலும் கால் கொள்ள விட மாட்டோம்.

........................................................................ இன்னும் வரும்

கலந்துரையாடியவர்கள்: எரிமலை சஞ்சிகைக் குழுமத்தினர்.

https://tamileelamarchive.com/



# வருத்தப்படுவோம்!

ஜனநாயகம் - மனிதஉரிமை என்ற
பொதுமொழிகளில் பேசியபோது,
எங்கள்மேல் காட்டுமிராட்டித்தனம்
செய்தீர்கள்!
மறுதலிக்க வழியின்றி
கையாலாகாதவராய் இருந்தோம்!

வீரம்- அவதரித்து வந்ததன்
விளைவால்
உலகே எங்களை
உச்சரிக்கச் செய்தோம்!
தமிழ் என்ற மொழியும்
தமிழன் என்ற இனமும்
உலக மூலைகளுக்கு உணர்த்தப்பட்டது!

வலிதாங்க முடியாமல்
கைகுலுக்க வந்தீர்கள்!
அப்போதும் எங்களை
புரிந்துகொள்ள முடியவில்லை உங்களால்!

தலைமைக்கு வரைவிலக்கணம்
எழுதப்பட்ட எங்கள் மண்ணில்
இன்று பொறுமைக்கு எழுதப்படுகிறது!

மீண்டும் துள்ளுகிறாய்
எங்கள் கண்களைத் தோண்டியவனே
உலகின் கண்களைக் கீறப் புறப்பட்டிருக்கிறாய்
மௌனத்தை பிழையாய் புரிந்துகொண்டு
தலைகால் தெரியாமல் குதிக்கிறாய்!
உனது புத்தி பேதலித்துவிட்டது
என்பது தெளிவாய்த் தெரிகிறது!
உமக்காக நாமே வருத்தப்படும்
நாளொன்று வரப்போகிறது!

ந. ஹேமராஜ்



ஒளிப்படம்: தி.தவபாலன்

https://tamileelamarchive.com/

# தொங்குநிலை மகிந்தரும் தாங்குநிலைத் தமிழரும்

க.வே.பாலகுமாரன்

மகிந்தருக்குக் கிடைத்திருக்கும் அவகாசம் குறுகியது. அதற்குள்ளே மரம் தாவும் மந்திபோல மகிந்தர் பல தொங்குநிலைகளில் (சிறிய கட்சிகள் இணைப்பு, தேசிய அரசாங்க அழைப்பு, நோர்வேக்குத் தூது) செயற்பட்டுத் தமிழ் மக்களின் முதுகெலும்பை உடைக்கத் துடியாகத் துடிப்பதன் விளைவே இன்றைய நிகழ்வுகள். இற்றைவரையிலான அனைத்து அடக்குமுறைகளுக்கும் முகம் கொடுத்த எம்மினிய மக்கள் தமது தாங்குநிலையை மீண்டும் நிரூபிப்பர். விடுதலைப் போராட்டமென்பது வெற்றி /தோல்வி என சுருக்கி வகைப்படுத்தக் கூடியதல்ல. அது எதிரியை விடவும் போராடும் சக்தியால் எத்தனை நிமிடம் கூடுதலாகத் தாக்குப்பிடிக்க முடியுமென்பதிலேயே தங்கியுள்ளது.



தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு முக்கிய பரிமாணமாக பரிணாம அரசியல்போக்கின் விளைவாக அரங்கேறிய போர் நிறுத்த + அமைதிப்பேச்சுக் காலகட்டம் தனது வேலையை முடுக்கிவிட்டுள்ளது. இதன் உரிய உச்ச விளைவுகளுக்கு எம் மக்கள் இப்போது முகம் கொடுக்கின்றனர். அதியுச்ச குழப்பமே இக்கட்டத்தின் இயல்பு. பல்வேறு நிலைகளாக நிகழ்ச்சித் திட்டங்களாக இக்குழப்ப மயக்கநிலை மக்கள்முன் விரிகின்றது. விடுதலையை அல்லது மாற்றத்தினைத் தடுக்கமுனையும் அனைவருக்கும் வரலாறு வழங்கும் இறுதி வாய்ப்பேயிது. எனவே மகிந்தர் மட்டு மல்ல, பிராந்திய சருவதேச சக்திகள் அனைத்துமே ஆலாகப் பறந்து பரபரப்பாகச் செயற்படும் காலமிது. போர்நிறுத்தம் இருக்க போர் நடக்கும் நிலை போர் நிறுத்தத்தினைக் கண்காணிப்போர் போரைக் கண்காணிக்கும் நிலை போர்க் காலம் போலவே அமைதிக் காலத்திலும் அழிவுத் தீயில் மக்கள் கருகும் நிலை. என பரவலாக விரியும் இந்நிலை விடுதலைக்குப் போராடுவோரிடம் எதிர்பார்ப்பது அவதானம்; தெளிவு; விவேகம்; நுண் உணர்திறன் என்பனவே.

பத்துத்தலை இராவணன் போல பத்து முகம் உலகிற்குக் காட்டித் தனது உண்மை முகத்தினை மறைக்க மகிந்தர் எடுக்கும் முயற்சிகள் கூர்மையாக அவதானிக்கப்பட வேண்டியவை. காலம் காலமாகச் சிங்களத் தலைமைகள் சுமந்துவந்த 'திருப்பணியை முடித்துவைக்கத் தன்னாலான பணியைச் செய்ய மகிந்தர் முனைகின்றார். மகிந்தருக்குள்ளே மறைந்திருப்போர் யாரென்று பாருங்கள்... தாய் நிலத்தினைப் பறித்த டி.எஸ், உடன்பாடென உடன்படவைத்து ஏமாற்றிய பண்டா, இராணுவத்தை ஏவிய சிறிமா, குள்ள நரித்தனம் செய்து கருவறுக்க முயன்ற ஜே.ஆர், சிரித்தே கொன்ற பிறேமா, ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி சந்திரிக்கா என எல்லாரையும் உள்வாங்கிய சிங்கள வெறியனாக மகிந்தர் உலாவருகிறார். "நாக்கில்நறும் தேனும் நெஞ்சில் நீக்கரிய நஞ்சும் கொண்ட.... சிங்களத் தலைமைகளில் தனியிடம் பெறும் மகிந்தர் செஞ்சோலை வளாகக் கொன்றொழிப்பின் பின் செய்தியாளரிடம் கூறினார். "என்னுடைய வான்படை நினைத்திருந்தால் மருத்துவமனைகளுக்குக் காயமுற்றோரைக் காவிச் சென்ற வாகனங்கள்மீது குண்டுவீசித் தாக்கியிருக்க முடியும். ஆனால் பெரும் தன்மை காரணமாக அவ்விதம் செய்யவில்லை".

இருமுகம் காட்டும் சிங்களத் தலைமைகளைத்தான் இதுவரை உலகமும், எம் மக்களும் கண்டிருக்கின்றார்கள். ஆனால் ஒரேவேளையில் பலமுகம் காட்டும் மகிந்தர் எதிர்பாராத திருப்பங்களையெல்லாம் எல்லாருடைய நிகழ்ச்சி நிரல்களிலும் ஏற்படுத்துகின்றார். இனவெறியின் தீவிரத் தன்மையை வெளிப்படுத்த விமல் வீரவன்ச முகம், இணக்கப்பாட்டிற்கும் சமரசத்திற்கும் சகோதரர் பசிலின் முகம், இராசதந்திரமொழியில் மாய்மாலம் பண்ண பாலிதவின் முகம், இராணுவத் தீர்வைக் காணும் கடும்போக்குக்கு சரத் பொன்சேகா முகம், இவை யாவற்றினையும் விட எப்போதும் சிந்தனையிலும், கவலைப்படுவது போலவும் தோற்றமளிக்கும் காட்சியோடு கையில் மலர்த் தட்டோடு பன்சலவிற்கு செல்லும் பதவிசான மகிந்தரின் சொந்தமுகம். இப் பல முகங்களுக்குள் ஒளிந்திருக்கின்றது மகிந்தரின் உண்மையான கோரமுகம். இக் கோரமுகம் படிப்படியாக வெளிப்படுவதால் இத் தீவில் பீறிட்டுப் பாய்வது தமிழர் குருதி. தென்னாசியப் பிராந்திய ஒழுங்கிலும், சருவதேச ஒழுங்கிலும் மகிந்தர் ஏற்படுத்தும் தாக்கங்கள் விளைவிப்பது புதிய நெருக்கடி. சருவதேச ஒழுங்கின் உலக மயமாக்கல் பொருண்மிய நிலையின் காவலர்களான மேற்குலகிற்கோ தமது நீண்டகால நட்பு நாடொன்றினை எவ்விதம் கையாள்வதென்கிற இக்கட்டு. இந்தியாவிற்கோ எதிர்பாராத அதிர்ச்சி: இப்பிராந்தியத்தில் தனது உண்மை நண்பன் யார் என்பதை மீளாய்வு செய்யும் நெருக்கடிநிலை. இவ்வாறாகத் தனது செயற்பாடுகளால் மிகக் குறுகிய காலத்திற்குள்ளே மகிந்தர் தோற்றுவித்திருப்

https://tamileelamarchive.com/

பது எத்தகைய நிலையென்பதை சண்டே ரைம்சின் நடுப்பக்கக் கட்டுரையாளர் சுர ணிமால மதிப்பிடுகிறார். 'தற்போதைய நிலை மிகப்பயங்கரமான கதைகளை உலக மெங்கும் உருவாக்கி விடுகின்றது. முத லீட்டாளர் பதுங்கிமறைவிடங்களில் நிலை யெடுக்கின்றனர். எவ்வளவுதான் பூசி மெழு கினாலும் சிறீலங்கா ஒரு பெரும் போரில் சிக்கியிருப்பதை மறைக்க முடியவில்லை. இவையாவும் சிறீலங்காவை ஒரு மினி றுவாண்டாவாக மாற்றிவிட்டது.

மகிந்தரின் பகுத்தறிவற்ற இம் மூடப் போக்கின் மூன்று பாரிய விளைவுகள் இத் தீவில் பாரிய மாற்றங்களை மிக விரைவில் ஏற்படுத்தும் என்பது சகலராலும் உணரப்படு கின்ற விடயம். பல நூற்றுக்கணக்கில் கொல் லப்பட்டும் இலட்சக் கணக்கில் இடம்பெயர்ந் தும் பொருண்மிய முற்றுகை நெருக்கடிக் குள்ளும் வாழும் எம் மக்கள் தாம் எதிர்நோக் கும் மிகப்பாரிய போர் நெருக்கடிக்குமுகம் கொடுப்பது பற்றிச் சிந்திக்கும் வேளையிது. கட்டுமீறிச் செல்லும் சிறிலங்காவின் நிலையை எவ்விதம் கையாளவேண்டுமென் கிற இறுதி முடிவினைச் சருவதேசம் எடுக்க வேண்டிய வேளையிது. பிராந்திய மேலான ராகவும் பெரிய அண்ணனாகவும் கருதிச் செயற்பட்ட இந்தியாவிற்கோ (எது நடக்கக் கூடாதென்பதற்காக ஈழத்தமிழரைப் பலிக் கடாவாக்கும்' கொள்கையினைக் கடைப் பிடித்ததோ அது பயனற்றதாகிய நிலையில்) தனதுதென்முனை பாதுகாப்பற்றதாக ஒரு கொதிநிலை நோக்கி நகர்வதைத் தடுக்கும் வேளை இது.

முதலில் சருவதேசத்தின் கதையை நோக்கலாம். கடந்த ஓகஸ்ட்மாதம் முழுவ துமே சருவதேசம் மிகக் கடுமையான தொனி யில் தனது அதிருப்தியைக் காட்டிய காலமா கின்றது. நோர்வே மிகத் தெளிவாகப் பல வழிகளிலும் தனது அதிருப்தியை வெளிப் படுத்தியது. நோர்வேயின் அமைதித் தூதரின் தூதரான ஹான்சன் போவர் யப்பானியப் பிரதிநிதி அகாசியைத் தொடர்புகொண்டு புலிகளைத் தடைசெய்யும் யப்பானின் முடிவை இக்கட்டத்தில் நடைமுறையிலிடு வது பொருத்தமற்றது என வலியுறுத்திய தாகச் செய்திகள் வெளியாகின. ஓகஸ்ட் 23ஆம் திகதி வழமைக்கு மாறான ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஏனோதானோ வென்று செயற்பட்டதாகக் கூறப்படும் இந்தியா தனது வெளிவிவகாரச் செயலர் சியாம் சரணை ஒஸ்லோவிற்கு அனுப்பியது. தனது பெருத்த கவலையை அங்கு பகிர்ந்துகொண்டதாம். அடுத்து என்ன செய்யவேண்டும் என்பது பற் றியும் விவாதித்ததாம்.

அமெரிக்காவின் தென்னாசிய, மத்திய ஆசியப் பகுதி உதவிச் செயலர் ஸ்ரீம்மான் அவசரமாகக் கொழும்பிற்கு பறந்துவந்து பொறுப்புள்ள அரசாங்கமென்கிற வகையில் எவ்விதம் மகிந்தர் இயங்கவேண்டுமென பாடமெடுத்தாராம். ஓகஸ்ட் 16ஆம் திகதி கோபிஅனான் தொலைபேசியில் மகிந்த ரோடு தொடர்பை ஏற்படுத்தி 25 நிமிடங் களுக்குத்தனது கரிசனையை, கவலையை பகிர்ந்து கொண்டார். சருவதேச செஞ் சிலுவை, கொழும்பிலுள்ள இராசதந்திரிகள், இணைத் தலைமைகளின் பிரதிநிதிகள், இலங்கைக்கு உதவி வழங்கும் அனைத்துச் சருவதேச தரப்புகளுமே "போதும்! மகிந்தர் ஐயா போதுமென" போதித்தார்கள். இவற் றைவிடச் சருவதேசம் ரணிலை எதிர்காலத் தில் பயன்படுத்தத்தக்க வகையில் கையாள் வதும் மகிந்தருக்குப் பெரும் நெருக்கடி தரவே. (90 நாட்களுக்குள் மாற்றம் காட்டு வேன் என ரணில் இப்போது மார்தட் டுகிறார்.) இவைக்கப்பால் செப்ரெம்பர் 12 ஆம் திகதி இணைத்தலைமை மாநாடு இறுக்கமான முடிவுகளை எட்டவேண்டிய நிலையிலிருக்கின்றது.

இதேவேளை சிலகாலம் முன் வரை சட்டி சுட்டதடா, கைவிட்டதடா என்கிற நிலையிலி ருந்த இந்தியாவிற்கோ தமிழ்மக்கள் மீதான தனது கரிசனையின்மையை மிக மிகச்சாத கமாகச் சிறிலங்கா பயன்படுத்திய முறை கண்டு அதிர்ச்சி நோய் ஏற்பட்டுள்ளது. தனது தென்முனையைச் சீர்குலைக்கப் பாகிஸ்தா னிய ஐ.எஸ்.ஐ (I.S.I) புலனாய்வுத்துறை சிறீ லங்காவில் வேரூன்றிவிட்டது கண்டு பெரும் அதிருப்தி. 1971இல் பங்களாதேச போர் காலத்தில் சிறீலங்கா செயற்பட்ட விதம் தொட்டு அண்மையில் முன்னாள் தூது வரானகேணல் பசீர் வாலியின் குற்றச்சாட் டிற் கப்பால் மிக முக்கிய காலகட்டத்தில் சிறீலங்காத்தூதரகப் பாக் நியமித்திருக்கும் பாக் விமானப்படைப் பிரதித் தளபதியாக விருந்து அண்மையில் ஓய்வுபெற்ற எயர் வைஸ் மாஷல் அஸ்லாம் சௌத்திரி வரை இந்தியாவிற்குச் சிறீலங்கா சொல்லும் செய்திகள் ஏராளம். இங்குள்ள மிக முக்கிய வெளிப்பாடு என்னவென்றால் புலிகளை ஒடுக்கப் பாகிஸ்தான் மூலம் சிறிலங்கா பெறும் உதவிகள் அனைத்துமே இந்தியா வின் தென்முனையைச் சீர் குலைக்கவும் பயன்படத்தக்கவை என்பதே. உதாரண மாகச் சொல்வதானால் அஸ்லாம் சௌத்திரி எப்படிப்பட்ட ஆபத்தான பேர்வழியென இந்தியத் தரப்பே பட்டியலிட்டுள்ளது. சௌத் திரி எதிர்க்கிளர்ச்சி முறியடிப்பு நடவடிக்கை களில், எவ்விதம் வான்படையைப் பயன் படுத்த முடியுமென்பதில் அனுபவமும், தேர்ச்சியும் பெற்றவர். இவர் F16 வகை வானூர்திகளை, அமெரிக்காவிலிருந்துபெறு வதில் பங்காற்றியவர். அடுத்தவருடம் பாக் வான்படையில் இணைக்கப்படப்போகும் பாக் + சீனக் கூட்டுத் தயாரிப்பான JF17 வகை இடிமுழக்கம் என அழைக்கப்படும் வானூர் தித் தயாரிப்பின் இணைப்பாளர். சீனாவி லிருந்து M 9, M 11 ஏவுகணைகள், வட கொரியாவிலிருந்து நோடோர் வகை ஏவு கணைக் கொள்வனவுகளில் ஈடுபட்டவர். இவ்வாறானா 'பெருமைகள்' பெற்ற சௌத் திரி நிகழ்கால, எதிர்கால சிறீலங்கா பாக் இராணுவ ஒத்துழைப்பின் மையப்புள்ளி யாவார் என்பதில் என்ன ஐயம்! இதேவேளை சீனக் கதையோ அதன் பெரும்சுவர் போல் பெரும் கதை. சுருக்கின் பாரிய எண்ணெய்ப் படுகையான காவிரி வடிநிலத்தின் 35 விழுக்காடு மன்னார்ப் பிராந்தியத்திலுள்ளது. இதனை ஆறு எண்ணெய் அகழ்வுத் துண் டங்களாகப் பிரித்த சிறிலங்கா சீனாவிற்கு இரண்டு இந்தியாவிற்கு இரண்டெனச் சமத்துவநிலை பேணுகின்றது. இதேவேளை பாக்கில் திபெத்தில் வங்கதேசத்தில், மியன் மாரில், ஈரானில் என 'வளையங்கள்' வனைந் திருக்கும் சீனா இப்போது சிறிலங்காவிலும் கூடுதல் ஈடுபாடு காட்டுகின்றது.

எனவே மகிந்தருக்குக் கிடைத்திருக்கும் அவகாசம் குறுகியது. அதற்குள்ளே மரம் தாவும் மந்திபோல மகிந்தர் பல தொங்கு நிலைகளில் (சிறிய கட்சிகள் இணைப்பு, தேசிய அரசாங்க அழைப்பு, நோர்வேக்குத் தூது) செயற்பட்டுத் தமிழ்மக்களின் முது கெலும்பை உடைக்கத் துடியாகத் துடிப் பதன் விளைவே இன்றைய நிகழ்வுகள். இற்றை வரையிலான அனைத்து அடக்கு முறைகளுக்கும் முகம் கொடுத்த எம்மினிய மக்கள் தமது தாங்குநிலையை மீண்டும் நிரூபிப்பர். விடுதலைப் போராட்டமென்பது வெற்றி /தோல்வி என சுருக்கி வகைப்படுத் தக் கூடியதல்ல. அது எதிரியை விடவும் போராடும் சக்தியால் எத்தனை நிமிடம் கூடுதலாகத் தாக்குப்பிடிக்க முடியுமென்பதி லேயே தங்கியுள்ளது.

எண்ணிப் பார்த்துவிடமுடியாத இமாலய இராணுவ வெற்றிகளையும் அமைதிக் காலத்தில் அகில உலகத்தினதும் கவனத் தையும் ஈர்த்து அம்பலமேறி அரங்காடவும் காரணமான எம் மக்கள்மீண்டும் தமது தாங் குநிலையின் ஆற்றலைக் காட்டுவர்.

"அகால மரணமாம் போரரக்கன்
விரைந்து வருகின்றான்
மானிட மகனே விழித்தெழு"

என்கிற வரலாற்றின் அழைப்பினைச் செவிமடுக்கும் எம் மக்கள், அமைதிக் காலத்திலிருந்து மீண்டும் போர்க் காலத்திற் குள் தீரமுடன் புகுந்து எமக்கான தீர்வினைப் பெறவும் அடிப்படையாக இருப்பர்.

நன்றி: விடுதலைப்புலிகள்
ஆவணி - புரட்டாதி, 2006

https://tamileelamarchive.com/

# மரணத்தின் வாசனை - 01

ஒரு சின்னப்பையனின் அப்பா செத்துப்போனார்.

கண்ணீரும் கம்பலையுமாக ஒரு தாய் கதறுகிறாள்.

"எனது மகனைக் காப்பாற்றுங்கள் அவன் எனக்கு வேண்டும் தயவு செய்து காப்பாற்றுங்கள்".

சீடர்கள் எல்லாரும் காத்திருந்தார்கள் நிகழப்போகும் அதிசயத்தின் சாட்சியாய் இருக்கப்போகிறோம் என்கிற முறுவல் அவர்களிடம் மிதந்து கொண்டிருந்தது.

புத்தர் அமைதியாய் சொன்னார் "அம்மா மரணமே நிகழாத வீட்டில் இருந்து ஒரே ஒரு பிடி கடுகு வாங்கிவா" புத்தரின் முகம் புன்னகை மாறாதிருக்கிறது.

அவள் தெருவெங்கும் ஒடினாள் தன்மகனைக்காப்பாற்றி விடுகிற வெறியில் ஓடினாள் ஆனால் மரணம் இறுதியில் அவளை வென்றுவிட்டது. மரணம் காற்றைப்போல எங்குமிருந்தது. மரணத்தின் வாசனை தெரியாத ஒரு பிடி கடுகு கூட இந்தப் பூமியில் கிடையாது.

மரணத்தை வென்று விடுகிற ஆசை எல்லோருக்கும் உண்டு ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிற சகவீரனைப்போல் மரணம் வாழ்க்கை முழுவதும் நம்மோடு கூட வருகிறது . கடைசிவரை பின்னாலேயே ஒடி வந்து இறுதியில் முந்திக்கொண்டு விடுகிறது.

எனது வழியில் கடந்து போன மரணத்தின் சுவடுகளின் சிலகாட்சிகளை இங்கே பகிர்ந்து கொள்கிறேன்.

அப்பாவின் மரணத்தை பார்த்திருக்கிறேன் மிகநெருக்கமாக மரணத்தின் வாசனை அவர் முகத்தில் மிதந்து கொண்டிருக்க அவரது இறுதிவார்த்தைகள் எனக்குக் கனவையாய் இருந்தன.

எனக்கு அப்போது 7 வயது அதற்கு முன்பாக என்னிடம் மரணம் குறித்த சேதிகள் அனுபவங்கள் ஏதும் கிடையாது என்னிடம் மரணம் குறித்து இருந்ததெல்லாம் சவஊர்வலமும் அதில் கொழுத்தப்படுகின்ற சீனா வெடி குறித்த பயமும் தான் அதைவிடவும் 'பொடிக்கு கையைக்காட்டாதடா கைஅழுகிப்போகும்' என்ற அக்காக்களின் வெருட்டலுக்கும் நான் பயந்து போயிருந்தேன். கை அழுகிப்போகாதிருக்க சவஊர்வலங்களைப் பார்க்கிறபோதெல்லாம் கையைப் பின்னால் கவனமாய் கட்டி மறைத்திருக்கிறேன். என்னையும் மீறிக்கையைக்காட்டிய பொழுதொன்றில் கை அழுகப் போகிறது என்று அழுது அழுது ஊரைக்கூட்டியிருக்கிறேன்.

இப்போது அப்பா செத்துப்போனார். பாம்பு அப்பாவைக் கடித்துவிட்டது என்றவுடனேயே எல்லாரும் பதறினார்கள். அப்பாவை சூழ்ந்து கொண்டார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை அப்பாவைச்சுற்றி நின்ற சனங்களுக்குள் நான் இடறுப்பட்டுக்கொண்டிருந்தேன். அப்பாவைக்காப்பாற்றி விடவேண்டும் என்று எல்லோரும் நினைத்தார்கள் அப்பாவை தூக்கிக்கொண்டு எல்லோரும் றோட்டுக்கு ஒடினார்கள். சந்தி வைரவர் கோயிலடியில் கிடத்தினார்கள். அவர்கள் நினைத்திருப்பார்கள் வைரவர் காப்பாற்றி விடுவார்.

அப்போதெல்லாம் இந்தியராணுவம் எங்கள் றோட்டுச்சந்தியில் முகாமிட்டிருந்தது. அஞ்சரை மணியோட பெரிய வட்டம் வட்டமாக முள்ளுக்கம்பிகளை போட்டு வீதியை மூடிவிடுவார்கள் யாரும் போகமுடியாது ராணுவ வாகனங்களைத்தவிர யாரும் போகமுடியாது. அப்பாவை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவதற்கு ராணுவத்துடன் யார் யாரோவெல்லாம் கதைக்கிறார்கள் நான் குரல்களை மட்டும் கேட்டுக்கொண்டிருந்தேன் என்னால் மனிதர்களின் கால்களை மட்டும் தான் பார்க்கமுடிந்தது. சேர் மூர்த்தி சேர் பாம்புகடிச்சிட்டுது சேர். யாரோ இந்திய ராணுவத்திடம் கெஞ்சினார்கள். ராணுவம் பலமாக மறுத்துக்கொண்டிருந்தது. நான் சனங்களின் கால்களிடையில் நசிபட்டுக்கொண்டிருந்தேன். கால்களிடையில் புகுந்து புகுந்து அப்பாவிடம்போனேன். அப்பா ஏன்அழுகிறார் 'அப்பா அப்புசாமியிட்ட போட்டு வாறன் பிள்ளை வடிவாப் படியுங்கோ' அவர் குரல் தளுதளுத்தது. அந்த வார்த்தைகளின் இறுதியையும் நிரந்தரத்தையும் என்னால் அப்போது புரிந்து கொள்ள முடியவில்லை. சொல்லப்போனால் மரணம் மறுபடி ஆளைத்திரும்பத்தராது என எனக்கு அப்போது புரியவேயில்லை.

இந்தியராணுவம் இறுதிவரை அப்பாவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக விடவில்லை. (ராஜீவ் காந்தி வாழ்க) அப்பாசெத்துப்போனார். வைரவரும் கைவிட்டார்.

அப்பாவை வீட்டைகொண்டு வந்து கிடத்தினார்கள் யார் யாரோ என்னைக்கட்டிப்பிடித்து அழுதார்கள் நான் கொஞ்சம் அசௌகரியப்பட்டேன் அவ்வளவுதான் துக்கம் எல்லாம் அப்போதிருக்கவுமில்லை தெரியவுமில்லை. நான் அப்பாவை கிட்டப்போய் பார்த்தேன் அவர்விழிகள் ஒருமுறை திறந்து மூடியது போலிருந்தது நான்நிச்சயமாய் பார்த்தேன் அந்த வெளிறிய விழிகளை பார்த்தேன். யாரிடமும் சொல்ல முடியவில்லை அப்பா முழிப்பு என்று . அந்த வேதனை இன்றைவரைக்கும் எனக்கு உண்டு. (நான் இப்போது யோசிப்பது உண்டு அது ஒரு பிரமையோ என்று) ஒரு பிரமையின் ஞாபகங்கள் இருபது வருடம்

https://tamileelamarchive.com/




தாண்டியும் மனசில் தங்கியிருப்பது என்பதும்.

ஒப்பாரி காதைக்கிழித்தது. பிறகு எல்லாம் வேகமாக நடந்தது நான் அப்பா இப்போது பொடி என்பதால் அப்பாவுக்கு முன்னுக்கு கையை வெளியில் எடுக்காமல் பின்னாலேயே கட்டிக்கொண்டிருந்தேன். அல்லது அப்பாதானே கையை எடுக்கலாமா விடலாமா என்று யோசித்துக்கொண்டிருந்தேன். எனக்கு நல்ல ஞாபகமிருக்கிறது அப்பாவுக்கு நிறையப்பேர் கண்ணீர் அஞ்சலி அடித்தார்கள். நான் அதையெல்லாம் ஒரு மூட்டைக்கு மேலிருந்து உரத்து மரணஅறிவித்தல் பாணியில் வாசித்துக்கொண்டிருந்தேன்.

நான் அழவேயில்லையா அழுதேன். கடைசியாக சுடலையில் அப்பாவைக்கொழுத்தியபோது. அப்பா இனிமேல் வரவே மாட்டார் என்று எனக்கு புரிந்த போது வீறிட்டு கத்தினேன். யார் யாரோ என்னை அணைத்தார்கள் சமாதானப்படுத்தினார்கள். சோடா கொடுத்தார்கள். இப்போதும் அந்த அழுகை உறங்கிக்கொண்டிருக்கிறது எனக்குள்.

இப்போது 18 வருடங்கள் கழித்து மரணம் பற்றி எனக்கிருந்த எண்ணங்களை அனுபவங்களை எழுதலாம் என்று நினைத்து தொடங்கினேன். அப்பாவின் மரணத்தை தவிர்த்து விட்டு எப்படி? அப்பா எனக்கு சரியாக நினைவுகளில் பதியாத பிம்பம் அவர் மரணம் என்னை நிச்சயமாக பாதித்தது என்னிலும் அதிகமாக தம்பியை அதைவிட அப்போதுதான் பிறந்திருந்து தங்கையை (அவளுக்கு அப்பாவின் முகமே தெரியாது) அந்த மரணம் பாதித்தது அப்பனில்லாப்பிள்ளைகள் என்கிற இலவச இணைப்பு அனுதாபம் என்னோடு எப்போதும் கூடவே வந்து அசௌகரியத்தையும் கூடவே அப்பாவின் நினைவுகளையும் தந்து கொண்டேயிருக்கிறது.

18 வருடம் கழித்து இப்போது யோசித்தேன் இதற்கெல்லாம் காரணம் யார் அப்பாவா அந்த நேரம் அவரைக்கடித்த பாம்பா இல்லை அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகவிடாத இந்தியராணுவமா (அவர்கள் கட்டளைக்கு பணிபவர்கள்) அல்லது இந்திய ராணுவத்தை இங்கே அனுப்பினாரே ராஜீவ் காந்தி அவரா யார் நண்பர்களே.

https://tamileelamarchive.com/

# மரணத்தின் வாசனை - 02

உருகித்தீர்ந்த ஒரு மெகுவர்த்தி

சந்தையில் வியாபாரம் கொடிகட்டிப்பறந்தது இரைச்சல் காதைப்பிளந்தது

ஒருவன் தலைதெறிக்க ஓடிவந்தான். நண்பா நண்பா

மற்றவன் என்னடா என்கிறான்.

நான் இந்த சந்தையில் மரணதேவதையை பார்த்தேன். அவள் என்னைப்பார்த்து நக்கலாக சிரிக்கிறாள் நீ உன் குதிரையைக்கொடு நான் பக்கத்து நகரில் ஓடிஒழிந்து கொள்கிறேன் என்றான். (குதிரையை அபேஸ் பண்ண பார்க்கிறானோ)

இவன் உடனடியாக குதிரையைக் கொடுத்தான். அவன் அடுத்தநகரை நோக்கி ஓடினான்.

சிறிது நேரத்தில் மரணதேவதையை இவன்கண்டான்.

அவளிடம் 'என்ன என் நண்பனை பார்த்து நக்கலாக சிரித்தாயாமே' என்றான்.

மரணதேவதை சொன்னாள் 'சீச்.. சீ நான் அவனை பக்கத்து நகரில் தானே சந்திக்க வேண்டும் என்ன இங்கே நிற்கிறான் என்று சிரித்தேன்' என்றாள்.

மரணதேவதையை பார்த்து தலைதெறிக்க ஓட எல்லாரும் தயாராக இருக்கிறோம். யாராவது அவளைக்காதலிக்க தயாரா? அல்லது வா வா என்று அவளுக்கு விருந்து வைக்கவும் யார் தயார்.

மரணதேவதையை விருந்துக்கு அழைத்தவனைப்பற்றி அவளை ஒரு சாதாரணப்பெண்ணாகப் பாவித்தவனைப்பற்றிய கதை இது.

ஒரு பொதுக்கூட்டம்

பேச்சாளர் கரகரவென்று அழுது கொண்டிருக்கிறார் தனைமறந்து.

'அந்தப் பிள்ளை சொன்னவன் நான் இரண்டு மூன்று நாட்களில் நினைவிழந்து தண்ணீர் தண்ணீர் என்று அரற்றினாலும் தண்ணீர் தராதீர்கள் என்று'

ம்.. அந்தப்பிள்ளை திலீபன்.

அவன் அப்படித்தான் செத்துப்போனான். தண்ணீரும் அருந்தாமல் சாகும்வரை உண்ணாவிரதமிருந்து செத்துப்போனான். அவர் அழுதழுது சொன்னதைப்போல திலீபன் அவனது இறுதி நாட்களில் நினைவிழந்து அரற்றினான்.

தண்ணீர் தண்ணீர் என்று அவன் நினைவிழந்து அரற்றுகையில் யாரும் தரவில்லை அவனது வார்த்தைகள் அவனைச் சுற்றியிருந்தவர்களைக் கட்டுப்படுத்தியது.
ஆயிரக்கணக்கானவர்கள் அவனது சாவுக்கு சாட்சியாய் இருந்தர்கள்.

அவனது சாவு தடுக்கப்பட முடியாததாயிருந்தது.

'ஐயா திலீபா எங்கய்யா போகின்றாய்' திலீபன் உண்ணாவிரதமிருந்த மேடைக்கு அருகில். இப்படி ஒரு கவிதை அழுதுகொண்டிருந்தது.

அவன் அதைக் கேட்டானோ கேட்கவில்லையோ தெரியாது. ஆனால் அவன் செத்துவிடக்கூடாதே என்று அத்தனை பேரும் துடித்தர்கள்.

முதல்நாள் திலீபன் மிகுந்த உற்சாகமாகப்பேசுகிறான். எனது மண்விடுதலை பெறவேண்டும். மக்கள் புரட்சி இங்கே வெடிக்க வேண்டும் என்று மிகவும் உற்சாகமாகப் பேசுகிறான்.

பிறகு நாளாக நாளாக அவன் பேசும் சக்தியை இழந்து கொண்டு போகும் நாட்களிலும் அவனது முகத்தின் புன்னகை மாறாதிருந்தது. நம்பிக்கையிழந்துவிட்டன சாயல் துளியும் இருக்கவில்லை. மரணத்தின் வாசனை தனது நாசிகளில் ஏறுவதை அவன் மறைத்தான் உண்மையில் மக்களிடம் அவன் பிழைத்து விடுவான் என்கிற நம்பிக்கைகள் வீழ்ந்துகொண்டிருந்தது.

திலீபன் தனது நம்பிக்கைகள் சாகும் கணத்தில் அவன் சொல்கிறான் 'உறவுகளே நான் நம் நாடு மலர்வதை எனது தோழர்களோடு வானத்தில் இருந்து பார்ப்பேன்'

அவன் மரணம் நிச்சயமானது என்று அவனுக்கு புரிந்திருந்தது. அது அவனால் தானே நிச்சயிக்கப்பட்டது. அந்த தெளிவுதான் அவன் பலம் அது தெளிவா அல்லது சாகும் துணிவா எனக்கு சொல்லத்தெரியவில்லை. ஆனால் அது மரணத்தை அதன் நிரந்தரத்தை அதன் மீதான மனிதர்களின் அச்சத்தை நிச்சயமாக வென்றுவிட்டது.

https://tamileelamarchive.com/

திலீபனிடம் கடைசியாக ஒரு வைத்தியர் வருகிறார். அவர் திலீபனைப்பார்த்தார். அவன் சாந்தமாக கிடந்தான் நிரந்தரமான அவனது அந்தப்புன்னகை அவரால் எதிர்கொள்ள முடியாததாயிருந்தது. காலம் அவனைக் கொண்டு போய் விட்டது விடுதலையின் மூச்சென்று மேடைகளில் முழங்கியவன் மூச்சடங்கிப்போனான் அவன் மரணத்தை அறிவிக்க வேண்டும். தன் உறவுகளை தன் அன்பான மக்களை துடிக்கவைத்து விட்டு மெழுவர்த்தி அணைந்து விட்டது என்று சொல்ல வேண்டும்.

வைத்தியர் இப்போது என்னசெய்வார். அவரைச்சங்கடத்துக்கும் துக்கத்துக்கும் உள்ளாக்கப்போகும் அந்தக்கணங்கள் வந்துவிட்டன. மரணம் அவனை முழுவதுமாக ஆட்கொண்டு விட்டது.

மரணம் கொடியைப்போல அவன் மீது படர்ந்தது. கொஞ்சம் கொஞ்சமாக கணீர்க்குரல் வலுவிழந்து தொய்ந்து தீனித்து கடைசியில் மௌனித்தது. அந்தப் பெரும் மௌனம் கூடிக்கதறிய மக்கள் வெள்ளத்திடம் கொடுந்தீயெனப்பற்றியெரிகிறது இன்றைக்கும். எப்படி முடிந்தது அவனால். மரணம் அத்தனை இலகுவானதா காதலியைக் கட்டிக்ககொண்டதைப்போல மரணத்தை இலகுவில் முத்தமிட்டானே. அது சாத்தியமா, மரணம் அத்தனை சாதாரணமா.

அவர் திலீபனை அவனது கால்களை தொட்டு கும்பிட்டார். வைத்தியரின் உடல் குலுங்கிக்கொண்டிருந்தது (வேறென்ன செய்யமுடியும்) அவனது மரணம் அறிவிக்கப்பட்டது. அந்த திடுக்கிடும் கணங்களில் ஓ.. ஓ..... ஓ...... ஓ என எழுந்த கூக்குரலும் கதறலும் அடங்க நாளானது. அத்தனை பேரும் அழுதார்கள். மரணத்தை விருந்துக்கு அழைத்த அவனுக்காய் வழிந்த எந்தத்துளிக் கண்ணீரிலும் பொய்யில்லை. அத்தனையும் துயரம். நல்லூரின் தெருக்களில் வார்த்தைகளுக்குச்சிக்காத கண்ணீர் வழிந்து ஓடிக்கொண்டிருந்தது. உறைந்து போன அந்தக்கணங்கள் இன்றைக்கும் நல்லூரின் தெருக்களில் பிரதிபலித்துக்கொண்டிருக்கிறது.



தியாகி லெப். கேணல் திலீபன்

ஒரு மிகப்பெரும் மனோபலமிக்க தலைவன் திலீபன். அவன் மனோபலம் இதனை சாத்தியமாக்கியதா இந்தப்பூமியின் சுகங்களை தவிர்த்து அவன் முன்பு கூடியிருந்து கதறும் குரல்களைத்தவிர்த்து மரணத்தை எதிர்பார்த்து காத்திருப்பதற்கு அது அத்தனை இன்பமானதா? மரணம் சிலருக்கு ஆச்சரியம் சிலருக்கு சாதாரணமா. சாகப்போகிறோம் என்று தெரிந்த பிறகும் நடுங்காமலிருக்க புன்னகைக்க அதற்காக காத்திருக்க எத்தனை மனிதரால் முடியும் என்னால் உங்களால் யாரால்.... ஒரு சில அதிசயர்களால் மட்டும் தான் முடியும் போலிருக்கிறது.

https://tamileelamarchive.com/



# பார்த்தீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கின்றான்

செந்தோழன்

திலீபனிற்கு
தீபம் ஏற்றுவோரே
பார்த்தீபனின்
பாதம் தொழுவோரே
ஈகச் சிகரத்திற்கு
மாலை தொடுப்போரே
அதிசய வள்ளலுக்காய்
கசிகின்ற நெஞ்சோரே
மனதிலேற்றுங்கள்...
எங்கள்
பார்த்தீபன்
இப்போதும்
பசியோடுதான் இருக்கிறான்

சிறுகச் சிறுகச் சேர்த்து
நிமிரக் கட்டிய மனையும்
உயிரைப் பிரியும் பொழுதில்
தந்தை
உயிலாய்த் தந்த வளவும்
இன்பம்
பெருகப் பெருக நாங்கள்
ஓடித்திரிந்த தெருவும்
உள்ளம்
உருக உருகக் கண்ணீர்
விட்டுப்பிரிந்த ஊரும்
திரும்பக் கிடைக்கும்
காலம் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்

நாளும் பொழுதும்
கண்ணைக் கரைத்து
நாளை வருவார்
நாளை வருவார்
என்றே தங்கள்
இதயம் வதைத்து
கொலைஞர் பிடித்த
உறவை நினைத்துக்
கதறும் மனங்கள்
இருக்கும் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்

சதியும் வெறியும்
ஒன்றாய்க் கலந்து
கருணை கனிமை

https://tamileelamarchive.com/



தேசியத் தலைவர் அவர்கள் தியாகி திலீபனின் நினைவு நிகழ்வில் கலந்து கொள்கின்றார்.

எதுவும் மறந்து
எங்கோ பிறந்து
மனிதம் துறந்து
எங்கள் மண்ணில்
மரணம் விதைத்து
துயரச் சுமையுள்
எம்மைத் திணிக்கும்
கொடுமைப் படைகள்
எரியும் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்

உயிரை உடலை
உறவைத் துறந்து
உணர்வு முழுதும்
தமிழைக் கலந்து
விடியும் காலைக்
கதிராய் விரிந்து
தமிழர் தேசக்
கனவை வரித்து
மண்ணின் மானம்
பெரிதாய் மதித்து
மண்ணுள் உறங்கும்
மாந்தர் கேட்கும்
விடுதலை வந்து
சேரும் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்

சொந்த சுகங்கள்
அனைத்தும் துறந்து
துணிவுச் சிறகை
மனதில் அணிந்து
தலைவன் திசையில்
பயணம் தொடர்ந்து
அணியாய்த் திரளும்
தமிழர் படையின்
எழுச்சித் தீபம்
எரியும் வரைக்கும்,
மக்கள் புரட்சி
மண்ணில் வெடித்து
தமிழர் முழுதும்
புலியாய் விரைந்து
தாயகமெங்கும்
போரிடும் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்

திசைகள் எதிலும்
பகையை முடித்து
நிலங்கள் முழுதும்
விரைவில் பிடித்துப்
புலியின் கொடியைக்
கரத்தில் எடுத்து
வெல்லும் சேதி
சொல்லும் வரைக்கும்,
எங்கள்
பார்த்தீபன்
பசியோடுதான் இருப்பான்

ஆகவே...
பசித்த வயிற்றோடு
பாடையேறிய
எங்கள்
பார்த்தீபன் கனவுகள்
மேடையேறி முழங்கவல்ல
தீபமேற்றி வணங்கவல்ல,
களத்திலேறிப் பகைமுடிக்க
நெருப்பிலேறிக்
கொடிபிடிக்க
தீர்வெடுங்கள்
திலீபனிற்குத் தேவையான
உணவை
உங்களால்தான்
சமைக்க முடியும்.

நன்றி: விடுதலைப்புலிகள்
ஆவணி - புரட்டாதி 2006

https://tamileelamarchive.com/




for Peace in Sri Lanka

ம.தனபாலசிங்கம்

## பார்வையும் பதிவுகளும்

# சிறீலங்காவில் சமாதானத்திற்கான புதிய ஓடுபாதைகளை மனத்திரையில் காணல்

Centre for Just Peace and Democracy ( CJPD )

நீதியான சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான மையத்தினால் முரண்பாட்டு கற்கைக்கான பேர்கொ பவுண்டேசனின் அனுசரணையுடன் ஒழுங்குசெய்யப்பட்ட கருத்தரங்கு ஒன்று சென்ற ஏப்பிரல் மாதம் 7ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை சுவிற்சலாந்து நாட்டின் சூரிச் நகரில் நடந்தேறியது. இதில் துறைபோகிய அறிஞர்கள், கல்விமான்கள், சிறிலங்காவின் சகல சமூகத்தினரையும் சார்ந்த சமாதானத்திற்கான ஆர்வலர்கள், புலம்பெயர்ந்து வாழும் தமிழ் புத்திஜீவிகள், வெளிநாடுகளில் வதியும் சிங்களப் புத்திஜீவிகள், முரண்பாடுகளை அணுகுவதில் மாற்றங்களை வேண்டிநிற்கும் சர்வதேச வல்லுனர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் நூல்வடிவில் வெளிவந்துள்ளன. இதனைப்பற்றிய பார்வையும் பதிவுகளுமாக இக்கட்டுரை அமைகின்றது.

கருத்துப் பரிமாற்றம், தொடர்புகளை ஏற்படுத்தல், பொதுவான தளம் ஒன்றை உருவாக்கல், சமாதான முன்னெடுப்புக்கான முக்கிய தலைப்புக்களில் கட்டுரைகளை சம்பந்தப்பட்டோருக்கு கிடைக்கச்செய்தல் என்பன ஒழுங்காளரின் நோக்கங்களாக் கூறப்பட்டுள்ளது. இதன் பலாபலன்களை தொடர்ச்சியான முயற்சிகள் மூலமே எட்டமுடியும். ஏனெனில் தமிழ்த்தேசியப் பிரச்சினைக்கான பரிணாமங்களை அணுகும்போது உரத்த சிந்தனைகள் வேண்டும். அந்த வகையில் இக்கருத்தரங்கு ஒரு முன்னோடி எனலாம்.

இதில் உள்ள கட்டுரைகள் எல்லாவற்றின் மீதும் என் பார்வையை பதிக்க நான் முயலவில்லை. முரண்பாடு பொதுவானது என்பதால் அவை சார்ந்த பின்னணி, அணுகுமுறை என்பனவற்றில் பலரும் ஒத்த கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளதை காணமுடிகின்றது. வகைமாதிரிக்காக சில கட்டுரைகள் மீதே என் பார்வையை பதிக்கின்றேன்.

### சிறீலங்கா ஒரு பிழைத்துப்போன தேசம் - விக்டர் ஐவன் (Victor Ivan)

ஆங்கில நாடக சக்கரவர்த்தியாகிய வில்லியம் சேக்ஸ்பியரின் புகழ்பெற்ற துன்பியல் நாடகங்களுள் 'ஹம்லட் ' தனியிடத்தை வகிக்கின்றது என்பர். டென்மார்க் அரச குடும்பத்தில் புரையோடிப் போயிருந்த துரோகம், பொய்மை, வஞ்சனை என்பன இந்நாடகத்தின் கருவாகின்றது. டென்மார்க் இளவரசனான ஹம்லட்டின் நண்பன்

https://tamileelamarchive.com/

"டென்மார்க் தேசத்தில் ஏதோவொன்று அழுகிப்போய்விட்டது" ..... ("something is rotten in the state of Denmark") எனக் கூறுகின்றான். அது நாடகத்தில். இங்கு சிங் கள ராவய பத்திரிகையின் ஆசிரியரான விக்டர் ஐவன் என்பார் சிறிலங்கா என்னும் தேசம் அதன் உச்சியில் இருந்தே உளுத் துப்போய்விட்டது என்கிறார். இந்த உளுத் துப்போன தேசத்தில் சிங்கள மக்களுக்கும் விடிவில்லை என்பது இவரது வாதம். புதிய தேசம் ஒன்றைக் கட்டி எழுப்புவதே சகல திற்கும் தீர்வு என்பது இவரது கருத்து. மாக் சீய வாதியான ஐவன், கடந்த 50 ஆண்டு காலமாக இது முடியாமல் போனதை ஏன்தான் கருத்தில் கொள்ளவில்லையோ. தமிழ்த் தேசியம் வெற்றி கொள்ளும்போதே சிங்களமக்களுக்கும் விடிவு ஏற்படும் என் பதே யதார்த்தமாகும்.

'சர்வதேச வலைப்பின்னல்' அபாய அறிவிப்பு (Prof.Navaratna Bandara) பேரா சிரியர் நவரட்ண பண்டார தமிழ்த் தேசிய முரண்பாடு சிறீலங்கா என்னும் தீவைக் கடந்து எண்பதுகளில் இந்திய வல்லரசின் கரைகளை வலம்வந்தது. இப்போது சர்வ தேச பரிணாமம் பெற்று உலகவல்லரசின் ஆட்டுவித்தலில் மேற்குலகின் தலைநக ரங்களில் கொலுவிருப்பதைப் பார்க்கின் றோம். இதற்குப் பெயர் சர்வதேச வலைப் பின்னல். தொட்டிலை ஆட்டுவதும் பிள் ளையை கிள்ளிவிடுவதும் இந்த வலைப் பின்னலுக்கு கைவந்த கலை. இதனை பேராதனைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் பண்டார அழகாக விளக்குகின்றார். எண்பது களில் இந்தியாவே கிள்ளலையும் தடவலை யும் செய்தது. இப்போது அந்தத் தொழில் 'பிரித்து அளிக்கப்பட்டுள்ளது ' என்கிறார். பண உதவி என்னும் கரட்டை சிலரும் கடும் வேலைகளை நோடிக் நாடுகளும் பகிர்ந்து கொண்டுள்ளன. இந்த வலைப்பின்னல் ஏற் கனவே தமது நலன்களை இனம் கண்டு கொண்டுள்ளதால் சமாதான முன்னெடுப் புக்கள் முடிவிற்கு வந்து யுத்தம் வெடிக்கு மேயானால் இந்த வலைப்பின்னல் நாடு கள் தமது நலன்களைப் பேண இராணுவ ரீதியில் தலையிடும் என்பதை சம்பந்தப் பட்டோர் மனம்கொள்ளவேண்டும் என்ற அபாய அறிவிப்பை வெளிப்படுத்துகின்றார் இவர். ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கோட்டை ராசதானியில் பண்டகசாலை ஒன்றை வேண்டிய போர்த்துக்கேயர், தீவின் கதையையே எழுதியது பேராசிரியருக்கு சொல்லித் தெரியவேண்டியதில்லை.

### யேர்மனியும் பிரான்சும் சிறீலங்காவும் தமிழ் ஈழமும்

பேராசிரியர் ஜோன் நீல்சென் (Prof.John P Neelsen).

யேர்மன் பல்கலைக்கழகம் ஒன்றின் சமூகவியல்துறை பேராசிரியர் ஜோன் நீல்சென் தனது கட்டுரையில் தமிழ்தேசியத் தின் பின்புலத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றார். சிங்களமொழிச் சட்டம், திட்ட மிட்ட சிங்கள குடியேற்றங்கள், தரப்படுத் தல், என விரிந்து செல்லும் அடக்குமுறை கள், அரச வன்முறைகள் இன அழிப்பு வடி வங்கள் என்பன ஆயுதப்போராட்டத்தை ஊக்குவித்தது என்பதை தெளிவாக்கும் பேராசிரியர், யுத்த நிறுத்த உடன்படிக்கை இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பன இரு தரப்பு சமநிலையைப் பேணிநிற்க வாசிங்ட னில் புலிகளை புறம்தள்ளிய கூட்டம் ஏற் படுத்திய பாதிப்புக்களையும் குறிப்பிடத் தவறவில்லை. மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகள் காலனித்துவ காலத்தில் சுய நிர்ணய உரிமையை கையாண்டமுறை யையும், அந்நாடுகள் விடுதலை பெற்றபின் சுயநிர்ணயத்திற்கான கதவுகளை மூடிவிட் டன என்னும் பேராசிரியர் பதிலாக உள்ளக சுயநிர்ணயம்பற்றி குறிப்பிடுகின்றார். இதில் சுவாரஸ்யம் என்னவென்றால் இதனையும் சிங்களதேசம் தமிழ் மக்களுக்கு சர்வ தேசம் நினைப்பதைப்போல் வழங்கப்போவ தில்லை என்பதை அவர்களுக்கு காட்டும் உத்தியாகவே புலிகள் கையாளுகின்ற னர் என்னும் இவரது கருத்தாகும். பூரண சுயநிர்ணயத்திற்காக களத்தில் மட்டுமல்ல சர்வதேச அரங்கிலும் அதன் அங்கீகாரத் திற்கு போரிடவேண்டும் என புத்திபுகட்டும் பேராசிரியர், அதில் புலிகள் இன்னமும் வெற்றிகொள்ளவில்லை என்கின்றார். உறங் குகின்றவரை எழுப்பலாம். உறங்குவது போல் பாசாங்கு செய்பவரை என்ன செய் வது?

வரலாறும் புவியியலும் சிங்களவரையும் தமிழரையும் முஸ்லீம்களையும் அருகருகே வாழ விதித்துள்ளது. அளவால், கலாச்சாரத் தால், செல்வத்தால் வேறுபட்ட பல நாடு களை ஒன்றுபடுத்தும் முயற்சியில் ஐரோப்பா முன்னணியில் நிற்கின்றது எனக் கூறும் பேராசிரியர் நீல்சென், சமமற்ற நாடு களைக் கொண்ட இன்றைய உலகும் பல்நாட்டு பெரும் கூட்டுத்தாபனங்கள் நாடு களின் பொருளாதாரத்தில் செலுத்தும் ஆதிக்கமும் தேசிய இறைமை முற்று முழு தான ஒன்றல்ல எனச் செய்துள்ளது என்கி றார். அதிகாரங்களையும் வளங்களையும் பகிர்ந்தும் குவித்தும் செயல்படும் தேசங் களே சுபீட்சமடையும். இந்த வகையில் பல நூற்றாண்டுகளாகப் குரோதப்பட்டும் போரிட்டும் வந்த யேர்மனியும் பிரான்சும் சிறீலங்காவிற்கும் தமிழ்ஈழத்திற்கும் மாதிரி யாக அமையலாம் என்ற இவரது கருத்து ஒரு உரத்த சிந்தனை மட்டுமல்ல, புதிய ஓடுபாதையும்தான்.

### சுயநிர்ணயமும் அதன் பரிணாமமும்

பேராசிரியர் சொர்ணராஜாவின் கட்டுரை யில் சுயநிர்ணயம் சம்பந்தமான தெளிவான கற்கைகளை காணமுடிகிறது. மேற்குலகின் காலனித்துவ முடிவுடன் சுயநிர்ணயத்திற் கான திரை மூடப்பட்டுவிட்டது என்னும் கருத்தியலை மறுதலிக்கும் பேராசிரியர் சொர்ணராஜா, தனது கருத்துருவாக்கத் திற்கு குயூபெக் மாநிலம் சம்பந்தமாக கனடிய உச்ச நீதிமன்ற தீர்வை முன்வைக் கின்றார். காலனித்துவத்திற்கு புறம்பான குயூபெக் முரண்பாட்டில் சிறுபான்மையினர் அடக்கப்படும்போது, அவர்களது உரிமை கள் மொத்தமாக மறுக்கப்படும்போது அவர் களுக்கு பிரிந்து செல்லும் உரிமை உண்டு என்றும் கனடிய உச்ச மன்றின் தீர்ப்பு நிலைக்கு ஈழத்தமிழர் வந்துவிட்டனர் என் கிறார். சிங்கள அரசின் தொடர்ச்சியான அடக்குமுறையின் விளைவே தமிழரை இந்நிலைக்குத் தள்ளியது எனக் கூறி ஏற்கனவே அங்கு புதிய தேசிய அரசு ஒன்று உருவாகிவருவதை குறிப்பிட்டு இதைத் தடுக்கவே யுத்தம் இடம்பெறுகின்றது என்னும் இவர், சர்வதேசம் தலையிட்டு ஆகக்குறைந்தது ஒரு கொன்பெடரல் தீர்வையாவது வேண்டுகின்றார்.

### இங்கிருந்து எங்கே - இனி ஒரு விதிசெய்வோம்.

ஒற்றையாட்சி அரசியல் அமைப்பைக் கொண்ட சிறீலங்கா என்னும் தேசம் செத்து விட்டது என்பதில் எல்லோருக்கும் உடன் பாடு இருந்தபோதும், அதில் கட்டப்படும் மாளிகைகள் பற்றி சிங்கள தரப்பும் தமிழ் தரப்பும் மாறுபட்டு நிற்கின்றனர். சர்வதேச அறிஞர்களின் கருத்துக்கள் தமிழ் தேசி யத்தை உள்வாங்கியதாக காணப்படுகின் றது. மொத்தத்தில் இன்றைய சூழலில் இதுபோன்ற முயற்சிகள் தொடரப்படவேண் டும்.

"உற்றவர் நாட்டவர்
ஊரவர் இவர்க்கு உண்மைகள் கூறி
இனியன செய்தல்
நற்றவம் ஆவது கண்டோம்."

■

https://tamileelamarchive.com/

# ஏவிவிடப்பட்ட கொலையாளி

■ திசேரா



மினிதான் என்னிடம் சொன்னாள். "இது போன்ற மாநாடுகளை நீ எப்போதும் கண்டிருக்கமாட்டாய்" புறப்பட்டு போய் பார்க்கச் சொல்லி விட்டு சைக்கிளை மிதித்து அவளின் பாதையில் அவளுக்குரிய வேகத்துடன் ஊர்ந்து போனாள்.

அவள் வரவு குறித்து அம்மா என்னிடம் கூற முன்னர் 'டொல்பின்' போன்ற எனது நீர் மூழ்கிக் கப்பலின் பணிகளை முடித்து விட்டு சகல இயந்திரங்களதும் இயக்கம் குறித்து திருப்திப்பட்டுக் கொண்டேன். அன்றைய தினமே அதை வெள்ளோட்டத்துக்கு இறக்குவதென முடிவு பண்ணும் போது அவளும், ராகவனும் ஞாபகத்துள் வந்து அவர்களும் வருவதாக கூறவும் அவர்கள்

https://tamileelamarchive.com/

மீதிருந்த ஈர்ப்பினால் நானும் உடன்பட்டுக் கொண்டு சரியாக 14.00 மணிக்கு புறப்படுவதென தீர்மானித்துக் கொண்டதுடன் திட்டத்தின் ரகசியம் பேணல் குறித்து கதைக்கும் போதுதான் அம்மா என்னை அங்கிருந்து மீட்டெடுத்து மினியின் வரவை அறிவித்தாள்.

திடீரென கூட்டப்பட்ட மாநாடு தேசியம் சார்ந்ததாகவோ, பிரதேசம் சார்ந்ததாகவோ இருந்திருக்கலாம். அவளின் தகவலின் அந்த இடம் முழுவதும் அவை நிரம்பி இருப்பதான தகவல் மட்டுமே. ஆயிரம் அல்லது அதனை அண்மித்த தொகையாக இருக்கலாம். என்ற எண்ணத்துடன் மேற்சட்டையை அணிந்து தயாராகையில் எனது பகற்கனவு குறித்து அம்மா முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். எப்போதையும் போல, கனவுகளுள் என்ன அறிவு வளர்ந்து பெருகுவது குறித்தோ சாதனைக்கு தயாராகும் எனது கண்டுபிடிப்பு குறித்தோ இதுவரை அவர்களுக்கு எந்த விடயமும் அறிவிக்கப் படவில்லை. நான் களைப்பை போக்க அல்லது சோம்பலுக்காக கண்ணை மூடி உறங்கிக்கிடக்கிறேன் என அவர்கள் எண்ணியிருக்கக் கூடும். அதனால் தான் துக்கத்தை கலைத்தும் - கலையும் நேரங்களிலும் அவள் திட்டிக்கொண்டே இருப்பாள். நான் விஞ்ஞானியாக உலா வரும் ரகசியம் அவளுக்குத் தெரிந்திருந்தால் சந்தோசப்படுவாள். சைக்கிளில் தள்ளிச் சென்று மிதிக்க தொடங்கினேன்.

எனது ஆரம்ப கால சைக்கிள் பயணத்தில் இந்த ஏற்றம் ஒரு சவாலாக இருந்தது - பாலத்துக்காக பாதை உயர்த்தப்பட்டு கிடைப்பாதையுடன் சரிவை உண்டாக்கி இருந்தது. வரும் போது சைக்கிளை மிதிக்காமலேயே நீண்ட தூரம் பயணிக்கக் கூடிய சுகமும் இருந்தது. இப்போது அவ்வாறு இல்லாவிட்டாலும் மற்றைய பாதைகளுக்கான மிதிப்பை விட இதற்கு அதிகமாகவே நெற்றியும், மூக்கும் ஈரமாகும். இன்று ஆர்வம் வேகத்தை அதிகமாக்கி இருந்ததால் அவைகள் சொட்டிக் கொண்டு இருந்தன. மோட்டார் சைக்கிள்காரன் ஒருவன் நான் சாவதற்குப் போய்க் கொண்டிருப்பதாக திட்டிவிட்டுச் சென்றான். ஒருவர் வழியில் மற்றவர் நுழைகையில் இது சாதாரணமானதுதான். அவன் வேகம் அவனுக்கு சரியானது என்றால் எனக்கும் என் வேகம் சரியானது தான்.

பாலம் முழுவதும் மக்கள் ஒருவரை ஒருவர் உரசிக் கொண்டு நின்றார்கள். இந்த பாலத்தைக் கடக்க நேர்ந்த இலட்சக் கணக்கான தடவைகளில் எந்த வேளையிலும் இது மாதிரியான நெரிசல் நிறைந்த பாலத்தைக் கண்டதில்லை. முன்னர் ஒருமுறை பாலத்திலிருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டபோது கூட அவனின் உடலைப் பார்க்க இத்தனை கூட்டம் நிற்கவில்லை. எங்கள் நாட்டின் மிக நீளமான பாலமாக இதுதான் திகழ்ந்தது இதற்கு போட்டியாக இன்னொன்று கட்டப்படும் வரை போர்த்துக்கேயரோ- ஒல்லாந்தரோ சரியான மறதி எனக்கு இரு நிலப்பரப்புக்களையும் இணைத்து தரை வழிப்போக்குவரத்துக்கு இதனை கட்டி இருந்தார்கள். 150-200 மீற்றர் நீளமான பாலத்தை கடந்து இரு ஓரங்களிலும் இருந்த 'கொங்கிறீட்' வேலிப் பகுதிகளிலும் இந்த அதிசயத்தை வியந்து கொண்டிருந்தார்கள்.

சாலைப் போக்குவரத்து விதியை மீறாமல் எனக்கான இடது புறத்தால் மெதுவாக மிதித்து - யாரையும் இடித்து விடாமல் இருப்பதில் கவனத்தை செலுத்தினேன். ஆனாலும் உரசிக் கொள்ள நேர்ந்த இருவரைப் பார்த்ததும் பல்லைக் கடித்துக் கொண்டு ஒரு ஓரத்தில் என் வாகனத்தை சைக்கிளை பூட்டிவிட்டு, நெரிசலுள் மெதுவாய் நுழைந்து பாலமும் வீதியும் ஒப்பந்தம் செய்துள்ள பகுதியில் இடது புறத்தில் நின்று கொண்டேன். வலது புறத்தில் பச்சைகள் கலப்புற்ற பாதுகாப்புக் கூடாரம் உள்ளதால் அங்கு நிற்க முடியாது.

யாரும் தங்கள் தங்கள் வாய்களை மூடிக்கொண்டதாக இல்லை குரல்வளை அதிர்ந்து நாக்கை தடவி வார்த்தைகளாய் நீண்டு கொண்டே இருந்தது.

"அது சாரை"
"அந்தா விரியன்"
"கருநாகமும் இருக்கும் போல"

காதுள் நுழைந்த அபிப்பிராயங்களை கேட்ட வண்ணமே வாவியை எட்டிப்பார்க்கின்றேன்.

பாம்புகள் பிணைந்து கட்டித்தழுவிய வண்ணமே நெளிந்து கொண்டிருந்தன. இது பெரிய மாநாடாய் இருக்க வேண்டும். அத்தனையும் ஒன்று கூடி இருந்தன. உள்ளங்கையில் பத்துக்கும் அதிகமான மண்புழுக்களை நெளிய விட்டது போல ஒன்றின் மேல் ஒன்றாக ஊர்ந்து சறுக்கி விழுந்து வாவியை சலனப்படுத்தி அசைத்துக் கொண்டிருந்தன.

உயிரொடுங்கி - விரிந்து முழுமையுறா சலனத்தை முளைவிடச் செய்தன. அரூபமாய் எழுந்தவற்றினை ரூபமாக்கி எண்ணங்களை அலையவிட கூட்டத்துள் பார்வைப் புலத்தை நெளிய விட கையில் மூன்று தலை தள்ளி வாய் பிளந்து வேறெதையும் நினைக்க மறந்த மாநாட்டுள் புள்ளியாய் கலந்து நின்றான் இராகவன்.

கைகளைத்தட்டி வாயால் சீட்டி ஊதி அருகில் வரவழைத்து கொண்டு சர்ப்ப மாநாடு குறித்து உரையாடத் தொடங்கினேன். சந்தனக்காடு, நாகரத்தினம், ஐந்து தலை நாகம் எல்லாம் இடையுள் நுழைந்து போயின எங்கு தொடங்கினோம் எங்கு போய்க் கொண்டிருக்கிறோம் என்பது தெரியாமல் தொடர்ந்து கொண்டிருந்த உரையாடலில் அதன் எண்ணிக்கை பற்றியதான கணித்தல் வந்தது.

பாலம் 150 மீற்றர் எனவும் பாம்புக் கூட்டத்தின் மொத்த நீளம் 200 மீற்றர் எனவும் கொள்வோமானால் ஒரு சதுர மீற்றருக்கு 100 என எடுத்தாலும் 30,000 பாம்புகள்- இங்கு இன்னமும் ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். இவற்றை கனவளவாக பார்க்க வேண்டும். ஏனென்பதை நீ அறிவாய் எப்படியாகிலும் 50,000 சந்தர்ப்பங்களை கொண்ட மாநாடாய் இருக்கும்.

அவன் கணிதத்தில் பத்து புள்ளிகளை மட்டும் தவற விட்டவன் என்ற அடிப்படையில் எனது கூற்றை ஏற்றுக் கொண்டாலும்

"இது மாநாடு அல்ல என்பதை கூர்ந்து அவதானித்தால் கண்டு கொள்வாய் இவை எல்லாம் எங்கோ யாத்திரையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. அல்லது சென்று கொண்டிருக்கின்றன. இப்போதைய நிலவரத்தின்படி நான் வரும் போது இருந்ததைவிட அதிகளவான தூரம் முன்னேறி இருக்கின்றேன்".

எங்கள் ஊகங்கள் பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கும் போதே அவைகள் தங்கள் திசையில் நகர்ந்து நீரை அசைத்துக் கொண்டிருந்தன.

https://tamileelamarchive.com/

## 2



அன்றைய நாளின் இருள் கவியத் தொடங்கிய பொழுதில் முன்னெப்போதையும் விட வீட்டினுள் வேகமாய் நுழைந்த அப்பா, தனது கையில் அதிசயப்படங்கள் இருப்பதாகவும், அவற்றைப் பார்க்க வருமாறு அழைத்து சத்தம் போட்டார் அவரின் முகத்தில் சிறிது படபடப்பு மின்னல் வெட்டாய் ஒடியது.

வெளியில் சென்று வீடு திரும்பும் ஒவ்வொரு முறையும் வாசற் கதவை திறந்து சைக்கிளை உள்ளே செலுத்தி கதவை மூடி விட்டு அவரிடம் இன்றைக்கு இந்த பக்குவம் காணாமல் போயிருந்தது. வண்டி வெளியில் வேலியிலே சாய்ந்து கிடந்தது பூட்டப்படாமல்.

தான் தனது நண்பர்களுடன் கோயிலுக்குச் சென்றிருந்த நேரம் எடுக்கப்பட்டவை என புகைப்படங்களை எடுத்துக் காட்டினார். முதலாவது படத்தை பறித்தெடுத்த அக்கா ‘ஒன்றும் தெரியவில்லை -அப்பாவுக்கு இன்னமும் படம் எடுக்கத் தெரியாது’ என்னிடம் நீட்டினால் அதில் ஒளி மேல்நோக்கி இழுபட்டு இருந்ததால் படம் தெளிவின்றி சலனமாக இருக்கிறது மற்றையதும் அப்படியே இருப்பதாக அம்மா தந்தாள்.

‘அது தான் அதிசயம் இந்தப் படங்கள் மட்டுமல்ல அன்றைய தினமும் அதற்கு அண்டிய தினங்களிலும் மாலை வேளையில் எடுக்கப்பட்ட படங்கள் எல்லாம் இப்படித்தான் உள்ளன’ என்ற அப்பா சகல படங்களையும் பரப்பி வைத்து காட்சிப்படுத்தினார் எல்லாவற்றிலும் மின் விளக்கு ஒளி மேல் நோக்கி இழுபட்டு சென்ற வண்ணம் இருந்தது.

இவைகள் தனக்கு காலையிலேயே கிடைத்தாலும் இவை பற்றிய கலந்துரையாடலிலும், இதைப்போல இருந்த இன்னும் பல படங்களையும் கண்டுபிடித்து அவற்றைப் பார்த்து விட்டு வருவதிலும் பல மணி நேரங்கள் கரைந்து போனதாம். மேல் நோக்கி ஒளியை இழுக்கக் கூடிய ஒரு வித ஈர்ப்பு சக்தியினால் தான் இது நடந்திருக்க கூடும். அது புவியீர்ப்பை விட அதிகளவு சக்தி கொண்ட ஒளியீர்ப்பு கீற்றுக்களை அண்டவெளிக்கு இழுத்துப் பயணித்தது காலநிலை மாற்றத்தின் காரணமாக இது ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதிய வேளையில் தான் ஒருவன் ‘அது சக்தி வாய்ந்த கோயில் எனவும் அதன் குடமுழுக்கை காண அனைத்து சித்தர்களும் ஒன்று கூடி வானில் நின்றிருந்தால் அவர்களின் ஒன்று திரண்ட சக்தி’ ஒளியை மேல்நோக்கி இழுத்திருக்கிறது என்றானாம்.

ஆனாலும் இது குறித்து தான் எந்த அனுமானத்தையோ- முடிவையோ எடுத்துக் கொள்ள முடியாமல் புகைப்படங்கள் குழப்பத்துள் ஆழ்த்தி விட்டன என்றார்.

இதைக் கேட்டுக் கொண்டே கண்ணாடியை சரி செய்து புகைப்படமொன்றைக் கையில் எடுத்துக் கொண்ட அம்மம்மா இது தெய்வ செயலைத் தவிர எதுவுமில்லை அண்மைய நாட்களாகவே தெய்வ அனுக்கிரகம் இந்த ஊருக்கு கிடைக்கத் தொடங்கி விட்டதை நான் உணர்ந்ததாக கூறியவள், இப்படி பட்ட பல காட்சிகள் தன்னை போன்ற (வயது கூடிய அல்லது பக்தி நிறைந்த என்பதை உணர்த்த விரும்புகிறாள் என நினைக்கின்றேன் ) பலரது கனவுகளில் வருவதை தாங்கள் சந்திக்கும் வேளையில் கதைத்துக் கொள்வதாகவும் பெரும்பாலும் இக் கதையாடல் கோயிலிலேயே நடப்பதாகவும் கூறினாள்.

‘எதையும் அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாது’ என அப்பா மறுதலித்த போது, அம்மாவும், அக்காவும் மெதுவாக அடுப்பறைப் பக்கம் மறைந்து போனார்கள். தாங்கள் சிலர் சேர்ந்து இந்த அதிசயம் குறித்து பலருக்கு அறியத்தந்திருப்பதாகவும் அவர்களின் அறிக்கையின் பின் இது குறித்த முடிவுகள் எதையாவது எடுத்துக் கொள்ளலாம் என்று கூறிவிட்டு அப்பா சைக்கிளை உள்ளே கொண்டுவரச் சென்றார். அப்போதைக்கு அது வீட்டளவில் நின்று போனாலும் ஊர் முழுவதும் கதைக்கப்பட்டுக் கொண்டே இருந்தது.

## 3



பகல் இரவு என்ற எதுவித வேறுபாடுமின்றி கனவு முழுவதுமான ஆக்கிரமிப்பில் சர்ப்பம் ஈடுபட்டிருந்தது. அது நீடித்திருந்த நாட்களின் எண்ணிக்கையை வரையறுக்க முடியாது. நேற்றும் இன்றைய காலைக் கனவில் கூட அது தான் வந்தது.

எங்களது நீர்மூழ்கியின் மேல் கட்டுமானத்தை அவதானித்துக் கொண்டிருந்த வேளையில் கருமேகம் சூரியனை மறைப்பதை போல இருள் நிரம்பியது வானம் முழுவதும் இறக்கை

https://tamileelamarchive.com/

முளைத்திருந்த பாம்புகள் பறந்து கொண்டிருந்தன. திடீரென தாழ்வாகப் பறந்து வந்த ஒரு பாம்பு தலையாலும் இறக்கையாலும் என்னை அழைத்தது.

என் மயிர்கள் சிலிர்த்துக் கொண்டன இரு தோள் பட்டைகளிலும் ஒரு வித உறுத்தல் இரு கைகளின் மோதிர விரலும் சிறுவிரலும் பிரிவுபட்ட அக்குள் பகுதி வரையான நீண்ட பகுதி ஒரு கைபோல கீழ் நோக்கி வந்து உடலுடன் ஒட்டிக் கொண்டன. கைக்கும் பிரிந்த பகுதிக்கும் இடையில்தோலும், நரம்புகளும் இழுபட்டு, கை இறக்கைகள்போல ஆனது கைகளை அசைக்கும் போது உடலின் நிறை குறைந்து மேல் நோக்கி பறக்கலானேன். வேகமாக அசைக்கையில் இன்னமும் உந்தப்பட்டு காற்றில் மிதந்த வண்ணமே பாம்புக் கூட்டத்தை தொடர்ந்து பறந்தேன். பின்னால் இருந்து அருகில் வந்த மினி இறக்கையை அசைத்த வண்ணமே என்னைப் பார்த்து புன்னகைத்தாள்.

கடற்கரை ஓரமாக ரோகினி, சந்துரு, அபி, பவி, குமார், ருதி எல்லோரும் புழுக்களாகி விளையாடிக் கொண்டிருந்தார்கள். என்ன விளையாட்டென இனங்கண்டு கொள்ள முடியாத உயரத்தில் நாங்கள் எங்களை பார்த்து உடலசைத்து வழியனுப்புவது போலிருந்தது.

ஏழு கடல் தாண்டிப் போனோம். தூரத்தே நிலத்திலிருந்து ஒளிக்கற்றைகள் வானை நோக்கி பாய்ச்சப்பட்டுக் கொண்டிருந்த மரங்களடர்ந்த தீவுக்குள் அவைகள் தரையிறங்கின. நாங்களும் அங்கு தான் இறங்கினோம்.

உடலைக் குளிரப் பண்ணும் சுகந்தம் எங்கும் நிறைந்திருந்தது. அது சந்தன வாசமென மினி கூறிக் கொண்டு மூச்சை இழுத்து நெஞ்சை நிரப்பினால்.

நிலம் ஒளியை வெளிப்படுத்தவில்லை என்பதை கண்டு கொண்ட நாங்கள் பரவலாய் சிதறிக் கிடந்த சிறுசிறு கற்கள் உள்ளங்கையளவிதமாக கிடந்தவை தான் ஒளிர்ந்து கொண்டிருந்தன.

"இவைகள் நாகரத்தினமாக இருக்க வேண்டும் நாகத்திலுள்ள அதியுயர் செறிவுடைய புராதனமான விசம்-கட்டியாகி பாம்புகள் மூப்படைந்து கண்கள் குருடாகிப் போகும் போது அவற்றுக்கு ஒளி கொடுப்பவையாக இருக்கும்" புதிர்க் கதையொன்றை மினி இடமிருந்து கேட்டுக் கொண்டிருந்தேன்.

வயது போன பின் வாய்க்குள்ளிருந்து கக்கி அதன் ஒளியில் தான் இரையைத் தேடும் அதன் பின்தான் அவற்றுக்கு இறக்கை முளைத்து ஏழு கடல் தாண்டி சந்தனக் காட்டுக்கு பறந்து வரும் நாம் இப்போது சந்தனக் காட்டில் தான் நின்று கொண்டிருக்கிறோம்.

இவளுக்கு இப்படியான விடயங்கள் நிறையத் தெரியும். என்னுடைய அம்மம்மா மாதிரியே இவளுக்கும் கதைகள் கூற யாரோ இருக்கிறார்கள். இதை விடவும் நிறையவே தேடல் இவளுக்கு உண்டு எதையும் கேள்விக்குள்ளால் வளைத்து இதற்கான மறுமொழி தேடி புத்தகங்களுக்குள்ளும், மூலையினுள்ளும் தொலைந்து போவதும் இயல்பு.

மெதுவாக நகர்ந்தோம் எனது வலது கையையும் அவளது இடது கையையும் உரசிக் கொண்டு பாம்புகள் கழற்றிப் போட்ட பழைய சட்டைகளைப் பார்த்தே முன்னேறினோம். ஒவ்வொரு சந்தன மரத்திலும் அதைக் கட்டிக் கொண்ட வண்ண நிலைக்குத்தாய் பாம்புகள் தொங்கின. விதிவிலக்காய் ஒன்றிரண்டு கம்பு போல நிலத்தில் நின்றன.

ஐந்து மீற்றர் ஆரையில் வட்டமாக பரிதியிலே ஒளி கொண்ட கற்கள் கிடக்க, மையத்தில் பெரிய முட்டையொன்று இருந்தது. கோள வடிவுடைய அதன் ஒட்டுத்தன்மையை கொண்டே முட்டையென ஊகித்துக் கொண்டோம்.

அதை நான் மட்டுமாக கட்டிப் பிடிக்க முடியாததால் எதிரெதிர் திசையில் நின்று கொண்ட இருவரும் இருகைகளையும் விரித்து அணைத்தபடி அதன் சுற்றளவை அளந்து பார்த்தோம். இருவரது நடுவிரல்களும் ஒன்றையொன்று ஒரு இஞ்சி அளவில் தடவிக் கொண்டாலும் கைகளை பிடிக்கக் கூடிய அளவில் அதன் சுற்றளவு இடம் தரவில்லை.

"இது எத்தனை பெரியது" எண்ணிக் கொண்ட கணம் கண்களை நம்ப முடியாத வகையில் எங்கிருந்தோ பறந்து வந்த ஐந்து தலையுடைய நாகம் தலையை விரித்து படமெடுத்து நின்றது ஒவ்வொரு தலையிலும் இருந்து பிளவுபட்ட நா நீண்டு வருவதும் உள் இழுபடுவதுமாக இருந்தது.

கழுத்தின் கீழ்ப்பகுதியில் இருந்து அடி வயிறு வரை இதயம் நிரம்பி துடித்துக் கொண்டிருந்தது. பயம் இறங்கி காற்சட்டையை நனைத்தது. ஆழத்தளை விட்டு விட்டு இருவரும் ஒரே கணத்தில் பூமியை உந்திக் கிளம்பினோம்.

அன்று காலையில் தான் இரண்டு மொட்டுக்களை தந்த அம்மா இன்னும் சிறு பிள்ளையை பால் படுக்கையில் சிறுநீர் கழிப்பதாக திட்டினாள்.

கனவின் படபடப்பும், அகால வேலைச் சைகையையும் உடம்பின் பாகங்களிலிருந்து கடத்தப்பட்டு பொழுதொவொன்றிலும் உறுத்திக் கொண்டே இருந்தது.

## 4



நாங்கள் சந்திப்பதற்கான நேரம் கடந்து அரைமணி நேரம் கழிந்த பின் தான் மினி வந்தாள். இன்னமும் ராகவன் வரவில்லை இந்தாலும் அன்றைய பொழுதை திட்டமிட்ட முறையில் கழிக்க அம்மம்மாவை கூட்டிக் கொண்டு சென்று மாமரத்தின் கீழ் பன்பாயை விரித்து இருக்கச் செய்து அவளை சூழ நாங்கள் அமர்ந்து கொண்டோம் அன்று அக்காவும் வந்தாள்.

கிழமையில் ஒரு நாள் அம்மம்மாவிடம் இருந்து கதைகளை

https://tamileelamarchive.com/

கேட்டறிவது வழக்கமான செயல் அந்தக் கிழமையின் கதைக்கான நாளையும் நேரத்தையும் பாடவேளையின் இடையில் கதைத்து தீர்மானித்துக் கொள்வோம். மூவரும் ஒரே பாடசாலை என்பதால் அதில் எந்த இடரும் நுழைந்திருக்கவில்லை. இது மூவரதும் வாராந்த அட்டவணையில் இறுக்கப்பட்ட மாற்ற முடியாத ஒன்று. அக்காவுக்கு விருப்பு இல்லா விட்டாலும் அவளும் சில வேளைகளில் வந்து கலந்து கொள்வாள். அம்மம்மா தான் எங்களுக்கு சொல்ல வேண்டிய கதைகளை தீர்மானிப்பாள். சிலவேளை அம்மப்பாவினுடைய கதைகளையே அளப்பார்.

அப்போதைய கணத்துக்கான கதைகளை அவள் ஒழுங்கு படுத்த மௌனித்திருந்தாள். அவள் கதை சொல்லும் போது அக்கறையுடன் கேட்க வேண்டும். அடிக்கடி 'ம்' கொட்ட வேண்டும். இல்லா விட்டால் கோபம் வந்து துரத்தி விடுவாள். அப்படி முன்பொருமுறை நடந்திருக்கிறது மௌனத்தைக் கலைத்து 'கடலில் எப்படி அலைகள் வந்தது தெரியுமா?' என்ற கேள்வியுடன் தொடங்கினாள்.

கடலில் அலை உருவான கதை தொடங்கியது. திருமணம் முடிந்து பல ஆண்டுகள் கழிந்த பின்னும் குழந்தைகள் இல்லாததால் கணவனும், மனைவியும் வேதனைப்பட்டு கோயிலையும் , மரங்களையும் சுற்றி வந்தார்கள். ஊருக்கு வந்திருந்த பெரிய சாமியார் ஒருவரிடம் அவர்கள் தங்கள் குறையை கூற சாமியாரும் அவர்கள் இருவரின் வேதனையை உணர்ந்து கொண்டு அழகான ஒரு மாம்பழத்தை அவர்கட்கு கொடுத்து பெரிய பானை ஒன்றில் அதை போட்டு பதினைந்து நாட்களின் பின் சாமி படத்துக்கு முன் வைத்து திறந்து பார்க்கச் சொல்லி ஆசீர்வதித்து அனுப்பினார். பக்குவமாக பழத்தை கொண்டுவந்தார்கள். புதிய பெரிய பானையொன்றில் பழத்தை இட்டு சாமி அறையினுள் வைத்தார்கள் பதினைந்து நாட்கள் எப்போது முடியும் என இருவரும் எதிர்பார்ப்புடன் இருந்தார்கள். உடனேயே திறந்து பார்த்துவிட வேண்டுமென ஆசை இருந்தாலும் சாமியாரின் உத்தரவின்படி இடையில் திறக்கவில்லை.

சரியான நாளும் வந்தது. இருவரும் குளித்து இறைவனை கும்பிட்டு பானையைத் திறந்தார்கள். அவர்களின் கண்ணையே அவர்கட்கு நம்ப முடியவில்லை. பானையினுள் அழகான பெண் குழந்தை சிரித்த வண்ணம் கிடந்தது.

தங்கள் உயிரை வைத்து அவளை வளர்த்து வந்தார்கள். அவளும் பெரியவளாக வளர்ந்தாள். ஊரில் எல்லோரும் அவளை 'மாம்பழ அழகி' என்றே அழைத்தார்கள். அந்த ஊரில் யாரிடமும் இல்லாத கொள்ளை அழகு அவளிடம் இருந்தது.

அவர்களின் வீட்டிற்கு முன் வீட்டில் ஒரு கால் இயலாதவன். நடக்க முடியாத ஒருவன் இருந்தான். அவன் அவளை எந்நேரமும் விழுங்கி விடுவது போல முறைத்து பார்த்த வண்ணமே இருந்தான்.

ஒரு நாள் அவள் குளிக்கச் செல்லும் போது வழியில் கிடந்த புன்னைக் கொட்டையை எடுத்துச் சென்று கிணற்றுக்கு அருகில் நட்டு ஒவ்வொரு நாளும் நீர் ஊற்றி வளர்த்து வந்தாள். அது அவளின் உயரத்திற்கு வளர்ந்து நின்றது. ஓடிச் சென்று அதன் மேல் ஏறிக் கொண்டாள்.

நான் வளர்த்த அன்ன மரமே
புன்னை மரமே
முடவன் என்னை புடிக்க வாறான்
ஒரு முழம் நீளு...........

என்றாளாம் அப்படியே அவள் சொல்லச் சொல்ல மரமும் நீண்டு வளர்ந்ததாம். நடக்க இயலாத அவனும் அவளைப் பிடிக்க மரத்தில் ஏறத்தொடங்கினான். மாம்பழ அழகியும் புன்னை மரத்தை வளரச் சொல்லி மேலே மேலே போனால் அவனும் ஏறிக் கொண்டே வருவதைக் கண்டவள் இனியும் முடியாது என நினைத்துக் கொண்டு

நான் வளர்த்த
அன்ன மரமே புன்ன மரமே
முடவன் என்னை புடிக்கப் போறான்
வளைந்து கடலில் விழு

என்றாளாம் புன்னை மரம்கடல் பக்கம் சாயஅவள் கடலில் குதிக்க அவனும் குதித்தானாம். அவள் பெண்ணலையாக மாறி கரைக்கு வந்து சுருண்டு உள்ளே செல்ல, ஆணலையாக மாறி அவன் அவளைத் துரத்திக் கொண்டே இருந்தானாம் அவனால் அவளை இன்னமும் பிடிக்க முடியாமல் துரத்திக் கொண்டே இருந்தானாம்.

கடலில் அலை உருவான கதையை கூறியவள் 'கடல் நீர் ஏன் உப்பாயிருக்கிறது' என மினி கேட்ட கேள்விக்கும் இன்னொரு கதை இருப்பதாக கூறியவள் வருகின்ற கதைக்குரிய நாளில் அதை கூறுவதாகவும் வெற்றிலை போடவேண்டும் என்பதால் அதை இடித்து தரும்படி என்னை அழைத்து எழுந்தவள் மடிக்குள் கிடந்த மணற் பருக்கைகளை தட்டி விட்டு கூனல் முதுகுடன் நடந்து போனாள்.



தொடரும்

https://tamileelamarchive.com/

# பன்னிரு வேங்கைகளின் பத்தொன்பதாவது ஆண்டு நினைவாக...


லெப்.கேணல் புலேந்திரன்


லெப்.கேணல் குமரப்பா


மேஜர் அப்துல்லா


கப்டன் ரகு


கப்டன் நளன்


கப்டன் கரன்


கப்டன் பழனி


கப்டன் மிரேஷ்


லெப்.தவக்குமார்


லெப்.அன்பழகன்


2வது
லெப்.ஆனந்தகுமார்


2வது
லெப்.றெஜினோல்ட்

**நினைவுநாள்:**
**ஒக்ரோபர்-05**

வாழ்ந்த போதும் வரலாறாய் வீழ்ந்தபோதும்
விடுதலையின் வழிகாட்டிகளாயினர்.

சாவுக்கு பின்னான வாழ்வையும் அர்த்தப்படுத்திய
அற்புதப் பிறவிகள்.

இருள் சூழ்ந்த பொழுதில் விடுதலைப்பாதைக்கு
உயிரால் ஒளிப்பாய்ச்சிய உன்னதத் தியாகிகள்

விடுதலையின் உயிர்காக்க நஞ்சுண்ட
எங்களின் நீல கண்டர்கள்.

https://tamileelamarchive.com/

# ஒளியின் கண்ணீரும் கதையின் கதையும்

## 11




https://tamileelamarchive.com/



https://tamileelamarchive.com/

# சொந்தமாய் ஒரு வீடு

திருமதி.வேணி கிருபாகரன்



அவளுக்கு அந்த வீடு மிகவும் பிடித்திருந்தது. கீழேயும் இல்லாமல் உயரத்திலும் இல்லாமல் இரண்டாவது தளத்தில் அழகாய் - அடக்கமாய் அமைந்திருந்தது அந்த வீடு. நீண்ட வராந்தா, விசாலமான அறைகள், வசதியான சமையலறை, சுத்தமான குளியலறைகள், வெளிச்சமான யன்னல்கள். எல்லாமே அவளுக்குப் பிடித்திருந்தது. அவளுக்கு மட்டுமல்ல. அவள் பிள்ளைகளுக்கும் கூட அந்த வீடு நன்றாகப் பிடித்திருக்க வேண்டும். அறைகளுக்குள் ஓடியும், கதவுகளைத் திறந்து மூடியும் விளையாடிக்கொண்டிருந்தார்கள் அவர்கள். இது அவர்களுடைய வீடு. அவர்களுடைய சொந்த வீடு; அந்த நினைப்பே அவளுக்கு பெருமிதத்தைக் கொடுத்தது.



வெளிநாட்டிற்கென்று வந்துவிட்ட இந்த எட்டு வருடங்களில் அவள் வாழ்ந்ததெல்லாம் வாடகை வீட்டில் தான். கணவன் ரவியைத் திருமணம் செய்து வாழ்ந்த போது ஒரு வீடு. முதல் குழந்தையைப் பெற்றெடுத்த போது மற்றொரு வீடு. இரண்டாவது குழந்தை பிறப்பதற்கிடையிலேயே வேறொரு வீடு. எத்தனையோ வீடுகளில் மாறி மாறி வாழ்ந்த போதும் 'சொந்தமாய் ஒரு வீடு வேண்டும்' என மனதில் எழுந்த ஆசையை அவளால் அடக்க முடியவில்லை. அந்த ஆசையின் விளைவாய் இப்போது இந்த வீடு. கணவனுடைய உழைப்பு மட்டுமல்ல. தன்னுடைய கனவும் நிறைந்திருந்த அந்த வீட்டின் ஒவ்வொரு பகுதியையும் இரசனையோடு பார்த்தபடி நின்றாள் அவள்.

வீடு மட்டுமல்ல, வீட்டின் சூழலும் கூட அழகாய் இருக்க வேண்டுமென ஆசைப்படுபவள் அவள். வராந்தாவில் நின்றபடி யன்னலுக்கு வெளியே பார்வையை ஓட்டியவள் பிரமித்தாள். வீட்டுக்கு அருகே பச்சையாய் படர்ந்திருந்த புல்வெளி. இடையிடையே மெல்லிதாய் - உயரமாய் சில மரங்கள். அதற்குமப்பால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வெள்ளையாய் பனி படர்ந்திருந்த மலை. அதனடியில் ஒடுங்கிய சிறியதொரு நீர்ப்பரப்பு. சுவிற்சலாந்து அழகானதொரு இடம் தான். ஆனாலும் அத்தனை அழகும் ஒன்றாய்க் கொட்டியிருந்த அந்த இடத்தில் வீடு வாங்கிய தன் கணவனின் திறமையை அவளால் மெச்சாமல் இருக்க முடியவில்லை. இந்த வீட்டை வாங்குவதற்காக எவ்வளவு சிரமப்பட்டான் அவன் எத்தனையோ வருடங்களாக ஓய்வோ, உறக்கமோ இல்லாத உழைப்பு. விடுமுறையே இல்லாமல் மூன்று இடங்களில் வேலை. போதாததற்கு வங்கியில் கடன். ஆயினும் அவர்களுக்கென்றே சொந்தமாகி விட்ட அந்த வீட்டையும், அந்த வீடு அமைந்திருந்த சூழலின் அழகையும்

https://tamileelamarchive.com/

பார்த்த பிறகு, அனுபவித்த அத்தனை துயரமும் பஞ்சாய்ப் பறந்தது போன்ற உணர்வு அவளுக்கு.

ஊரில் அவள் வாழ்ந்ததெல்லாம் ஒரு சிறிய மண்வீட்டில் தான். வசதிகள் எதுவுமேயில்லாத அந்த வீட்டில் அவள் தாயும் தந்தையும், மூன்று பெண் சகோதரிகளுமாய் வாழ்ந்தார்கள். சிவப்பு மண்ணால் சுவர்களைப் பூசியும் சாணத்தால் நிலத்தை மெழுகியும் எப்போதும் அந்த வீட்டை சுத்தமாக வைத்திருப்பது மூத்த அக்கா தான். வெயில் காலத்தில் அந்த வீடு தருகின்ற குளிர்மையை இப்போது நினைத்தாலும் ஆசையாக இருக்கின்றது அவளுக்கு. எப்போதாவது ஒருமுறை கிடுகு வேய்தல் பிந்துகின்ற நாட்களில் ஒழுகுகின்ற மழைநீரை அவள் சந்தோசமாய் ஏந்தியிருக்கின்றாள். பெற்றோரின் அன்பு, சகோதரங்களின் பாசம். இவற்றுக்கு முன்னால் அந்த மண்வீடு - அதன் வசதிக் குறைவு எதுவுமே அவளுக்கு பெரிதாகத் தெரியவில்லை. ஒருமாரி காலத்தில் ஒரு சாமப் பொழுதில் வீட்டின் மண் சுவர் கரைந்து மழைநீர் முழுவதும் வீட்டிற்குள் புகுந்த அந்தக் கணத்தில் தான் ஒரு கல் வீட்டிற்காக அவள் ஏங்கினாள்.

அந்த ஏக்கமோ என்னவோ வெளிநாட்டிற்கென்று வந்துவிட்ட இந்த எட்டு வருடங்களில் எப்படியாவது ஒரு வீடு வாங்க வேண்டும் என்ற கனவு கொஞ்சங் கொஞ்சமாய் விசுவரூபம் எடுத்து இதோ இப்போது நிறைவேறியிருக்கிறது. சின்ன வயதில் அவள் அனுபவிக்காத வசதிகளையும் சந்தோசங்களையும் அவள் பிள்ளைகளாவது அனுபவிக்க வேண்டும். 'இது எங்கடை வீடு. எங்கடை சொந்த வீடு' என்ற நிம்மதியோடு அவர்கள் வாழ வேண்டும். "அம்மா இந்த அறை எனக்கு" என்றபடி அவளிடம் ஓடி வந்த சாரங்கனை அன்போடு அணைத்தாள் அவள். எல்லா அறைகளைவிடவும் பெரிதாக இருந்த அறையை சுவாமி அறையாக்க வேண்டும். எப்போதுமே சுத்தமாய் - புனிதமாய் ஒரு கோயிலைப்போல அந்த அறையை வைத்திருக்க வேண்டும். மற்றைய அறையை சாரங்கனுக்குக் கொடுக்கலாம். மனதில் திட்டங்கள் போட்டபடியே மகனின் கைகளைப் பிடித்துக் கொண்டு அடுத்த அறைக்குள் நுழைந்தாள் அவள்.

"அம்மா..... நான் படிக்கிறதுக்கு ஒரு மேசை வாங்கிப் போடவேணும். இதிலை என்ரை கொம்பியூட்டரை வைக்கலாம். இதுக்குள்ளை என்ரை உடுப்புக்களை வைப்பன். அந்த யன்னலோடை பூமரம் வைக்க வடிவாயிருக்கும். வைக்கட்டா அம்மா... "அவள் மகனின் விருப்பத்துக்கெல்லாம் தலையாட்டினாள். அவனின் விருப்பங்களுக்கு குறுக்கே நிற்பவளா அவள்? அவர்களின் சந்தோசத்திற்காகத்தானே அந்த வீடு. குதூகலத்துடன் துள்ளிக் குதித்த மகனைப் பார்த்துப் பூரித்தாள் அவள். "அம்மா...... எனக்கும் அறை வேணும்......." என மழலை மொழியில் சிணுங்கிய மகளைப் பார்க்க அவளுக்குச் சிரிப்பாக இருந்தது. "இந்த அறை உங்களுக்குத் தான். இதுக்குள்ளை உங்கடை பொம்மையள், விளையாட்டுச் சாமான்கள் எல்லாத்தையும் வையுங்கோ என்ன" என்றபடி அடுத்த அறையை மகளுக்குக் காட்டினாள் அவள். மகளின் சந்தோசத்திற்கு அளவே இருக்கவில்லை. கைகளைத் தட்டி குதூகலத்துடன் துள்ளிக் கொண்டிருந்தாள் அவள். மற்றைய அறையை வீட்டுக்கு வருகின்ற விருந்தாளிகளுக்கென ஒதுக்க வேண்டும். தேவையான தளபாடங்கள், சாமான்களை வாங்கி அந்த வீட்டை அழகுபடுத்த வேண்டும். அதைவிட வேறு என்ன வேலை அவளுக்கு இனி இருக்கப் போகின்றது.

சமையலறையும் அவளுக்குத் திருப்தியாகவே இருந்தது. அழகான சிறிய அலுமாரிகளையும் அடுக்காக வைக்கப்பட்டிருந்த பாத்திரங்களையும் பார்த்த போது அவளுக்கு அம்மாவின் ஞாபகம் தான் வந்தது. அடுப்போடு போராடிப் போராடியே விறகாகி விட்ட அம்மா இந்த வசதிகளையெல்லாம் அனுபவித்தாளா? உடைந்து போன மண் அடுப்பு. சுவர்களில் துருப்பிடித்த தகரப் பேணிகள். ஓரிரண்டு அலுமினியப் பாத்திரங்கள். இவ்வளவோடும் தான் அம்மாவின் இராச்சியமே நடந்தது. அம்மா கனவிலுமே காணாத வசதிகளோடு இப்போது அவள். காலமாற்றம் என்பது இதுதானோ.

வராந்தாவில் பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் விளையாடுவதற்காகவே வராந்தா பெரிதாக இருக்க வேண்டுமென ஆசைப்பட்டிருந்தாள் அவள். அவள் ஆசைப்பட்டதைப் போலவே பிள்ளைகள் ஓடி விளையாடுவதற்கு ஏற்றதாக இருந்தது அது. பந்தை எறிந்து விளையாடிக் கொண்டிருந்த அவர்களுடன் தானும் ஒரு குழந்தையாய் மாறிப் போனாள் அவள். கைகளைத்தட்டி ஆரவாரம் செய்தபடி எவ்வளவு நேரந்தான் குதூகலத்தோடு இருந்தார்களோ!

கதவு தட்டப்பட அவள் தான் ஓடிச் சென்று கதவைத் திறந்தாள். வெளியே கொஞ்சம் வயதான ஒரு வெள்ளைக்கார மனிதர். "மன்னிச்சுக் கொள்ளுங்கோ. உங்கடை வீட்டிலையிருந்து வாற சத்தம் எங்களுக்கு இடைஞ்சலாய் இருக்குது. நீங்கள் அமைதியாய் இருக்க வேணும்" கொஞ்சம் பணிவாகவும் கொஞ்சம் அதட்டலாகவும் டொச் மொழியில் அவர் கூறியதைக் கேட்டு அவள் திகைத்தாள். பதிலெதுவும் கூற முடியாது வாயடைத்துப் போனவளாய் கதவை மூடிவிட்டு திரும்பினாள். சட்டென விளையாட்டை நிறுத்தி விட்டு வேதனையோடு அவளைப் பார்த்தார்கள் பிள்ளைகள். சிரிப்பும் கும்மாளமுமாய் சற்று முன் வரை சந்தோசமாயிருந்த அவர்களைப் பார்க்க பரிதாபமாக இருந்தது அவளுக்கு.

அவர்களுடைய வீடு - அவர்களுடைய சொந்த வீடு இப்போது அந்நியமாகிப் போன உணர்வு அவளுக்கு. சொந்தமாய் - வசதிகள் நிறைந்ததாய் - அழகாய் இருந்தாலும்கூட வீடு மட்டுமல்ல அந்த நாடும்கூட அந்நியருடையதுதான் என்ற உண்மை அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது. ஊரில் அவள் வாழ்ந்த அந்த மண் வீட்டையும் அந்த வீட்டில் அவள் அனுபவித்த சந்தோசத்தையும் நினைத்துக் கொள்கிறாள் அவள். அப்படியொரு வாழ்க்கை அவள் பிள்ளைகளுக்குக் கிடைக்குமா? மண் வீடென்றாலும் அந்த வீட்டில் அவள் அனுபவித்த அந்தச் சுதந்திரத்தை அவள் பிள்ளைகள் எப்போது அனுபவிக்கப் போகின்றார்கள்? சந்தோசங்களைத் தொலைத்துவிட்டு மௌனமாய் இருக்கின்ற தன் பிள்ளைகளை வேதனையோடு பார்க்கின்றாள் அவள். அவள் மனம் அவர்களது சுதந்திரத்திற்காய் ஏங்கத் தொடங்குகின்றது.

https://tamileelamarchive.com/



# ஒரு இன அடையாளத்தின் பரிணாம வளர்ச்சி


## சிறீலங்காவின் தமிழர்கள் கி.மு 300-கி.பி 1200 வரை

## THE EVOLUTION OF AN ETHNC IDENTITY

### THE TAMILS IN SRILANKA 300 .BCE TO C.1200 CE

■ PROF K.INDIRA PALA

ஆக்கியோன்:- பேராசிரியர் கே.இந்திரபால




சென்ற இதழ்த் தொடர்ச்சி...

### அத்தியாயம் - 03
### பக்கம். 108 -125
### ஆரிய திராவிடக் கருத்து நிலை

ஆரியர்கள் பற்றி ஐரோப்பால் பேசப்பட்டதும் அதை மிகவும் விருப்போடு சிங்கள நாட்டின் விருப்போடு தேசாபிமானிகள் பற்றிக்கொண்டனர் ஆரியர்கள் உயர்வானவர்கள் ஆளப்பிறந்தவர்கள் என்ற கருத்துநிலை ஜேர்மனியின் எழுதப்பட்டது தம்மை ஆளும் வெள்ளை இனங்களுக்கு நிற்கின்றவர்கள் என்று காட்டுவதற்காக சிங்கள கல்விமான்கள் ஆரியச்சிந்தனையை வரவேற்றனர் தமது இனத்தை ஆரிய இனமாக வரித்துக்கொண்டனர் இவ்வாறு பேராசிரியர் வெஸ்லி குணவர்த்தன 1994 இல் கூறினார். ஆரிய மொழி ஆரிய இனமாக மாற்றப்பட்ட விந்தையை நாம் நாசி ஜேர்மனியின் தோல்வி வரை கண்டோம் ஜேர்மனியின் தோல்விக்கும் பிறகு ஆரிய இனம் பற்றிய குரல் தனித்து விட்டது. இலங்கையின் முதலாவது பல்கலைக் கழகம் 1942இல் நிறுவப்பட்டது புராதான கால வரலாறு பற்றிய நூல் எழுதிய டாக்டர் ஜீ.சி.மென்டிஸ் வரலாற்றுப் பேராசிரியராக நியமனம் பெற்றார் ஆரியமொழி பேசுவதால் சிங்களவர்கள் ஆரிய இனத்தவர்கள் என்று மென்டிஸ் தனது நூலில் (EARLY HISTORY OF(CEYLON.1932) எழுதியுள்ளார் சிந்தனையின் அடிப்படைக் கோளாறு என்று இதுதான் ஒரு மொழியைப் பேசினால் இனம் வேறாகி விடுமா? இந்தியாவிலும் ஆரியம் அரசியலாகி விட்டதை இந்துநதிப் பள்ளத்தாக்கின் மூத்தக்குடிகளார் என்பது தொல்லியல் மொழியியல் சான்றுகளை கடந்து இந்து மதத் தீவிரவாதத்தின் அங்கமாகிவிட்டது. ஆரியர்கள் உள்வரவில்லை அவர்கள் ஏற்கனவே அங்கு இருந்தார்கள் என்று கருத்து தெரிவிக்கப்படுகிறது. சிறீலங்காவில் ஆரியர்கள் திராவிடர்கள் என்று மக்களை கூறும்போது எழுத்துக்களும் சிந்தனைகளும் தெளிவாக காணப்படுகின்றன 1980களில் சுதர்ஷன் செனவிரத்தினா, வெஸ்ரிலிகுணவர்தன போன்றோர் ஆய்வுகளை மேற்கொண்டு தமது கண்டு பிடிப்புக்களை வெளியிட்டபோது நிலமை ஓரளவுக்குச் சீரானது சிங்களவர்களை ஆரியக் குடியேற்ற வாசிகள் என்று கூறியும் எழுதியும் வந்த பேராசிரியர் செரைத் பறணவிதானவை மிகப் பெரிய குற்றவாளியாக இத்தொடர்பில் காணவேண்டும்.

### அத்தியாயம் 04:
### பக்கம் 126 - 147
### இல மற்றும் தாமேதா- குழந்தைப்பருவம்

கிறிஸ்துவுக்கு முந்திய ஆயிரம் வருட காலத்தில் ஸ்ரீலங்கா என்றதொரு அரசாங்கமோ, சிங்களம் என்ற மொழியோ இலங்கைத்தீவில் இருக்கவில்லை அதேபோல் தமிழ் என்ற மொழியும் இருக்கவேயில்லை சுருக்கமாக கூறுவதாயின் சிங்கள, தமிழ் இன மொழி அடையாளங்கள் அப்போது உருவாகவில்லை மெசோலிதிக் அதாவது மத்திய பெருங் கற்காலத்தில் இப்படியான வேறுபாடுகள் தோன்றுவதற்கு வாய்ப்பில்லை இரும்புப்பாவனை யுகம் ஆரம்பித்தபின் சிறிது சிறிதாக நாகரிக வளர்ச்சியோடு இன அடையாள வளர்ச்சியும் ஏற்பட்டிருக்கலாம் மேற்கூறிய ஆயிரம் வருடத்தில் சிங்கள இனத்தவர் என்றொருவர் இருக்கவில்லை, அவர்கள் வெளியிடத்தில் இருந்து இலங்கைத் தீவுக்கு வரவேயில்லை ஏற்கனவே இங்கு வாழ்ந்த மக்களின் ஒரு பகுதியினரே சிங்கள இனமாக உருப்பெற்றனர் இலங்கைத் தமிழர்களும் அப்படியேதான் ஏற்

https://tamileelamarchive.com/

கனவே இதில் குறிப்பிட்டதுபோல் காலப் போக்கில் வேறு மக்கள் கூட்டங்கள் சிங்கள மற்றும் தமிழர்களோடு இணைந்திருக்கலாம் தமிழர்கள் சிங்களவர்களாகவும் சிங்களவர் கள் தமிழர்களாகவும் மாறி இருக்கலாம்.

சிங்கள இனம், சிங்கள மொழி ஆகிய வற்றின் பரிணாம வளர்ச்சி பற்றியும் ஆய் வுக்கு 'இல' என்ற குறியீடு பற்றிய பரந்துபட்ட ஆய்வு பயனுள்ளதாக அமையும் பலதரப் பட்ட மொழிகளில் சில என்பது 'ஈழ' ஹெல எழு, சிஹல, சிம்ஹல, சலை, செலி, சிலே என்று மாற்றம் பெற்றுள்ளது கி.மு இரண் டாம் நூற்றாண்டிற்கும் கி.பி ஐந்தாம் நூற் றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இவை அனைத்தும் பயன்பாட்டிலிருந்ததில் இருந் துள்ளன முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும் இக்காலப்பகுதியில் 'ஹெல' எழு என்பன இரண்டும் பயன்படுத்தப்படவில்லை அனைத்தும் ஒரு குறிப்பிட்ட சிகை குழு வையும் அந்த இனக்குழு பேசிய மொழி யையும் குறிப்பிடுகின்றன சற்றுப்பிந்தி அந்த இனக்குழு வாழ்ந்த நாட்டையும் அவை குறிப்பிடத் தொடங்கின இதற்காக மேற் கூறியவற்றோடு திவீப்ப, தீப, திவா, திபா, என்பன பின்னிணைக்கப்பட்டன.

இதே காலப்பகுதியில் தமே, தமேல என்ற குறியீடுகள் பிறிதோர் இனக் குழலவைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டன தமில என்றும் அவை மாறத் தொடங்கின சிறிது காலத்தின் பின் தெமல் என்றும் சில மூலகங்கள் அறியத்தருகின்றன இன்னு மோர் இனத்தின் தோற்றத்தையும் வளர்ச்சி யையும் குறிப்பிடும் தோற்றப்பாடாகும் 'இல' என்ற குறியீடு எப்படித் தோன்றியது என்று தெரியவில்லை, அது பற்றிய சூடான விவா தங்கள் இன்றும் நடைபெறுகின்றன இது பிராகிருத மொழிச் சொல்லாகவும் இருக் கலாம். இலகுவிலிருந்து தமிழ் சொல்லான ஈழம் தோன்றியிருக்கலாம் என்று கொள்ளப் படுகிறது. பழைய சிங்கள மொழிப் பெயர் களான ஹெல, எழு என்பனவும் இல விலி ருந்து தோற்றியிருக்கலாம் புராதனகாலக் கிரேக்க மொழியில் சாலை, சேசே, சீலே என்றும் இது உருமாறியுள்ளது. இவை அனைத்தும் மொழியியல் அறிஞர்களின் ஆய்வுக்கு உட்பட்ட விடயங்கள்.

பழைய சிங்களக் கல்வெட்டுக்களிலும் இலக்கியங்களிலும் 'ஹெல' (HELA) 'எழு' (ELU) என்பன பயன்படுத்தப்படுகின்றன தமிழில் இது 'ஈழ' என்று மாறியுள்ளது. மிகப் பழைய தமிழ் இலக்கிங்களில் இது 'ஈழம்' என்று ஒரு குறிப்பிட்ட இனம் வாழும் நாட் டைக் குறிப்பிடும் சொல்லாகப் பயன்படு கிறது தமிழ் நாட்டார் மிகப் பழமைவாய்ந்த பிரம்மி மொழிக் கல்வெட்டுக்களில் 'ஈழக் குடும்பிகள்' என்று குறிப்பிட்டுள்ளது. அதா வது 'ஈழக் குடும்பஸ்தன்' என்று பொருள் அதேபோல் ஸ்ரீலங்காவின் பிரம்மிக் கல்வெட் டுக்களில் 'தமேத கஹபதி' (DAMEDA GAHAPATI) என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அதாவது தமிழ்க் குடும்பஸ்தன் என்று பொருள்.

கி.மு இரண்டாம் நூற்றாண்டு, கி.பி இரண்டாம் நூற்றாண்டு ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அனுராதபுர ஆள்புலத்தின் தலைமை இனமாக 'இல' இடம் பெற்றதை ஆய்வுகள் உறுதி செய் கிறான் கிறிஸ்துவுக்குப் பிந்திய மூன்றாம் நூற்றாண்டில் நிலவின பாளி மொழி வடிவ மான 'ஹல' பாவனைக்கு வந்துவிட்டது. அதே காலத்தில் சமஸ்கிருத மொழிவடிவ மான சிம்ஹலவும் பாவனையில் இருந்து மகாபாரதம், அர்த்தசாஸ்திரம் போன்ற சமஸ்கிருத நூல்களில் சிம்ஹல என்ற குறிப்பு இடம் பெறுகிறது. சமஸ்கிருதக் குடும்பத்தைச் சேர்ந்த வட இந்திய மொழி யான பிராகிருதத்தின் இலங்கைத்தீவு வரு கையாலும் அதன் சிங்கள மொழியுடனான சேர்க்கையாலும் பாரிய வரலாற்று மாற் றங்கள் நடைபெற்றன கடந்த இரு தசாப் தங்களுக்கு மேலாக அனுராதபுர வட்டகை யில் நடக்கும் தொல்லியல் ஆய்வுகள். பிராகிருத மொழியின் பிரசன்னத்தை உறுதி செய்கின்றன 1989 தொடக்கம் இப்பகுதியில் நடக்கும் புதைபடிவ ஆய்வுகள் பிரம்மி எழுத் துக்கள் பொறிக்கப்பட்ட பல மட்பாண்டத் துண்டுகளை வெளிக்கொணர்ந்துள்ளன. படிக்கக் கூடிய எல்லா இவ்வகை எழுத்துக் களும் பிரம்மி மொழியாக அடையாளம் காணப்பட்டுள்ளன இவை அனைத்தும் இரும்பின் பயன்பாடு வருகை தந்த தொடக்க காலத்தைச் சேர்ந்தவை என்றும் ஆய்வாளர் கள் உறுதியாக முடிவு கட்டியுள்ளனர். வட இந்தியப் பிராகிருத மொழி தென் இந்தியா ஊடக இலங்கைத் தீவுக்கு வந்துள்ளதை இது உறுதி செய்கிறது. பிராகிருத மொழி யினால் பிற மொழிகள் மீது ஆதிக்கம் செலுத்தும் வலு இருந்தது அதன் வருகைக் குப்பின் சில இந்திய மொழிகள் மறைந்து விட்டன. பல மொழிகள் பிராகிருதத்துடன் கலந்து புதிய வடிவம் பெற்றுள்ளன தமிழ் பிராகிருதத்தை உள்வாங்கினாலும் இலக் கிய வளம் காரணமாகத் தாக்குப் பிடிக்கும் வரம் பெற்றது ஆனால் தெலுங்கு மொழியில் பல இந்திய ஆரியப் பிராகிருதச் சொற்கள் இன்று மேலெழுந்து நிற்கின்றன ஸ்ரீலங்கா வில் பிராகிருதமும் பௌத்த மதமும் இணைந்து வேறுபட்ட மொழியையும் மதத் தையும் கொண்ட இனத்தை உருவாக்கி யுள்ளன.

வரலாற்றுக் காலத்தில் சிங்கள இலக்கியம் தெமல என்றும் பாளி இலக்கியம் தமிலா என்றும் தமிழர்களைக் குறிப்பிடு கின்றன 9ம் 10ம் நூற்றாண்டு சிங்களக் கல் வெட்டுக்களில் தெம்ல என்று குறிப்பிடப் படுகிறது கி.மு இரண்டாம் நூற்றாண்டின் பிரம்மி கல்வெட்டுக்கள் இலங்கைத்தீவில் வாழ்ந்த ஒரு இனத்தை தமேதா (DAMEDA) என்று குறிப்பிடுகின்றன பாளி மொழியில் தமிலா என்று குறிப்பிடப்படும் இனமும் தமேதா இனமும் ஒன்றே தான் என்று முடிவு கட்டப்பட்டுள்ளது. இன்னுமோர் மயக்கம் இருப்பதையும் கவனத்தில் எடுக்க வேண் டும் தமிழ் நாட்டிலுள்ள சில புராதன காலப் பிரம்மிக் கல்வெட்டுக்களில் தமேதாவிலுள்ள 'தா' தமிழிலுள்ள 'ழா' வைக்குறிக்கும் ஒலி யைக் குறிப்பிடும் வகையில் பொறிக்கப்பட்டி ருக்கலாம் என்று நம்பப்படுகிறது இப்படி யான மாறுபட்ட கருத்துக்களைச் சிக்கறுப் பதற்கு இன்னும் காலம் செல்ல வேண்டும்.

அண்மைக் காலம் வரை தமேத தமிலா என்ற மக்களை அந்நிய நாட்டவர்களாகவும் ஸ்ரீலங்காவின் ஆதிகுடிகளில் ஒரு பகுதியி னர் அல்ல வென்ற போக்கும் சிங்கள அறி ஞர்கள் மத்தியில் நிலவியது புதிய வரலாற் றாசிரியர்கள் தோன்றிய பின்பு கண்ணோட் டங்கள் வித்தியாசமாக அமைகின்றன நாடு களும், எல்லைகளும் தோன்றாக் காலத்தில் உள்நாட்டான், வெளிநாட்டான் என்ற வேறு பாட்டை நிலை நிறுத்த இயலாது தென் இந்தியாவும் இலங்கைத் தீவும் ஒரே தரைப் பரப்பாக இருந்தன இரண்டு தரைப்பரப் புக்களாகப் பிளவு பட்ட பின்பும் மக்களின் இருவழி நகர்வு தொடர்ந்த படி இருந்தன கடல் ஒரு தொடுக்கும் ஊடகம் என்று ஏற் கனவே சொல்லிவிட்டோம் அரசின் கைப்பிள் ளையாக வரலாறு அமையும் போது பல குளறுபடிகள் நடக்கின்றன தென் இந்தி யாவிலும் இலங்கைத்தீவிலும் இன அடை யாளங்கள் இரும்புப் பாவனையின் வருகை யோடு, அதாவது அதன் தொடக்க காலத் தோடு ஆரம்பிக்கின்றன ஆகையால் கற் காலம் முடிவுற்று இரும்பு உலோகத்தின் யுக ஆரம்பத்தை தென் இந்திய ஸ்ரீலங்கா பிராந் தியத்தின் இன வரம்புகள் தோன்றிய யுக மாகவும் கொள்ளலாம்.

அத்தியாயம் - 05
பக்கம் 148 -169
வரலாற்றுக் காலத்தின் ஆரம்பம்
கி.மு 250 -கி.பி 300வரை

கி. மு ஆயிரம் வருட காலத்தின் (MIL-LENNIUM) நடுப்பகுதியில் ஸ்ரீலங்காவில் எழுத்துருவம் காணப்படுவதாக இருந்தாலும் அது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவும், கிட்டத்தட்ட கிறுக்கல்கள் போல் இருப்பதாக வும் அமைகின்றன சில மட்பாண்டத் துண்டு களில் பிரம்மி எழுத்துக்கள் பொறிக்கப்பட் டுள்ளன எழுத்துப்பதிவின் ஆரம்பமாகக் கொள்வதற்கு இவை போதுமானவை என்று

https://tamileelamarchive.com/

சிரான் தெரனியாகல கருதுகிறார் ஆனால் மூன்றாம் நூற்றாண்டில் இத்தீவில் புத்த மதம் பரவத் தொடங்கிய பின்பு தான் வரலாற்றுப் பதிவுகளும் பாரம்பரிய நம்பிக்கைகளும் எழுத்து வடிவம் பெற்றன பாளிமொழி ஏடுகளும், நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்களும், மட்பாண்டத் துண்டுகளும் இதற்குச் சான்று பகிருகின்றன இவற்றை ஒரு குறிப்பிட்ட இனத்தோடு தொடர்பு படுத்திப் பார்ப்பது சரியா என்று முன்னணி வரலாற்றாசிரியர்கள் கேட்கின்றனர்.

இக்காலப்பகுதியில் இத்தீவில் தமிழர்கள் வாழ்வதற்கான ஆதாரங்களை நாம் கல்வெட்டுக்கள், மட்பாண்டத் துண்டுகள், தொல்லியல் சான்றுகள், பாளி நூல்கள் என்பனவற்றிலிருந்து பெறவேண்டும் தீபவம்சம், மகாவம்சமும் தமிழர்கள் பற்றிய குறிப்புக்களைத் தருகின்றன இக்காலப் பகுதியில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் முற்று முழுதாகத் தென் இந்தியத் தமிழர்கள் பற்றியே குறிப்பிடுகின்றன. அவற்றில் இலங்கைத் தமிழர்கள் பற்றிக் குறிப்புக்கள் ஒன்றும் காணப்படவில்லை பாளிமொழி இலக்கியங்களில் அனுராதபுரத்தின் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றிய தமிழர்கள் பற்றியே குறிப்பிடுகின்றன அவற்றில் இலங்கைத் தமிழர்கள் பற்றிக் குறிப்புக்கள் ஒன்றும் காணப்படவில்லை பாளிமொழி இலக்கியங்களில் அனுராதபுரத்தின் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றிக் கூறும் பகுதியில் காணப்படுகின்றன மகாவலி நதி ஒரத்திலுள்ள தரைப்பரப்பில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களை துட்டகாமினி வென்றதாக மகாவம்சம் கூறுகிறது இது எவ்வளவு தூரம் நம்பத் தகுந்தது என்று தெரியவில்லை இக்காலப்பகுதிக்கான ஏடுகளில் கூறப்படும் அனுராதபுரத்தை ஆட்சி செய்த 29 மன்னர்களில் 9பேர் தமிழர்கள் என்று நன்கு அடையாளம் காணப்பட்டுள்ளனர். குடிமக்களாக வாழ்ந்த தமிழர் பற்றிய தகவல் தீபவம்சம் மகாவம்சம் போன்றவற்றில் இல்லை.

இக்காலப்பகுதிக் கல்வெட்டுக்கள் புத்த மத பீடற்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள், நன்கொடைகள் என்பன பிராகிருத மொழியிலேயே உள்ளன வழங்கல்களைச் செய்தவர்களின் இனத்தை அவற்றில் இருந்து கூற முடியவில்லை தமிழர்களும் கல்வெட்டுக்களில் பிராகிருத மொழியைப் பயன்படுத்தினார்கள் நன்கொடை வழங்கியோரில் தமிழர்களும் இருந்தனர் தமது பெயரையும் அவர்கள் பிராகிருத மொழிக்கு மாற்றி வைத்திருந்தனர் மிகச் சிலர் தமேதா என்ற இனக் குறியீட்டுப் பெயரைப் பயன்படுத்தியது மூலம் தம்மை தமிழர்களாகக் காண்பித்தனர். மேற் கூறிய கல்வெட்டுக்கள் பிராகிருத மொழியில் இருந்தாலும் தீவில்

சுடுமண் வளையக்கிணறு



சாட்டி

யாழ்ப்பாணம் சாட்டியில் கண்டுபிடிக்கப்பட்ட 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்லியல் சுடுமண் வளையக்கிணறு வரலாற்றாய்வாளர் புஷ்பரட்ணம் தலைமையிலான குழுவினரால் இது கண்டுபிடிக்கப்பட்டது.

வழங்கிய பிறமொழிச் சொற்களைக் கொண்டிருந்தான் இதனால் பிறமொழி பேசியோரின் இருப்பை உணர முடிகின்றது உதாரணத்திற்கு இக்கல்வெட்டுக்களில் காணப்படும் திராவிட மொழிச் சொற்களைப் பார்ப்போம் 'மருமகன்' என்ற உறவு முறைச் சொல் முக்கியமாகக் காணப்படுகிறது 'பெருமகன்' என்பது இன்னுமோர் உதாரணம் சங்க இலக்கியத்தில் காணப்படும் 'வேளிர்' என்ற சொல் மேற்கூறிய கல்வெட்டுக்களில் வருகின்றது. மகனின் பெயராகத் தந்தையின் பெயரைச் சூட்டும் தமிழர்களின் பேரன் முறையும் இக்கல்வெட்டுக்களில் படிக்கக் கூடியதாக இருக்கிறது.

பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தனா கூறுவது போல் இக்காலத்தின் குடும்ப உறவுமுறைகளில் அரசியல் கட்டமைப்புக்களில் தமிழர்களின் செல்வாக்கு மிக அதிகமாக இருத்தல் வேண்டும் எம். டபிள்யூ. எஸ்.டி. சில்வா 'முற்காலச்சிங்களக் கல்வெட்டுக்களில் திராவிட மொழிப் பாதிப்பு மிக அதிகம்' என்கிறார் ஆதி சிங்கள மொழியில் சில ஒலி வடிவங்கள் மறைவதற்கு தமிழின் தாக்கம் காரணமாக அமைவதை மகாவம்ச மொழி பெயர்ப்பாளர் வில்லியம் கைகர் குறிப்பிட்டுள்ளார். தமிழ் வர்த்தகர்களுடைய பிரசன்னம் பற்றிய உறுதியான தகவல்களையும் தமிழ் மொழி நாணயங்கள் பற்றிய செய்திகளையும் ஒஸ்மன்ற் போபியாராய்ச்சி வெளிக் கொணர்ந்துள்ளார். தமிழ் மொழி பொறித்த நாணயங்கள் வடக்கில் மாத்திரமல்ல தெற்கிலும் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தீவின் பல மொழி நூல்கள் அனுராதபுரத்தை மையப்படுத்தி, அதை யொரு ஒற்றை அரசியல் பீடமாகச் சித்தரிக்கின்றன. இந்தத் தவறை அண்மைக்காலச் சிங்கள ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இலங்கையின் வரலாறு ஒரு இனத்தின் ஒரு அதிகார பீடத்தின் வரலாறு அல்ல கல்வெட்டு ஆதாரங்கள் பிற அதிகார மையங்கள் இருந்ததை உணர்த்துகின்றன இக்காலப் பகுதிக்குரிய பிரம்மிக் கல்வெட்டுக்களை ஆய்வு செய்த லெஸ்லி குணவர்த்தனா 28 குறுநில மன்னர் பீடங்களை அடையாளம் கண்டுள்ளார். இந்த 28 இல் வடபால் அமைந்துள்ள வவுனியா மாவட்டத்தின் பெரிய புளியங்குளமும் ஒன்று வடக்கு, மத்திய மற்றும் தென் கிழக்கு பாகங்களில் மிகுதியானவை காணப்படுகின்றன நாகதீபத்திலும் ஒரு குறுநில ஆட்சி நிலவியதற்கான சான்று கிடைத்துள்ளது ஆனைக்கோட்டையில் மீட்கப்பட்ட சடலத்தின் முத்திரையில் 'கோ' என்று பொறிக்கப் பட்பட்டுள்ளதை மறக்கலாகாது கோ என்றால் மன்னன் என்று பொருள். பொம்பரிப்புவில் காணப்படும் ஈழத்தாழிகளில் வேல்

https://tamileelamarchive.com/

அடையாளம் பொறிக்கப்பட்டுள்ளன. இது தென் இந்தியாவின் வேளிர் இனத்தின் குறியீடாகும் அவர்கள் மிகப் பழைய காலத்திலே இலங்கைக்கு வந்துள்ளார்கள் என்கிறார் சுதர்ஷன் செனவிரத்தினா வட இலங்கைக்கும் அவர்கள் சென்று குடியேற்றத்தை காண முடிகின்றது என்றும் அவர் தெரிவிக்கிறார். அத்தோடு பட்டன் என்ற சொல் வடபகுதித் துறைமுகங்கள், நகரங்கள் ஆகியவற்றின் பெயர்களோடு இணைத்துப் பயன்படுத்துவது ஒரு தமிழ் வழக்கம் பட்டினம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபு பட்டன ஜம்புகோலப்பட்டன, மகாபட்டன (மாந்தை) கோனகமமகாபட்டன (திருகோணமலை) என்பன உதாரணங்களாகும்.

கி.மு மூன்றாம் நூற்றாண்டு காலம்வரை பத்து அல்லது பதினொரு நாக இன அரசர்கள் அனுராதபுரத்தை ஆட்சி செய்துள்ளனர் பாளிமொழி வரலாற்று ஏடுகளில் இருந்து இதை அறிய முடிகின்றது அனுராதபுர மன்னர்கள் நாக இனத்தின் உயர் குடும்பங்களுடன் திருமண உறவுகளை வைத்திருக்கலாம் ஆட்சி அதிகாரங்களைத் தமது கைகளில் வைத்திருந்த சில தலைவர்களின் மனைவியருக்கு தமிலாதேவி (தமிழ் இராசகுமாரத்தி) என்று பெயருள்ளதாக பாளிநூல்கள் தெரிவிக்கின்றன மொத்தத்தில் கி.மு 250 தொடக்கம் கி.பி 300 வரையிலான காலப்பகுதியில் இரு இனங்களின் தோற்றம் தெளிவாகத் தெரிய ஆரம்பிக்கிறது.

அத்தியாயம் - 06
பக்கம் 170 - 224 வரை
ஹெலவும் தெமலவும் கி.பி 300 தொடக்கம் கி.பி 900வரை

கி.பி நான்காம் நூற்றாண்டு தொட்டு கி.பி ஒன்பதாம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியில் தமிழர்கள் குடியேறிய அல்லது தமிழர்கள் என்ற இன அடையாளத்தோடு வாழ்ந்த வடக்கு கிழக்கு பற்றிய தகவல் மிக அரிதாகவே கிடைத்துள்ளன இந்த மக்கள் பற்றி பாளி மற்றும் சிங்கள நூல்கள் ஒன்றுமே கூறவில்லை சில கல்வெட்டுக்கள் கிழக்கில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன வடக்கில் இக்காலப்பகுதிக்குரிய கல்வெட்டுக்கள் கிடைக்கவில்லை தொல்லியல் சான்றுகள் வெளிவரத் தொடங்கியுள்ளன, அவை முறையாக காலக் கணிப்பீட்டு செய்யவேண்டிய நிலையில் உள்ளன தென் இந்திய தமிழ் இலக்கிய மூலாதார நூல்களிலும் இலங்கையில் வாழும் வட கிழக்குத் தமிழர்கள் பற்றிய விரிவான தகவல் காணப்படவில்லை வரலாற்றுச் சான்றுகள் குறைவாக இருப்பினும் இலங்கைத் தமிழினத்தின் வளர்ச்சிப்பாதையில் இக்கால கட்டம் மிகவும் முக்கியமானதாக அமைகிறது. தமிழும் சைவ மதமும் இக்காலத்தில் வடக்கு மக்களின் முக்கிய இன அடையாளமாக வளர்ச்சிக் காணத் தொடங்கின.

ஒன்பதாம் நூற்றாண்டளவில் நாக இனம் மறையத் தொடங்கிவிட்டது. தனி மனிதர்களின் பெயர்களில் அது ஒட்டிக் கொண்டிருந்தாலும் நாக இனம் ஹெல மற்றும் தெமல இனங்களுக்குள் கரைந்து போய்விட்டது தென் இந்தியாவிலும் வடக்கில் தமிழினம் வளர்ச்சி காண்பதற்கு ஆந்திராவின் தெலுங்கர்களும் உதவியுள்ளனர் தொல்லியல் ஆய்வுகளின்படி வடக்கிலும் கிழக்கிலும் வெளிக்கொணரப்பட்ட கல் வடிவங்கள் ஆந்திராவின் புத்த மதச் சின்னங்களை ஒத்ததாக இருக்கின்றன யாழ்ப்பாண மாவட்டச் சுண்ணாகத்தில் கி.பி 5 - 6 நூற்றாண்டிற்குரிய அமராவதி (ஆந்திரா) பணியில் உருவாக்கப்பட்ட பாரிய புத்தர் சிலை மீட்கப்பட்டுள்ளது. அது இப்போது அனுராதபுரம் நூதன சாலையில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது கேரள நாட்டின் பாதிப்பும் வடக்கு கிழக்கில் காணப்படுவதால் இந்த முடிவை எடுக்க முடிகிறது யாழ்ப்பாணம் என்ற பெயர் முதன் முறையாக 9ம் நூற்றாண்டில் அருணகிரிநாதரின் திருபுகழில் காணப்படுகிறது. அனுராதபுரத்திற்குத் தமிழர்களின் வருகை தொடர்ச்சியாக மேற்கூறிய காலப்பகுதியில் நடை பெற்றது அனுராதபுரத்தில் நடந்த அரசர்களுக்கு இடையிலான போட்டி போர்களுக்குத் தமிழ் நாட்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. இது பல தடவை நடந்ததை வரலாற்றில் காணமுடிகிறது இது காலப்போக்கில் தமிழர்களின் அனுராதபுர ஆதிக்கத்திற்கு அடிகோலாகியது பல்லவ மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் வெளி நாட்டு வர்த்தகம் பல்கிப் பெருகியது தமிழ் வர்த்தகப் பெருமக்கள் அனுராதபுரத்தில் பரவியபோது தமிழ் மகாயானத் துறவிகள் அனுராதபுரம் வந்து சேர்ந்தனர் தமிழ் நாட்டின் சிற்பக் கலைஞர்களும் அடி மட்டத் தொழிலாளர்களும் கட்டி நிர்மாண வேலைகளுக்காக வந்து சேர்ந்தனர் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களில் பணியாற்றுவதாகவும் தமிழ் நாட்டவர் இங்கு வந்து சேர்ந்தனர்.

போல் பீரிஸ் கி.பி 300க்கும் கி.பி 900க்கு இடைப்பட்ட 600 வருடகாலத்தில் இத்தீவில் வாழ்ந்த தமிழர்களின் முழுமையான வரலாற்றைப் பதிவு செய்ய முடியவில்லை வடபகுதியில் ஒரு இனம் வளர்ந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது வரலாற்றிற்கு முந்திய காலந்தொட்டு நிலவிய தென் இந்தியத் தொடர்பு தொடர்ந்தபடி இருந்தது அரசியல், பொருளாதார, சமூக அடிப்படையில் இரு பக்க ஒன்றிணைவும் சங்கமும் நடை பெற்றது 1918, 1919 இல் போல் பீரிஸ் விஜயனின் வருகைக்கு முன்பே செல்வச் செழிப்புமிக்க பாகமாக வடபுலம் இருந்ததாகத் தெரிவித்துள்ளார். தென் இந்தியக் கரைக்கு மிக அண்மித்தாகவுள்ள இப்பாகம் மக்கள் குடியேற்றம் இல்லாது எவ்வாறு இருக்க முடியும் என்று அவர் வினாவியுள்ளார் (JOVRNAL OF THE ROYAL ASIATIC SOCIETY VOL 25 PAGES 65.72).

கி.பி 300 கும் கி.பி 600க்கும் இடைப்பட்ட காலத்தின் முற்பகுதி தொட்டு பௌத்தமும் ஜைன மதமும் தென் இந்தியாவில் மேல் நிலையில் இருந்தன கி.மு 300க்கு முன்னர் ஆந்திராவில் புத்த மதம் நன்கு வியாபித்திருந்தது தமிழர் பகுதிகளிலும் புத்த மதம் நன்கு பரவியிருந்தது அத்தோடு அரசர்களும் புத்த மதத்தைத் தழுவியிருந்தனர் காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், உறையூர், மதுரை என்பன புத்த மதத்தினை மத பீடங்களாக இருந்தன பௌத்த மத உலகிற்குத் தமிழ் நாடு இக்காலப்பகுதியில் மிகச் சிறந்த தொண்டாற்றியது மணிமேகலை, குண்டலகேசி, போன்ற தமிழ்க் காப்பியமும் இக்காலத்தில் வெளிவந்தன ஆந்திராவின் பௌத்தம் சார்ந்த கலைகள், குறிப்பாகக் கட்டிடக் கலை தனிவழி நடத்து சிறீலங்காவுக்கு தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் பரவின. தமிழ் நாட்டில் தேரவாத பௌத்தம் மேலோங்கியபோது பாளிமொழி வளர்ச்சியும் ஏற்பட்டது முப்பெரும் பாளிமொழி அறிஞர்களான புத்த கோசா, புத்ததத்தா, தம்மபால என்போர் தமிழ் நாட்டின் புத்த மத பீடங்களோடு தொடர்புடையவர்கள் இவர்கள் பாளிமொழியில் பல பௌத்த மத விளக்க நூல்களையாத்துள்ளனர். நாகபட்டினம் பதினைந்தாம் நூற்றாண்டு வரை பெரியதொரு புத்தமத பீடமாக விளங்கியது மகாயான பௌத்தமும் தமிழ் நாட்டில் வளர்ச்சி கண்டிருந்தது காஞ்சி மிகப் பெரிய மகாயான மையமாகத் திகழ்ந்தது இருவகை பௌத்த மதக் கோட்பாடுகளும் இலங்கையில் குறிப்பாக அனுராதபுரத்தில் ஆதிக்கம் செலுத்தின.

தமிழ் நாட்டுப்புத்த துறவிகள் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் அப்பாலும் பௌத்தத்தைப் பரப்பினர் பல்லவர் காலத்தில் வெளிநாட்டு வாணிபம் வளர்ச்சி கண்டதை அடுத்து மதப்பரப்பிலும் மாமல்லபுரம், காவரிப்பட்டினம், நாகப்பட்டினம் ஆகிய துறை முகங்களில் இருந்து மேற்கொள்ளப்பட்டது இவ்வாறு மதப் பரப்பலுக்கு கிழக்கு நாடுகளுக்குச் சென்றோர்களில் போதிதர்மா என்பவர் மிகப் பிரபலமானவர் இவர் சீன மொழியில் தமோ என்று யப்பானில் நிலவும் சென் (ZEN) பௌத்தத்தை நிறுவியராக கருதப்படும் இத்துறவி ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். தமிழ் நாட்டில் தேவாத, மகாயான பௌத்தங்களின் உச்ச நிலை 5ம் 6ம் நூற்றாண்டுகளில் எட்டப்பட்டது ஆறாம்

https://tamileelamarchive.com/

நூற்றாண்டில் பிராமணியமும் இச்செல் வாக்கிற்குக் காரணமாகின அரசர்களும் மதம் மாறினர் எட்டாம் நூற்றாண்டில் மற்றும் பௌத்த மதங்கள் முற்றாக வீழ்ச்சி அடைந்தன.

வெளி நாட்டு வாணிபம் இக்காலப்பகுதி யில் விரிவடைந்தது மணிக்கிராமம், ஐநூர் றுவர் என்ற வணிக குலத்தோர் வங்காள விரிகுடாவில் பெருமளவில் வர்த்தக நட வடிக்கைகளில் ஈடுபட்டனர் இலங்கைத் துறைமுகங்களை அவர்கள் தமது தேவைக் குப் பயன்படுத்தினர் வெளிநாட்டு வர்த்தகம் பல்லவர் ஆட்சியோடு ஆரம்பித்ததாக ஏற் கனவே தெரிவித்துள்ளோம் தென் கிழக்கு ஆசிய நாடுகளோடு நடைபெற்ற சர்வதேச வர்த்தகத்தில் தென் இந்தியாவில் தமி ழர்கள் பெரும் பங்கு வகித்தனர் கலாச்சார பரிமாற்றமும் இதன் காரணமாக இந்தியா வுக்கும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக் குமிடையில் நடை பெற்றது. இதன்போது தமிழ் வர்த்தகர்கள் இலங்கைத்தீவைத் தமது வர்த்தக நடவடிக்கைகளுக்காகப் பயன் படுத்தினார்கள் தமிழ் நாட்டின் முதலாவது பெரும் அரச பீடமான பல்லவராட்சி ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொடக்கப்பட் டது அன்று தொட்டு தென் இந்திய வெளி வர்த்தகம் விரிவடையத் தொடங்கியது. மாமல்லபுரம், நாகபட்டினம் ஆகிய துறைமு கங்கள் வங்காள விரிகுடா வர்த்தகத்தின் இருப்பிடமாகின திருகோணமலை, குச்ச வெளிக்கு வடபுறத்திலுள்ள பல்லவன்கால இலங்கைத் முகங்களும், தக்குவபா, ஒக் கியே என்ற தாய்லாந்து வியட்நாம் துறை முகங்களும் அவற்றோட வர்த்தகத் தொடர் புடையும் போக்குவரத்துத் தொடர்பையும் கொண்டிருந்தன பல்லவர் காலத்து வணிகர் கழகங்கள் குறிப்பாக மணிக்கிராமம், அன்சு வண்ணம் என்பன திருகோணமலை மாவட் டத்தில் காணப்பட்டன. ஸ்ரீலங்காவிலும் தென் கிழக்கு ஆசிய நாடுகளிலும் தமிழ் வணிகர் கள் பற்றிய கல்வெட்டுக்கள் உள்ளன.

நீர்ப்பாசனத் தொழில் நுட்பம் தென் இந்திய - இலங்கை நாடுகளைச் சேர்ந்தோ ரின் கூட்டு முயற்சியாக இரு பக்கமும் விரி வடைந்து தென் இந்தியாவில் இருந்து இரும் புப் பாவனை இலங்கை வந்தபோது இரும்புக் கருவிகள், நெற்பயிர்கள், நீர்ப்பாசன முறை களும் வந்து சேர்ந்ததாகக் கருதப்படு கிறது நீர்ப்பாசன தொழில்நுட்ப வளர்ச் சியில் தென் இந்தியர்களும் இலங்கையர் களும் இணைந்து செயற்றப்பட்டனர் அதற் காரணமாக இலங்கையில் இருந்து தென் இந்தியாவுக்கும் தென் இந்தியாவில் இருந்து இலங்கைக்கும் இருவளப் போக்கு வரவு நிகழ்ந்தது மக்கள் தொகையும் உணர்வுத் தேவையும் ஏற்பட்டபோது நீர் வழங்கல் தேவை அத்தியாவசியமானது இருபக்க மன் னர்களும் இதை உணர்ந்திருந்தனர். அர சர்கள் மாத்திரம் நீர்த்ததேக்கங்களைக் கட்டு வதிலும் வாய்க்கால்களை அமைப்பதிலும் கவனம் செலுத்தவில்லை மணிகிராமம் போன்ற செல்லச் செழிப்புள்ள வணிக குலத் தோர் நீர்தேக்கங்களை அமைப்பதிலும் சம யக் கட்டிடங்களை எழுப்புவதிலும் பொருட் செலவு செய்தனர் கி.பி 600 - 900 காலப் பகுதியில் தமிழ் வர்த்தக சமூகம் மிகவும் செல்வாக்குப் பெற்றது தென் தாய்லாந்தில் மணிகிராம வணிகர்கள் ஒரு நீர்த்தேக்கத் தைப் பராமரித்தார் என்று பல்லவர் காலக் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது பல்லவர் கால வெளி வர்த்தக விரிவு காலத்தில்தான் ஸ்ரீலங்காவின் மிகப் பெரிய நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டன தமிழ் நாட்டில் பல்லவர்களும் அவர்கள் பின் பாண்டியர்களும் இத்துறை யில் பெருங் கவனம் செலுத்தினர் தென் இந்தியாவிலும் இலங்கையிலும் சமகாலத் தில் ஒரே வகை வளர்ச்சி நடக்கும்போது இருபக்கத் தொடர்பு ஏற்படாமல் இருக்காது கி.பி ஏழாம் நூற்றாண்டளவில் கொக்கிளாய் நீரேரிக்கும் திருகோணமலைக்கும் இடைப் பட்ட பகுதியில் தமிழ் வர்த்தகர்களின் நீர்த் தேக்கம் அமைக்கும் முயற்சிகள் பெருமள வில் காணப்பட்டன. பதவிக்குளம், வகல் கடைக்குளம் என்பன இவர்களால் கட்டப் பட்டன லக்ல கடையிலுள்ள தமிழ் கல்வெட்டு அதைக் காத்தாள் ஏரி என்று அழைக்கின்றது அனுராதபுர மன்னர்கள் கட்டிய குளங்களின் பட்டியலை ஆராய்ந்த பேராசிரியர் பரணவி தான இவை இரண்டும் அப்பட்டியலில் இல்லை என்று தெரிவித்துள்ளார். வடகிழக்கு பிராந்தியத்தில் ஆட்சி செலுத்திய குறு நில மன்னர்கள் வணிகப் பெருமக்களின் உதவி யோடு இவ் இனங்கள் உட்பட பிற நீர் நிலை களையும் விவசாயத் தேவைகளுக்காக அமைத்திருக்கலாம் என்று முடிவெடுக்கப்பட் டுள்ளது பல்லவர்களுக்கு வட கிழக்கு இலங்கைக்கும் இடையில் இவ்வகைத் தொடர்பு இருப்பதற்கானவேறு சான்றுகளும் உண்டு. பல்லவர் காலத்தில் ஏரி, தடாகம் என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டன. பல்ல வர் காலத்தில் மகாயன மதக் கட்டிடங்கள் திருகோணமலை மாவட்டத்தில் கட்டப்பட் டன.

திரியாயிலுள்ள புத்தகோயில் இதி லொன்று பல்லவர் காலத்தில் விரிவடைந்த வெளிவர்த்தகம் இலங்கையின் வட கிழக்கில் தமிழின் வளர்ச்சிக்கு அடிகோலின. வடக் கிழக்கிற்கும் தமிழ் நாட்டிற்கும் இடையி லான தொடர்பை வர்த்தகம் வலுப்படுத்தியது அனுராதபுரத்தில் ஹெல இனம் தென் இந் திய கலாச்சாரத்தையும் மொழியையும் உள் வாங்காது நிலைத்து நிறைந்து இதற்கு தேர வாத பௌத்தம் உறுதுணை புரிந்தது அப் பகுதியில் வாழ்ந்த தெமல இனம் ஹெல இனத்தோடு ஐக்கியமாகியது வடக்கிலும் கிழக்கிலும் தமிழும் சைவ மதமும் தெமல இனத்தின் தனி வளர்ச்சிக்கு வழி வகுத்தன அனுராதபுரத்தின் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்த ஹெல இனத்தவர்கள் நாளடைவில் தெமல இனமாகி விட்டனர். இவை இக்காலப் பகுதியின அடிப்படை நிகழ்ச்சியாக அமைவ தால் அதை இத்தீவில் வரலாறாகக் கணிப் பிடலாம்.

தமிழர் ஆட்சி காலத்திற்குக் காலம் அனு ராதபுரத்தில் நடந்தாலும் அவர்கள் ஹெல இன அடையாளத்தோடும் தேரவாத புத்த மதத்தின் ஆதரவோடும் ஆட்சி செய்தனர் அவர்கள் புத்த மதத்தினராகவும் இருந்தனர். தமிழ் நாட்டு அரச குடும்பங்களில் பெண் எடுக்கும் முறையையும் சிங்கள மன்னர்கள் கொண்டிருந்தனர். தமிழ் நாட்டின் கூலிப்பட் டாளங்களைத் திரட்டி வந்த சிங்கள மன் னர்கள் பற்றிய வரலாறு உண்டு. பெருமள வான சிங்கள மன்னர்கள் தமிழ் மெய்க் காவலர்களைத் தமது அரண்மனைப் பாது காப்பிற்காகப் பயன்படுத்தினர். இதன் இந்தியாவின் தமிழ் மன்னர்கள் சிங்கள மெய்க்காப்பாளர்களைப் பயன்படுத்தினர். இரு பக்கத்திலுள்ள கல்வெட்டுக்கள் மெய்க் காப்பாளர் விடயத்தை உறுதி செய்கின்றனர்.

பல்லவ மன்னனை நரசிம்மவர்மன் காலத்தில் கி.பி 630 - கி.பி668 அனுராதபுர வரலாற்றில் புதிய திருப்பம் ஏற்பட்டது. கூலிப்படைகள் வருவதுபோய் ஒரு சக்தி வாய்ந்த தமிழ் மன்னன் சிங்கள அரச குமார னின் உதவிக்கு தனது படையை அனுப்பும் நிகழ்ச்சி நரசிம்மவர்மனுடன் ஆரம்பிக்கிறது பல்லவ மன்னன் அரண்மனையில் வாழ்ந்த சிங்கள அரச குமாரன் மானவம்மா பல்ல வர்களுடைய போரில் சாலுக்கிய மானவம் மனுக்கு உதவியாக தனது பெரும்படையை அனுராதபுரம் அனுப்பினான். மானவம்மன் இப்படையின் துணையோடு ஆட்சியைக் கைப்பற்றினான் பல்லவ மன்னர்களுக்கும் அனுராதபுர மன்னர்களுக்கும் இடையிலான நட்புறவு இருநூறு வருடங்கள் நீடித்தன பல்லவர்களை பாண்டியர்களை பாண்டியர் கள் தாக்கியபோது சிங்களப் படைகள் பல்ல வர்களுக் உதவச் சென்றன ஒன்பதாம் நூற் றாண்டில் பல்லவ ராச்சியம் வீழ்ச்சி கண்ட போது இலங்கை மீது பாண்டியர்களின் படையெடுப்பு தொடங்கியது. முதலாவது பாண்டியப் படையெடுப்பு முதலாவது சேனா மன்னன் காலத்தில் நடை பெற்றது (833-853) தென் இந்திய அரசியலின் ஒரு அங்கமாக இலங்கை இடம் பெறுவது மானவம்மாவின் பல்லவத் தொடர்புடன் ஆரம்பிக்கிறது.

(தொடரும்)

அனைத்துலகத் தொடர்பகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்.

https://tamileelamarchive.com/

■ கோகுலராகவன்

# நானும் என் அவனும் பேசும் பொழுது

என்னுடைய அவனுடன்
நான் பேசவேண்டும்
வளர்ப்பு நாயுடன்-
குண்டு போடப்பட்ட வீட்டுடன்
நட்டு நீர் பாய்ச்சி
வளர்க்கும் புகையிலை கன்றுடன்
பிறந்து ஆறு மாதமே
ஆகா குழந்தையுடன்
நீங்கள் பேசுவதேயில்லையா?
நான் பலதடவை
கண்டதுண்டு - என்றான்
கோழைகளுடனும் பேசியதை நிறங்களைக் கொண்டு
அவற்றுக்கு
பேரிட்டு அழைப்பது உட்பட
கால்வாய் அமைத்த கடவுளரிடம்
நிறைய பேசுவீரோ
பதில் கிடையா பரஸ்பர
உரையாடல் பல
எனக்கும் என் அவனுக்கும்
நிறையவே பிரச்சினைகள்
பேசித்தான் தீர்க்க வேண்டும்
நாம் பேசிக் கொள்ளும் போது
எங்காவது பார்த்தபடி
போகமுடியுமா - கொஞ்சம்
பைத்தியம் என்றழைக்காமலும்

# மௌனமான நேரம்

இது உனக்குரிய நேரமல்ல
தோழனே
இது அவர்களுக்குரிய நேரம்
நீ ஆடவோ, பாடவோ
ஆனந்தித்திருக்கவோ அனுமதியில்லை
பழுதாய்ப் போன கனவுகளை
பற்றி இப்போ எண்ணாதே
இது அவர்களுக்குரிய நேரம்
விரும்பினால் -
அவர்களுடைய பெயரையும்
புகழையும் உரக்க கூவு!
மற்றைய வார்த்தைகளை
வானின் துவாரத்தினுள்ளாக
வீசி விடு.
நம்பிக்கையற்றுப் போன
வார்த்தைகள் பற்றி கவலைப்படாதே!
நம்பிக்கை என்னவென்று
அவர்களுக்கு தெரியும்
முடிந்தால் பாடு -
அவைகளைப் பற்றி
இல்லையேல் போர்த்திக் கொண்டு
பேசாமல் படு.



ஒளிப்படம்: ஈழவிஷன்

https://tamileelamarchive.com/

# எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது

மண்டைதீவு கலைச்செல்வி

இப்பொழுது கொஞ்ச நாட்களாக தர்சினிக்கு வழமையாய் இருந்த சந்தோஷமெல்லாம் அற்றுப் போனமாதிரி எதிர்பார்ப்புகள் எல்லாம் ஏமாற்றங்களாகி எக்காளமிட்டுச் சிரிக்கின்ற ஓர் பிரமை. ஏன் பிறந்தோம்? ஏன் வாழ்கிறோம். எனப் புரியாத தடுமாற்றம் புதிதாக வாழ்க்கை பற்றிய ஆதங்கம் எதிர்காலத்தைப் பற்றிய பயமும் ஏக்கமும் நெஞ்சிலே முள்ளாகக் குத்திக் கொண்டிருந்தது. நீண்ட பெருமூச்சுகள் இரவிலே தலையணை நனைக்கும் கண்ணீர்த் துளிகள்.

மோகனை நினைத்தால் கோபம் பற்றிக் கொண்டு வரும். மோகனை நம்பியிருந்த இந்த எட்டு வருடங்களும் அவளுக்கு வீணாகிப் போனது. ஒரு தமிழ்ப்பெண்ணாக தன்னைத் தொட்டுத் தாலிகட்டிய கணவனுக்குக்காக காத்துக் கிடந்தாள் தர்சினி.

தர்சினி அப்போது உயர்தரத்தில் படித்துக் கொண்டிருந்த போது வெளிநாட்டு மாப்பிள்ளை என்ற அந்தஸ்த்துக்கு ஆசைப்பட்டு அவள் அம்மாவும் அப்பாவும் தூரத்து உறவுக்காரரான மோகனுக்கு மிக அவசரப்பட்டு மூன்று நாட்களில் முடிவு எடுத்து செய்த திருமணம் அது. அப்போது தர்சினியும் அதை வெறுக்க வில்லை. தானும் மோகனுடன் லண்டனுக்குச் சென்று வசதியாய் வாழலாம் என்கின்ற ஆசையும் பெருமிதமும் தர்சினிக்கு நிரம்பி இருந்தது.

மோகன் ஒரு நாள் தர்சினியை பெண்பார்க்க தன் தாய் தந்தையோடு வந்தான் அடுத்த நாளே திருமணத்துக்கு நாள் குறிக்கப்பட்டது. மோகன் அவசரமாய் லண்டன் செல்ல வேண்டி இருந்ததால் சில வசதிகள் கருதி மோகனின் செலவிலேயே கொழும்பில் ஒரு கல்யாண மண்டபத்தில் திருமணம் நடந்தது. தர்சினியின் வடிவிற்கேற்ப மோகனும் மிகவும் அழகானவனாய் மிடுக்கான தோற்றமும் குழந்தைப் பேச்சும், கவர்ச்சியான தோற்றமுமாய் இருந்தான். தர்சினியின் இருபத்தி ஒரு வயதை ஞாபகப்படுத்தி இருபத்தியொரு பவுணில் அவள் கழுத்தில் தாலிக் கொடி கட்டினான் மோகன். தாலி கட்டிய அன்று இரவே இரண்டு மணிக்கு மோகன் லண்டன் பயணமாக வேண்டி இருந்தது. அவனின் தாய் தந்தை சகோதர சகோதரிகள் தர்சினியின் அம்மா அப்பா உறவுகள் எனப் பலரும் இருந்ததால் தர்சினி மோகனோடு மனம் விட்டுப் பேசுவதற்கு நேரம் இருக்கவில்லை எல்லாம் போனில் பேசிக் கொள்ளுவம்



https://tamileelamarchive.com/

கெதியாய் உங்களை எடுக்கப்பார்க்கிறன் என இன்முகத்தோடு கூறி விடைபெற்றான். தர்சினி அன்று அடைந்த சந்தோஷம்.. அன்று இருந்த அழகு... அவளுக்கு இதுவரைக்கும் வந்ததே இல்லை. மோகன் கட்டிய இருபத்தியொரு பவுண் தாலிக்கொடி அவள் கழுத்தில் இன்பச் சுமையாககக் கனத்தது.

ஊருக்கு வந்த பிறகு அவளைப்பார்க்க வந்த தோழியருக்கெல்லாம் மோகனின் வடிவு பற்றியும் அவன் கட்டிய தாலிக் கொடியின் பெறுமதி பற்றியும் கூறிப் பெருமைப்பட்டாள் தர்சினி.

நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்தன அதன் பிறகு மோகனிடமிருந்து வரும் தொலைபேசிகளோடு மகிழ்ந்து போனாள். இடைக்கிடை சிறுதொகைகளாக பணமும் அனுப்புவான். தர்சினி உயர்தரப் பரீட்சை எழுதி சித்தியும் பெற்றாள். ஆங்கிலத்தையும் சரளமாகப் பேசவும் எழுதவும் பிரத்தியேகமாகக் கற்றுக் கொண்டாள். வருடங்கள் மளமளவென்று உருண்டோடின. காலங்கள் செல்லச் செல்ல மோகனின் தொலைபேசி அழைப்புகள் குறையத் தொடங்கின. தர்சினியை லண்டனுக்கு அழைப்பது மிகவும் சிக்கல் என அவன் அடிக்கடி கூறுவதும், இதனால் தர்சினி மனமுடைந்து கோபப்பட்டு கதைப்பதும் வழமையாகி விட்டது. மோகன் தானாகவே அழைப்பு எடுப்பது குறையவே, தர்சினி தான் அழைப்பை ஏற்படுத்தித் பார்த்தாள். அப்போது எல்லாம் ஒரு வெள்ளைக்கார பெண்ணே அவர் இல்லை என ஆங்கிலத்தில் கூறி போனை வைப்பாள் தர்சினியை லண்டனுக்கு அழைப்பது பற்றி அக்கறை காட்டாதது பற்றி தர்சினியின் பெற்றோர் மனமுடைந்து அரை நோயாளியாகி விட்டிருந்தனர். தற்சமயமாய் மோகன் பேச நேரிட்டாலும் விசா செய்வது பிரச்சினை என்று தொடங்கி பல சாட்டுகளைக் கூறுவான். இப்படியே எட்டு வருடங்கள் கழிந்து விட்டன. தர்சினியும் விரக்தியின் விளிம்புக்கே சென்றுவிட்டாள் தர்சினியின் சகோதரிகளும் உள்ளூருக்குள்ளேயே தமக்குப் பிடித்தவர்களை மணந்து வாழ்கிறார்கள். அவளின் தோழிகள் யாவரும் திருமணமாகி குடியும் குடித்தனமுமாய் வாழ்கிறார்கள் சிலர் வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு மணப்பெண்ணாகச் சென்று சந்தோசமாய் இருக்கிறார்கள். தனக்குத்தான் இப்படி விதியோ என நொந்து நொந்து மெலிந்தாள் தர்சினி. இப்போதெல்லாம் மோகனைப் பற்றி யாரும் வீட்டில் கதைப்பதில்லை. இரண்டு வருடத்துக்கு முன் அவளுக்கு கிடைத்த ஆசிரியர் நியமனம் தான் தர்சினிக்கு சிறிய ஆறுதலைக் கொடுத்தது.

கடைசியாக மோகனுக்கு ரெலிபோன் எடுத்தபோது, "எட்டு வருசமாய் நீர் காத்திருக்கிறீர் எண்டு சொல்லுறீர் உம்மை இங்க எடுக்கிறது கஷ்டமாய் இருக்கு... ஆக கையெழுத்து ஒண்டு தானே வச்சனாங்கள். இதெல்லாம் பெரிய விஷயம் இல்ல.... நீர் அங்க ஆரையும் பாரும்..." வெகு சாதாரணமாய் மோகன் கூறிவிட்டு போனை வைத்தான். கோபத்தில் கொதித்துப்போனாள் தர்சினி. ஒரு பெண்ணின் காத்திருப்பை ஒரு பெண்ணின் ஆசாபாசங்களை புரிந்து கொள்ளாமல் வெளிநாட்டில் வெள்ளைக்காரனின் கலாச்சாரத்தைப் பின்பற்றி வாழும் மிருகத்தனமான ஆண்களை சபித்தாள். திருமணப் பதிவை கட்டிய தாலியை துச்சமென மதிக்கும் மோகனை அவள் மன்னிக்கத் தயாரில்லை. ஆசிரியர் நியமனம் கிடைத்தவுடனேயே கழுத்தில் போட்டிருந்த தாலிக் கொடியை சில பாதுகாப்புக் கருதி கழற்றி வைத்தாள். நெற்றியிலே சின்னதாய் பொட்டு. கழுத்தில் சின்னச் செயின். ஊரிலே கௌரவத்துக்காக பெற்றொரின் ஆறுதலுக்காகவும் மோகனிடம் தான் தொலைபேசியில் அடிக்கடி கதைப்பதுபோல் கூறிக் கொள்வாள். அவளின் உண்மை நிலை யாருக்குமே தெரியாது.

கடந்த கால நினைவுகள் நெஞ்சைப் பிசைய அன்று ஞாயிற்றுக்கிழமை ரீவியில் ஒடிய படத்தைப்பார்த்த படி சோகமாக உட்கார்ந்து இருந்தாள் தர்சினி. கதவை மெல்ல திறந்து "வரலாமோ" என கேட்டபடி உள்ளே வந்தான் தவா.

"வாரும் இரும்"

வழமையாக வரவேற்றாள் தர்சினி. தவா பக்கத்து வீட்டில் புதிதாகக் குடி வந்தவன். அல்லைப்பிட்டிப் படுகொலையின் பின் இடம் பெயர்ந்து இங்கு வந்து தன் குடும்பத்தோடு வாழ்கிறான். யாருடனும் எளிதில் பழகாத தர்சினி, குண்டு வெடிப்பின் போது தன் ஒரு கண்ணை பறிகொடுத்தவன் தவா என்பதாலும் கொஞ்சம் பேசிக்கொள்வாள். தவா வந்து மூன்று மாதங்கூட ஆகவில்லை. தவாவின் பண்பு பணிவு எல்லாமே பிடித்துக் கொண்டதோடு அவன் கண்பார்வையை இழந்தவன் என்ற அனுதாபமும் இரக்கமும் நெஞ்சை உருகவைத்தது. அவன் மேல் அவன் குடும்பத்தினர் அவளுக்கு ஏற்பட்ட அன்பின் காரணமாய் தவாவின் கண்ணைப் பரிசோதிக்க கண்டி வரை போய் டாக்டரை கண்டு வர தர்சினியே பணம் கொடுத்து உதவினாள். பார்வை நரம்புகள் பாதித்து விட்டதாகவும் பார்வை அவனுக்கு நிரந்தரமாய் இல்லை என டாக்டர் சொன்னபோது தர்சினியும் நன்றாக வருந்தினாள். தவாவைப் பொறுத்தவரை தர்சினியை கடவுளாக மதித்தான். தர்சினிக்கும் தவாவுக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதுதான். 'தர்சினி இவ்வளவு நாளும் என் கண்ணுக்கு ஒளி கிடைக்க வேணுமெண்டு விரதம் பிடிச்சன். இப்ப நீங்கள் கெதியாய் வெளிநாட்டுக்குப் போக வேணும்மெண்டு கண்ணனுக்கு ஒன்பது ஞாயிறு விரதம் பிடிக்கப் போறன். இது முதல் ஞாயிறு இந்தாங்கோ பிரசாதம்' அவன் நீட்டினான்.

தர்சினி தவாவைப் பார்த்து விரக்தியாய் சிரித்தாள். மோகனைப் பற்றி தவாவிடம் ஒரு நாள் சகல விடயங்களையும் கூறி அழுதும் இருக்கிறாள். அதன் பிரதி பலிப்பு தான் தவாவின் இந்த விரதம் என ஊகித்தாள். 'என்ர கண்ணுக்குத் தான் கண்ணன் ஒளி தரேல்ல. உங்கட வாழ்க்கைக்கு எண்டாலும் ஒளி தரட்டும். நிச்சயம்... நிச்சம்.. நிச்சயம்...' உறுதியாகக் கூறினான் தவா. 'நடக்காது தவா இண்டைக்கு என்ர பிரண்டோட கதைச்சனான். மோகன் ஒரு வெள்ளைக்காரியை முன்னமே கலியாணம் செய்து இருக்கிறானாம்'! 'ஆ...ராஸ்கல்..' பல்லைக் கடித்தான் தவா. தவாவின் பார்வை இழந்த விழி கூட சிவந்தது.

'தவா கண்ண பரமாத்மா உங்களுக்க கண்ணுக்கு ஒளியைத் தரேல்ல. எனக்கு வாழ்க்கைக்கு ஒளியைத் தரேல்ல. ஆக நீங்க விரும்பினா உங்கட ஒற்றக் கண்ணாய் நான் இருக்கிறன். "தர்சினி உங்களுக்கென்ன விசரே....?" கத்தியே விட்டான் தவா. ' எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது இது கண்ணன் சொன்னது தவா' தர்சினி உறுதியாகக் கூறினாள். ...றும் பயபக... ...யரை வரவேற்ற... ...அழினாள்

https://tamileelamarchive.com/

# எமது இராச்சியத்தின் விடுதலைக்காக...


கோல்டா மேயர்

உடுத்த உடைக்கு மாற்றுடை எடுக்க நேரமில்லாத அவசரம் அந்தப் பெண்ணுக்கு. அவரிடம் கையில் இருந்தகைப் பையைத் தவிர வேறொன்றும் இருக்கவில்லை. தான் அணிந்திருந்த மெல்லிய கோடை கால உடையுடன் கடுங்குளிர்கால இரவொன்றில் நியூயோர்க் நகரத்தில் வந்து இறங்கினார் அந்தப்பெண். கோடிக்கணக்கில் அமெரிக்க டொலர்களை அந்தப் பெண் தேடிவந்தார்.

கைப்பையில் அன்று பின்னேரம் பத்து டொலர் நோட்டு மட்டுமே இருந்தது. ஆச்சரியப்பட்ட சுங்க அதிகாரி ஒருவர் 'அமெரிக்காவில் உள்ள செலவுகளை எப்படித்தான் சமாளிக்க நினைக்கிறீர்கள்' என்று கேட்டார். எனக்கு இங்கே ஒரு குடும்பம் இருக்கின்றது. என சர்வ சாதாரணமாகப் பதிலளித்தார் அவர்.

இரண்டு நாட்கள் கழித்து அந்தக் குடும்பத்தின் பிரபல்யமான அங்கத்தவரின் கூட்டத்தின் மத்தியில் தான் நடுங்கிக் கொண்டே இருப்பதை அவதானித்தார். அந்தப் பெண்மணி தான் கோல்டா மேயர். அங்கே கூடியிருந்தோ[illegible] அமெரிக்காவின் 48 மாநிலங்[illegible]ருந்ததால் சி[illegible] வந்த யூத ஒன்றியத்தின் [illegible]மாகனின் செல[illegible]ள். அவர்களுடைய கூட்டமும், அந்தப் பெண்ணின் அமெரிக்க வருகையும் தற்செயலாக நிகழ்ந்த ஒரு நல்ல சந்திப்பாய் அமைந்தது. சிக்காக்கோ நகர விடுதி அறையொன்றில் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தமாதிரி அமெரிக்க யூத சமுதாயத்தின் பெரும்புள்ளிகள், லட்சாதிபதிகள் கூடினார்கள். அந்தப் பெண் யாருடைய உதவியைத் தேடி வந்தாரோ அவர்கள் அந்தப் பெண்ணுக்கு முன்னாலேயே இருந்தார்கள்.

உக்கிரேனிலிருந்து வந்த தச்சுத் தொழிலாளியின் மகளான அப்பெண்ணுக்கு அவர் அங்கு வந்த நோக்கம் இமாலயமலை போல் பெரிய பிரச்சனையாக இருந்தது. 1983க்கு பின்னர், அவர் அமெரிக்காவுக்கு வரவே இல்லை. அதற்கு முந்திய அவருடைய பயணங்களின் போது இருந்த நண்பர்களும் அவரைப் போலவே சமதர்மக்கொள்கையோ அல்லது பலஸ்தீனத்தில் யூதர்களுக்கான ஒரு தனி அரசு அமைய வேண்டுமென்ற கொள்கையோ உடையவராய் இருந்தனர். பலஸ்தீனத்தில் யூத இராச்சியம் என்ற கொள்கையைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாத, ஏன் அதற்கு எதிரான அபிப்பிராயமுள்ள அமெரிக்க யூத சமுதாயத்தையே அவர் சந்தித்தார்.

நியூயோர்க்கிலுள்ள அப்பெண்மணியின் நண்பர்கள் இப்படியான கொள்கை உடையோரை சந்திப்பதைத் தவிர்க்கும்படி அவருக்கு புத்திசொன்னார்கள். அன்றைய அமெரிக்க யூத சமுதாயத்தின் தலைவர்கள் யூதருக்கு பலஸ்தீனத்தில் தனிநாடு வேண்டும் என்ற கொள்கை இல்லாதவர்கள் மேலும் அதன் அங்கத்தவர்கள் அமெரிக்காவில் யூத இனத்தின் நன்மைக்காக ஆஸ்பத்திரி, வழிபாட்டுத்தலம், கல்வி, கலை கலாசார நிலையங்கள் என்பன அமைப்பதற்காகப் பணம் கொடுக்கும்படி நச்சரிக்கப்படுகின்றார்கள். போதாக்குறைக்கு வெளிநாட்டிலிருந்தும் பணம் அளிக்கும்படி வேண்டுகோள்கள் அதிகம் என்றார்கள்.

ஆனால் கோல்டா மெயர் பிடிவாதமாக இருந்தார். அவர் சிக்காக்கோவிலிருந்த ஐக்கிய யூத அமைப்பின் இயக்குனர் கென்றி மொன்ரூருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலும், பேச்சாளர் பட்டியலும் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டது எனக்கூறிய போதும், தான் கூட்டத்துக்கு வந்துகொண்டிருப்பதாகக் கூறினார் அப்பெண். அமெரிக்க குளிர்காலத்தைச் சமாளிப்பதற்காக ஒரு மேலங்கி வாங்க மட்டும் நேரமெடுத்த அவர், சிக்காக்கோ நோக்கிப் பறந்தார்.

தன்னுடைய பெயரை கூட்டத்தலைவர் அறிவிப்பதை கோல்டாமெயர் கேட்டார். சர்வசாதாரணமான மிகவும் சிக்கனத் தோற்றமுடைய ஒரு பெண் மேடையில் ஏறியதைக் கண்டதும் கூட்டத்திலிருந்த யாரோ ஒருவர் "ஆளைப்பார்த்தால் விவிலியர் காலத்துப் பெண் போலலல்லவா இருக்கின்றாள்" என்று முணுமுணுப்பதும் கேட்டது. அப்போது எதுவித குறிப்புக்களும் இல்லாமல் ஜெருசலேமிலிருந்து வந்த தூதுவர் பேசத்தொடங்கினார்.

"என்ன நீங்கள் நம்ப வேண்டும் என்று பேச்சை ஆரம்பித்தார் அந்தப் பெண். ஏழு இலட்சம் யூதர்கள் இந்த உலகத்திலிருந்து துடைத்து எறியப்படுவதை தடுப்பதற்காக மட்டும் நான் அமெரிக்காவுக்கு வரவில்லை. பிரச்சினை அதுவன்று. சென்ற சிலவருடங்களில் யூத மக்கள் தம் இனத்தவரில் ஆறு

https://tamileelamarchive.com/

இலட்சம் பேரை இழந்துள்ளார்கள் ஏழு இலட்சம் யூதர்கள் அழித்து ஒழிக்கப்படும் ஆபத்தில் இருக்கிறார்கள் என்பதை உலக யூத சமுதாயத்தின் கவனத்துக்கு கொண்டு வர வேண்டியது எமது கடமை.

ஆனால் கேள்வி அதுவன்று, எது எப்படியானாலும் இந்த ஏழு இலட்சம் யூத மக்களும் வாழ்ந்தால் தான் உலக யூத சமுதாயம் சுதந்திரமாக வாழும். அவர்களுடைய சுதந்திரமும் உறுதி செய்யப்படும் என்றார் அவர். அன்றி இந்த ஏழு இலட்சம் யூதரும் அழித்தொழிக்கப்படுவார்களேயானால், பலநூற்றாண்டுகளுக்கு யூத மக்களே உலகில் இருக்க மாட்டார்கள். யூத இராச்சியம் என்று ஒன்று இருக்கமாட்டாது. எங்களுடைய யூத இராச்சியம் பற்றி அபிலாசைகள் எல்லாம் தவிடு பொடியாகிவிடும் என்பதைப் பற்றி எள்ளளவேனும் நீங்கள் சந்தேகப்படத் தேவையில்லை" என்றார்.

"இன்னும் சில மாதங்களில் யூத இராச்சியம் ஒன்று பலஸ்தீனத்தில் இருக்கும். அதைத்தோற்றுவிக்க நாம் போராடுவோம். அது இயற்கை. அதன்விலையை எங்களின் இரத்தத்தில் கொடுப்போம். அதுவும் இயற்கை எங்களில் சிறந்தோர் இறந்து போவார்கள் இதுநிச்சயம். இதேயளவு நிச்சயமானது தான் எங்களின் ஆக்கிரமிப்பாளரின் தொகை எவ்வளவாக இருந்தாலும் எமது கொள்கையிலிருந்து நாம் மாற மாட்டோம் என்றார்.

மேலும் அவர் எச்சரித்தார். எமது ஆக்கிரமிப்பாளர்கள் பீரங்கிகளுடனும் பாதுகாப்புக் கவசங்களுடனும் வருவார்கள். ஆக்கிரமிப்பாளரின் இத்தகைய கனரக ஆயுதங்களுக்கு முன்னால் எமது வீரமும் தீரமும் உறுதியும் கருத்தற்றதாகி விடும். ஏனென்றால் நாமெல்லோரும் இறந்துவிடுவோம்.

நான் வந்திருப்பது எமது ஆக்கிரமிப்பாளரின் பீரங்கிகளை எதிர்கொள்ள எமக்குத் தேவையான கனரக ஆயுதங்களை வாங்குதற்கு தேவைப்படும் 25 அல்லது 30 மில்லியன் டொலர்களை அமெரிக்க யூத இனத்தவரிடம் கேட்பதற்காக எனது நண்பர்களே! அவர் மேலும் தனது வேண்டுகோளை தொடர்ந்தார். மிகமிக குறுகிய நிகழ்காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிக்கிறோம் இந்தப் பணம் உடனடியாகத்தேவை என்று நான் சொல்லும்போது இன்னும் ஒரு மாதத்திலோ அன்றி இரண்டு மாதங்களிலோ என்பதல்ல அதன் கருத்து இன்றே இப்பொழுதே இந்த இடத்திலேயே என்பது தான் அதன் கருத்து.

"நாங்கள் தொடர்ந்தும் போராட வேண்டுமா... வேண்டாமா? என்ற தீர்மானத்தை நீங்கள் எடுக்க வேண்டாம். தாங்கள் போராடியே தீருவோம் பலஸ்தீனத்து யூத இனம் ஜெருசலேமிலுள்ள அராபிய மதத்தலைவருக்கு முன்னால் வெள்ளைக்கொடி காட்டி மண்டியிட்டு சரணடைவதென்பது ஒரு போதும் கனவிலும் நடக்க முடியாத காரியம். ஆனால் ஒன்றை மட்டும் தீர்மானிக்கும்சக்தி உங்களுக்கு உண்டு. அதை நீங்களே தீர்மானிக்கலாம். வெற்றி எங்களுடையதா அல்லது எமது ஆக்கிரமிப்பாளருடையதா என்ற தீர்மானம் தான் அது" அவர் பேச்சை முடித்தார்.

கூட்டத்தில் ஒரு அமைதி நிலவியது. தன்னுடைய பணம் சேர்க்கும் பயணம் தோல்வியில் முடிந்து விட்டதாக கோல்டா மெயர் ஒரு கணம் நினைத்தார். காது செவிடுபடும் கைதட்டல் ஓசையினிடையே கூடியிருந்த ஆண்களும் பெண்களும் எழுந்தார்கள். கைதட்டும் ஓசையும் சந்தோச ஆரவாரத்தின் ஒலியும் தொடர்ந்தும் அங்கே எதிரொலித்துக் கொண்டிருக்கையில், அன்பளிப்பு வழங்குபவர்கள் மேடைக்குக் தாவித் தங்கள் உறுதிமொழிகளைக் கூறிக் கொண்டிருந்தார்கள். தேனீர் கொடுக்கும் நேரத்துக்கு முன் ஒரு மில்லியன் டொலர்கள் சேர்ந்து விட்டன. இந்தத் தொகை உடனடியாகவே காசாகக் கொடுக்கப்பட்டது. இதுபோல் முன்னொரு போதும் நடந்ததில்லை. கூடியிருந்தோர் தம்மால் பிறகு மக்களிடமிருந்து சேர்க்கமுடியுமென்ற துணிவில் தொகையை தம்முடைய பணத்திலிருந்தே கொடுத்தார்கள். சரித்திரத்தில் இடம்பெறக்கூடிய அந்த மாலைநேரம் முடிவதற்குள் தனது சகாவான வென்குயீறனுக்கு குறிப்பிட்ட 300 இலட்சம் டொலர்களையும் தன்னால் திரட்ட முடியுமென்று கோல்டா மேயர் தொலைத்தொடர்பு மூலம் அறிவித்தார். சிக்காகோ கூட்டத்தைக் கண்ட அமெரிக்க சியோனிஸ்ற்வாதிகள் (பலஸ்தீனத்தில் சுதந்திர யூத இராச்சியம் அமைக்க வேண்டுமென்ற கொள்கை உடையோர்) நாடு முழுவதும் பயணம் செய்யும்படி அப்பெண்ணைக் கேட்டார்கள். ஒரு நாளில் மூன்றுக்கும் மேலான கூட்டங்களில் பேசியபடியே கடினமான, அவசரமான தனது பணிணை அசுரவேகத்தில் தொடர்ந்தார். அப்பெண்மணி சிக்காக்கோவில் கிடைத்த ஆதரவைப் போல் பன்மடங்கு ஆதரவுடன் ஒவ்வொரு பட்டினத்துக்கும் சென்றார் அவர். சென்ற இடமெல்லாம் யூத இனத்துக்கு ஒரு தனி சுதந்திரநாடு என்ற கொள்கையை வலியுறுத்திப் பேசினார். மக்களின் ஆதரவும் அன்பளிப்பும் பன்மடங்கு பெருகிக் கொண்டே போனது. ஒவ்வொரு நாள் கூட்ட முடிவிலும் சேர்ந்த தொகையைப் பற்றி ரெல்அவிவுக்கு தொலைபேசி மூலம் அறிவித்தார். கனரக ஆயுதக் கொள்வனவுக்கான கட்டளைகளும் பறந்தன.

ஒரே ஒரு முறை மட்டும் அந்தப் பெண் உணர்ச்சி வசப்படும்படியான சந்தர்ப்பம் உண்டானது இது நடந்தது புளோறிடாவிலுள்ள பாம்பீச என்ற இடத்திலாகும். கூட்டத்திலிருந்தோரின் ஆடம்பரமான உடைகளையும் ஆபரணங்களையும் கண்டார் அப்பெண். அதேநேரத்தில் மலைப்பிரதேசத்தில் தாங்க முடியாத குளிரிலே போராடிக் கொண்டிருக்கும் தனது போராளிகளின் நினைவு அவருக்கு திடீரென ஞாபகம் வந்தது தனக்கு முன்னால் இருப்போரின் ஆடம்பர வாழ்க்கையும் உடம்பையோ உறைய வைக்கும் குளிரில் போராடிக் கொண்டிருக்கும் போராளிகளின் தியாகத்தையும் நாட்டுப்பற்றையும் ஒப்பிட்டுப் பார்த்தார். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. இவர்களுக்கு பலஸ்தீனத்தில் நடக்கும் போரைப்பற்றியோ அங்கு தமது உயிரைத் தியாகம் செய்து கொண்டிருக்கும் போராளிகளைப் பற்றியோ கேட்க வேண்டிய அவசியம் இல்லைப் போல் தெரிகிறது என்றும் அவர் நினைத்தார். ஆனால் அவர்களுக்கும் நாட்டுப் பற்று உண்டென்பதை அவர்களே நிரூபித்து விட்டார்கள் அன்று மாலையாவதற்குள் போராடிக் கொண்டிருக்கும் ஒவ் வொரு போராளிக்கும் ஒவ்வொரு கம்பளி உடை வாங்கக்கூடியதாக பல மில்லியன் டொலர்கள் அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

ஒரேஒரு பத்துடொலர் நோட்டுடன் நடுங்க வைக்கும் தை மாத குளிரில் இரவு வேளையில் அமெரிக்காவுக்கு வந்த அப் பெண் 50 மில்லியன் டொலருடன் அங்கிருந்து திரும்பக்கூடியதாக இருந்தது. இந்தத் தொகை அவருடைய நண்பர் கப்லான் மதித்த தொகையைப் போல் பத்து மடங்கு அதிகமாக்கும் டேவிட் வென்குறியீனின் மதிப்பைப்போல் இரு மடங்காகவும் 1947 ஆம் ஆண்டு எண்ணெய் ஏற்றுமதியால் கிடைத்த முழுத்தொகையைப் பேல் 3 மடங்காகவும் இருந்தது. அந்தப் பெண் வந்திறங்கும் விமானத்தை எதிர்பார்த்து இவருக்குப் பதிலாக அமெரிக்கா செல்ல விரும்பிய டேவிட் வென்குயிறின் நின்றார். சுதந்திர தனிநாடு அமைப்பதற்கு அந்தப் பெண் பொறுப்பேற்ற கடமையின் முக்கியத்துவத்தையோ அவசரத்தையோ அறிந்தவர்கள் வென்குயீறினைப்போல் நன்கு அறிந்தவர்கள் வேறு எவரும் இல்லை என்றே சொல்லலாம் சரித்திரம் எழுதப்படும்போது இஸ்ரேல் என்ற யூத சுதந்திர நாட்டைப் பெற்றெடுத்த தாய் நீங்கள் தான் என்பதும் உங்கள் முயற்சிக்கு உலகயூத மக்கள் அளித்த அளப்பரிய பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட்டுமென்றும் பயபக்தியுடன் கூறி கோல்டா மேயரை வரவேற்றார் பென்குயீறின். ■

https://tamileelamarchive.com/



# நாளை மலரும் தமிழீழம்

இலண்டனிலிருந்து இலங்கைக்கான விமானம் புறப்பட்டது. சறோ அவளது குழந்தைகளுடன் புறப்பட்டாள். ஆதவனுக்கும் இளமதிக்கும் அவர்களினது தாய்நாட்டை பார்க்கப்போகும் ஆவல்

"அம்மா கிளிநொச்சிக்கு போக எத்தின நாள் ஆகும்" ஆதவன் தாயிடம் கேட்க .

" நாங்கள் கெதியாய் போயிடுவம். அங்க கீழ பாருங்கோ எவ்வளவு அழகாக இருக்கு" எனச் சறோ கூற பிள்ளைகளின் கவனம் இயற்கையில் திரும்பியது.

சறோவிற்கு தன் அம்மாவின் ஞாபகம் 'அம்மா தனிய அங்கு எப்படியிருப்பா தம்பியின்ர நண்பர்களெல்லாம் வருவாங்கள் தான் இப்ப மாவீரர்தினம் வாறதால அவையும் வரமாட்டினம் இனிநாங்கள் போயிடுவம் தானே' எண்ணங்கள் பலவாறாகச் சிறகடித்தன. ஆதவனும் இளமதியும் தூங்கிவிட்டனர். சறோவும் சற்றுக் கண்மூடினாள்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியது . சறோ தன் இருபிள்ளைகளுடனும் தனது பொதிகளுடனும் இறங்கினாள். அங்கிருந்து புறப்பட்டு பலமணிநேரம் ஆகிவிட்டது. சறோவின் மாமா ஒருவாகனத்துடன் இவர்களிற்காக காத்திருந்தார். சறோவும் அவரை குசலம் விசாரித்து விட்டு வாகனத்தில் ஏறி அமர்ந்தனர்.

ஆதவன் "அம்மா இதெல்லாம் சிறிலங்கா ஆமிதானே" கேட்டான்.

சறோ தலையசைக்க இளமதி "அம்மா எங்கட மாமாவை

https://tamileelamarchive.com/

இவர்கள்தானே சுட்டது என்ர துவக்கை தாங்கோ நான் சுடுகிறன் இவங்களை" என்றாள் பெரியபெண்போல்.

சறோ வந்த சிரிப்பை பெரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டாள்.

ஊர்தி புளியங்குளத்தை நோக்கி விரைந்தது.

ஆதவன் "அம்மா எங்களுக்குத் தமிழீழம் கிடைச்சால் எங்கட இடத்தில் ஏயர்போட் எல்லாம் இருக்கும் தானே நாங்கள் அங்கயே வந்து இறங்கலாம் என்னம்மா,

இங்கு ஆமியின்ற இடத்திற்கெல்லாம் வரத்தேவையில்லை தானே" என்றான்.

சறோ மனதில் பெருமிதம் அவள் தமிழீழ போராட்ட வரலாற்றை பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்த்திருக்கின்றாள் ஆனாலும் அவர்களுக்கு இந்தளவுக்கு சிந்திக்க கூடுமென அவள் எள்ளளவும் எண்ணவில்லை.

"ஓம் மகன் எங்களுக்கு கெதியாக தமிழீழம் கிடைக்கும் அப்ப லண்டன் மாதிரி தமிழீழமும் பெரிய முன்னேறின இடமாக இருக்கும் பாரன்" என்றாள்.

அவன் திருப்தியுடன் சுற்றுப்புறத்தை அவதானிக்கத் தொடங்கினான்.

இளமதியும் உறங்கிவிட சறோ மாமாவிடம் "அங்க எல்லாரும் சுகமா இருக்கினமோ மாமா அம்மா என்ன செய்யிறா" என்றாள்.

"அம்மா வழமை மாதிரித்தான் பிள்ளை ஒருதற்ற வீட்டையும் வரமாட்டா. தானும் தன்ர பாடும்தான் தம்பியின்ர சினேகிதப் பெடியள் வருவாங்கள் அப்படியே போகும்" என்றார் மாமா.

"உங்களிட மகள் என்னசெய்யிறா, சுகமா இருக்கிறாவே" சறோ கேட்க அவர்.

புளியங்குளம் கடந்து வாகனம் சென்றுகொண்டிருக்க சறோ அயர்ச்சியுடன் சாய்ந்து கண்மூடினாள் கண்மட்டும்தான் மூடியது. மனக்கண் திறந்துகொண்டது அவள் நினைவுகள் கடந்தகாலத்தை நோக்கிச் சிறகடித்தது. சறோவின் குடும்பம் ஒற்றுமையான மகிழ்ச்சி நிறைந்த குடும்பம் கணேசபுரத்தில் வசித்த அவர்களைத் தெரியாதவர்களே இல்லை எனலாம். அப்பா புடவை வாணிப உரிமையாளர். அம்மா அருமையான வீட்டு நிர்வாகி. சறோவிற்கு ஆசைக்கு ஒருதம்பி எனச் செல்வத்திற்கும் பாசத்திற்கும் குறைவில்லாத குடும்பம் சறோவும் தம்பி சுரேசும் மிக நன்றாகப் படித்து வந்தனர்.

காலம் வேகமாக உருண்டோடியது சறோ க.பொ.த. உ/த விஞ்ஞானப்பிரிவில் கற்று 3C பெற்றும் யுத்த காரணமாக பல்கலைக்கழகம் போகவில்லை. தம்பி சுரேசும் மிகவும் சுட்டித்தனமாகவும் படிப்பில் மிகத்திறமையாகவும் இருந்தவன். தேசத்தின் தேவையுணர்ந்து விடுதலைப் போராளியானான சறோவும் திருமணம் செய்து பல அல்லல்களுக்கு மத்தியில் லண்டன் வந்துசேர்ந்தாள். கிளிநொச்சி இடப்பெயர்வின்போது தந்தையும் இறக்க தாய்மட்டும் தனியாக மகனையும் மகனுடைய நண்பர்களையும் எதிர்பார்த்தபடி அவர்களுக்கு உணவு ஊட்டித் திருப்தி கண்டாள்.

விடுதலைப்போரட்டத்திற்கு தன்னாலான பணியைச் செய்தாள். கிளிநொச்சி மண்மீட்பு போரிலே சுரேஸ் வீரகாவியம் ஆனான். ஆறாத்துயரில் மூழ்கிக்கிடந்த தாயை சுரேசின் நண்பர்கள் தேற்றினார்கள். செய்தியறிந்த சறோ துயரில் கண்ணீர்விட்டு துவண்டாள் வேறன்னதான் செய்யமுடியும்.

இருவருடங்களுக்கு முன்னார் கணவனுடனும் குழந்தைகளுடனும் தாயிடம் வந்து சென்றாள். அதன்பிறகு இன்றுதான் போகிறாள். ஒரு குலுக்கலுடன் வாகனம் நிற்க சுயநினைவுக்கு வந்தவள் முறுகண்டி ஆலயம் வந்துவிட்டதை கண்டு குழந்தைகளையும் எழுப்பி அழைத்துச்சென்றாள்.

"அம்மா முதல் வரேக்க இவ்வளவு கடைகள் இருந்ததோ இப்ப கொஞ்சம் கொஞ்சமா முன்னேறிற்றுது" என்று பெரியபெண்போல் இளமதி கூறினாள் அங்காலப் பாருங்கோ மாவீரர் தினத்திற்கு துாபி எல்லாம் செய்து சிவப்பு மஞ்சள் கொடியெல்லாம் கட்டியிருக்கினம் என்றாள் சறோ.

பிள்ளையாரை வணங்கிவிட்டு ஒரு உணவுவிடுதியில் தேநீர் அருந்திவிட்டு புறப்பட்டனர் "அம்மா, அம்மம்மா வீடு வந்திட்டுது" எனப்பிள்ளைகள் இருவரும் கத்த நால்வரும் இறங்கினார்கள். அவர்களைத் ஆரத்தழுவி வரவேற்றார் சறோவின் அன்னை.

முதுமையிலும் கம்பீரத்திற்கு இலக்கணம் கூறும் உருவம் "வாங்கோ பிள்ளைகள் சாப்பிடுவம்" என அழைத்தார் மாமாவீட்டுக்குப் புறப்பட அவர்களும் குளித்துவிட்டு உணவருந்தி ஓய்வெடுத்தனர் தாயும் மகளும் இரவிரவாக ஊர்ப்புதினங்களை அளவளாவினர். மறுநாள் குளித்துவிட்டு மாவீரர் துயிலுமில்லத்திற்கு செல்வதற்கான ஆயத்தத்தில் ஈடுபட்டனர். அம்மா நாங்கள் மாமாவுக்கு மலர்வளையம் செய்யிறம் எனக்கூறி அதிலே ஆதவனும் இளமதியும் முழுமூச்சாக ஈடுபட சறோவும் தாயும் சமையல் முடித்து மாலைகட்டினர். அவர்களின் பேச்சினூடே தாயார் பிள்ளைகளின் தமிழ்ப்பற்று பற்றி வியந்தார். மாலை அனைவரும் துயிலுமில்லம் வந்தார். மக்கள் வெள்ளம் அலைமோதியது .

"அம்மா இவையளின்ர மாமாக்களும் மாவீரரோ" என இளமதி கேட்டாள். அவையின்ர சொந்தக்காரர் தான் என்றாள் அம்மா இவ்வளவு மாமாக்கள் செத்திருக்கினம் எப்ப தமிழீழம் கிடைச்சா எல்லாரும் எழும்பி வருவினமோ என்று இளமதி கேட்க அவை தமிழீழம் கிடைக்கிறதை வானத்திலிருந்து பார்ப்பினம் என்றாள் சறோ.

அவள் மனம் கவலையில் கனத்தது. சறோவின் தாய் கண்ணீருடன் சுரேசின் கல்லறையில் நிற்க இளமதி அம்மம்மா அழாதையுங்கோ மாமா வானத்திலிருந்து நீங்கள் அழுகிறதைப் பார்த்து அழப்போறார் என்று அவர்களின் கண்களைத்துடைக்க கண்ணீருடன் அவளைத் அணைத்துக் கொண்டார் சறோவின் தாய்.

துயிலுமில்லத்திலிருந்து வீட்டுக்குச் செல்லும் போது ஆதவன் கேட்டான் அம்மா நானும் வளர்ந்து எங்களுக்கு கிடைக்கிற தமிழீழத்தை காக்க மாமா மாதிரிப் போரிடுவன். அப்ப இடம்பெயர்ந்து இருக்கிற எங்கட மக்கள் எல்லாம் ஒண்டாக சந்தோசமாக இருக்கலாம் தானே.

அந்தப்பிஞ்சுக்கண்களில் தொலைந்த கனவுகள் ஆசைகள் அனைத்தும் வருங்காலப் புலிவீரனின் கனவுகளாய் சறோவின் கண்களிற்கு தெரிய மகனை வாரி அணைத்து முத்தமிட்டாள். மரணித்த மாவீரனின் குருதியில் எழுந்து நிற்கும் தமிழீழம் மிகவிரைவில் என சறோவின் மனம் எண்ணியது. அவளின் உறுதியான எண்ணம் விரைவில் நிறைவேறும் என்பதுபோல் காற்றில் அலைந்து சிரித்த கார்த்திகைப் பூக்கள் கட்டியம் கூறின.

**கீர்த்திகா**

https://tamileelamarchive.com/

சாந்தினி வரதராஜன்


# வாசல் தோறும்



https://tamileelamarchive.com/

வானத்தில் முகில் கூட்டங்கள் நிற்பதும் நடப்பதுமாக எதையோ தேடி ஓடியபடி என் நினைவுகளும் அதுபோல்தான். என் கையைவிட்டு மட்டும் தொலைந்துபோன அற்புதமான அந்த நினைவுகள் என்னுள் எப்போதும் படர்ந்தபடி. அம்மா அடிக்கடி கூறுவா உன்னால ஒருவேலையும் முழுசா செய்ய முடியாது. எந்த வேலையை தொட்டாலும் அரைகுறைதான். அதைபடிக்கவேணும் இதை படிக்கவேணுமெண்டு எல்லாவற்றையும் தொட்டு பார்த்ததோட சரி. நேற்று இந்த ஒன்று கூடலுக்கு போய்வந்ததிலிருந்து என் எண்ணங்களும் அங்கேயும் இங்கேயும் தொட்டுக்கொண்டே இருக்கின்றது.

அங்கு செல்லும்பொழுது சாதரணமாகத்தான் சென்றேன். ஆனால் அது இவ்வளவு இனிமையான சந்திப்பாக இருக்கும் என்று நான் நினைத்துப் பார்க்கவே இல்லை. முதலில் அங்கு வந்திருந்த அத்தனை முகங்களும் அன்னியமாய் விலகி நின்றன. பின்பு ஒவ்வொருவராய் அறிமுகம் ஆனபின் அதேசிரிப்பு, அதேகண்கள் ஆனால் உடலால்மட்டும் எல்லோரும் மாறியிருந்தனர். ஒவ்வொருவரின் முகங்களையும் பார்க்கும்பொழுது என்னுள் ஒவ்வொரு கதை எழுந்து கொண்டே இருந்தது. அன்று குழந்தையாய், பருவமடைந்த பெண்ணாய் எவ்வளவு இனிமையான நாட்கள். எத்தனை வருடங்கள் கடந்தாலும் என் மனதைவிட்டு அகலதா அந்தப் பகுதியை என் நினைவுகள் திரும்ப திரும்ப தொட்டுக்கொண்டே இருக்கும். அந்த இனியகாலத்தில் இல்லை என்ற வார்த்தையை நான் கேட்டதே இல்லை. இதனால் என் நட்புக்கள் என்னை ஏதோ ஒரு வழியில்



பழிவாங்கிக்கொண்டே இருப்பார்கள். மழைக்காலங்களில் கான்கான் வைத்து தைச்ச ஓகன்ரி சட்டையை நனைப்பதற்கென்றே தேமாமரத்தின்கீழ் நிற்கவைத்து அதை ஆட்டி விடுவதும். பின் அதேமரம் எங்கள் வீடாய், இரயில் வண்டியாய், எல்லாமாய் மாறி சமயத்தில் எங்கள் பாவைப்பிள்ளைகளோடு அதன் கீழ்படுத்து நித்திரை கொள்வதும் அப்போதெல்லாம் பலகைக்கட்டைதான் எங்கள் பிள்ளைகள். அதை குளிக்கவார்ப்பதும், பவுடர் பூசுவதும் கூட்டான் சோறுசமைத்து சாப்பிடுவதும். ஆனால் ரஞ்சன் ராஜன் ரவி இவர்கள் இந்த விளையாட்டுக்கு மட்டும் எங்களோட சேரவே மாட்டார்கள். கோவில் வைத்திருப்பர்கள், குரும்பை எடுத்து தேர்கட்டி இழுப்பார்கள். பின் நாங்கள் சமைத்த கூட்டான்சோறை சாப்பிடமட்டும் வருவார்கள். ஆனால் இப்போ அதே ரஞ்சன், ராஜன், ரவி தங்கள் பிள்ளைகளுக்கு பால்கொடுப்பதும், நப்கின்மாற்றி விடுவதும் உருவத்தால் மட்டுமல்ல உள்ளத்தாலும் மாறியதுபோல் ஒருதோற்றம். எது மாற்றியிருக்கும் காலமா, இல்லை புலம்பெயர்வாழ்க்கையா, எது மாற்றியிருக்கும்.

புலம் பெயர் வாழ்வு அவர்களை மட்டுமல்ல என்னையும். இல்லாவிட்டால் கனடாவில் ஓன்று விட்ட அண்ணா உயிரற்று உடல் மட்டும். அதையும் இல்லாமல் அழிக்கும் நேரத்திற்காக காத்து கிடக்கும்பொழுது குழைத்து வைத்த டோனட்ஸ் மா வீணாகிப்போய் விடுமென்று சுட்டுக்கொண்டு இருப்பேனா. என்மகன் என்னைக் கேட்ட கேள்வி டோனட்ஸை எண்ணை சுடுவதைவிட மோசமாக என்னை சுட்டுக்கொண்டே இருந்தது. நான் எப்படி இதை மறந்தேன். இருபது வருட வாழ்க்கையில் எல்லாவற்றையும் மறந்து போனேனா. அல்லது உறவுகளை தொலைத்த இந்த புலம்பெயர் அவலவாழ்வு எல்லாவற்றையும் மறக்கடித்துவிட்டனவா. எது எதுவென என் மனம் பதிலை தேடியலைந்தது. நானே இப்படி மாறினால் இங்கு வளர்ந்து வரும் அடுத்த சமுதாயம். கேள்விக்குறி விழிகளின் முன் வளைந்து நின்றது.

எல்லோருடைய குழந்தைகளையும் பார்க்கும்பொழுது சிறுபிராயத்தில் என்னுடன் கைகோர்த்து நின்ற என் நட்புக்கள் மறுபடியும் சிறுகுழந்தைகளாகியதுபோல் எனக்குள் ஓர் பிரமை ஏற்பட்டுக்கொண்டே இருந்தது. வாழ்க்கையில் எத்தனையோ விடயங்களை மறக்க முடியாததுபோல் இந்த ஒன்று கூடலையும் என்மனம் பதிவு செய்துவைத்தது. அனைவரும் பிரியும் பொழுது அத்தனை விழிகளிலும் ஏக்கங்கள். இனி அவரவர்கள் தங்கள் தேடலில் மூழ்கி நிஜத்தை மறந்து தம்மை இயந்திரமாக்கி. மறுபடியும் எப்போது என்ற கேள்விக்கு விடையை தேடியபடி அந்த காலத்திற்காக இனி உயிரை கையில்பிடித்தபடி வாழவேண்டும்.

ஒரு இனத்தை அழிக்கவேண்டுமென்றால் முதலில் அதன்காலச்சாரத்தை மொழியை அழியென்று சிங்கள அரசாங்கத்திற்கு யார் சொல்லிக்கொடுத்திருப்பார்கள். கூட்டுக்குடும்பமாக உறவுகளோடு வாழ்ந்த அந்த இனிமையான வாழ்க்கையை... கூட்டமாக இரையுண்டு மகிழும்பொழுது கல்லெறிந்து காக்கைகளை கலைத்தால் அவை திக்கு திக்காக திசைமாறி பறந்த மாதிரி நாங்களும்.... புவியியல் ஆசிரியர் உலகவரைபடத்திலுள்ள நாடுகளை சுட்டிக்காட்டுமாறு கூறினால் விழிபிதுங்கி நின்ற காலம்மாறி. இன்று டென்மார்க்கும், பிரித்தானியாவும், நோர்வேயும், கனடாவும் ஏதோ சொந்த ஊர்போல் ஆகிவிட்டது. யாழ்ப்பாணத்திலிருக்கும் பொழுது பெரியக்கா கொழும்பில, பெரியண்ணா பொகவந்தலவில, சின்னக்கா மானிப்பாயில என்ற காலம் தொலைந்து அவர்களெல்லாம் இன்று உலக வரைபடத்திலுள்ள அத்தனை இடங்களிலும். நம்மக்கள் உலகத்தை உள்ளங்கைக்குள்வைத்து மூடிவிட்டார்கள்.

## (2)

ஆனால் பிரிவு அதன்வலி அத்தனை உள்ளங்களிலும் நிரந்தர இடத்தை பிடித்துவிட்டது என்பதை எல்லோரினதும் முகங்கள் கட்டியம் கூறிக்கொண்டிருந்தது. வாழ்க்கையில் பிரிவது இணைவது இயற்கை. ஆனால் நாங்கள் பிரிவுக்கிடையில் அல்லவா வாழ்வை நகர்த்திக்கொண்டு இருக்கின்றோம். இதனால் அன்பு கொஞ்சம் கொஞ்சமாக விலகுவதுபோல் எனக்குள் ஓர் உணர்வு உணர்த்தியபடியே இருக்கின்றது. என் குழந்தைகளுக்கு என்தாயை தந்தையை புகைப்படத்தின் மூலம்தான் அறிமுகப்படுத்தினேன். இன்று அவர்கள்

https://tamileelamarchive.com/

அதோ முக்கோண வடிவில் பறக்க ஆரம்பித்துவிட்டன. முன்னால் பறக்கும் பறவைதான் வழிகாட்டி காற்றின் தாக்கத்தையும் தாங்க வேண்டும் முதல் பறக்கும் பறவையின் சிறகு கீழ்நோக்கி அடிக்கும்பொழுது ஏற்படும் காற்றின் உதவியால் மற்றய பறவைகளின் சிறகுகள் மேலோக்கி எழுகின்றனவாம். முதல் செல்லும் பறவை களைத்தால் அடுத்தவர் இப்படியே ஒற்றுமையாக ஒற்றுமை ஏதோ மனதை நெருடியது. என்னை மறந்து போய்வாருங்கள் நான் இருந்தால் அடுத்த வருடம் சந்திப்போம் என பிரியாவிடை கொடுத்துவிட்டு திரும்பிய என் விழிகளில் ஒரு பறவைமட்டும் தனியாக அவைகள் போவதை ஏக்கத்துடன் பார்த்தபடி.... ஏன் ஏன் நீ போகவில்லை? பற பறந்து போ போ என என் மனம் அலறியது. ஆனால் அது மறுநாளும் அதற்கடுத்துவந்த நாட்களிலும் அவைகள் எல்லோரும் பிரிந்த அந்த நேரத்தில் அதே இடத்தில் வந்தமர்ந்து ஏதோ சோகமாக கத்தியபடி. இப்படித்தான் இப்படித்தான் அன்று எமது பெற்றோரும் நாளை நாங்களும்......



வாழ்ந்தார்கள் என்பதற்கு நாங்களும் அந்தபுகைப்படங்களும்தானே அத்தாட்சியாக இருக்கின்றது. இதே நிலை நீடித்தால் நாளை என் சகோதரிகளின் குழந்தைகளும் என் குழந்தைகளும் எப்படி வாழப்போகின்றார்கள். அந்த இருண்ட எதிர்காலம் என்னை இப்பொழுதே அச்சுறுத்துகிறது. விடுமுறையில் ஊருக்கு சென்று திரும்பிய என்தோழி கூறியது என்னை நெருடியபடி இருந்தது. எங்கு சென்றாலும் பலநாட்டு மொழியின் உரையாடல்கள் காற்றில் கரைந்தபடி இருந்ததாம். பைபிளில்கூறியதுபோல் இறைவனை அடைய கட்டிய கோபுரம் மொழிகள் மாறியதால் இடையறுந்து போனதுபோல எங்கள் குழந்தைகளின் எதிர்காலமும் மொரீசியஸ்சில் வாழும் தமிழர்கள்போல் அவர்களின் பெயர்களிலாவது தமிழ் இன்னும் வாழுகின்றது. ஆனால் எம் குழந்தைகளின் பெயர்களும் அல்லவா மாறிவருகின்றன.

உயிருக்கு அஞ்சி நாட்டைவிட்டு நகர்ந்து இங்குவந்தபின் தனிமையில் வாடி உறவுகளுக்காக ஏங்கி அறிமுகம் அற்றவர்களை உறவாக, நட்பாக கற்பனை புனைந்து. பின் அந்த கற்பனை உறவு ஒருநல்ல நாளில் தன் பொய்முகத்தைக்களைய அதை ஜீரணிக்க முடியாமல் புலத்தில் தொலைத்துவிட்டு வந்த அந்த இனிய நட்புகளை எண்ணி எத்தனை நாட்களாக இதயம் ஏங்கித்தவித்தது. ஆதங்க முனிவர் தண்ணீரைத்தேடி பாலைவனத்தில் அலைந்ததுபோல் நானும் இங்கு உண்மை நட்பை தேடி அலைந்தபொழுது வீடுகளின் மறைவான இடங்களில் பலவிதமான பொய்முகமூடிகள் ஆணிஅடித்து தொங்கவிடப்பட்டிருப்பதைத்தான் கண்டுபிடித்தேன். தேவைப்படும் முகங்களை அவ்வப்போ எடுத்து அணிந்து கொள்வார்கள் என்பதையும் பின்புதானே அறிந்துகொண்டேன். இப்போஅவை என்னையும் அணிந்துகொள் அணிந்துகொள் என அடிக்கடி வற்புறுத்துகின்றன. எனக்கு பயமாக இருக்கிறது நானும்.....

இப்போதெல்லாம் எந்த மனிதரைப் பார்த்தாலும் இது இவரின் உண்மை முகமா அல்லது பொய் முகமா என்று சிந்திப்பதே வேலையாகிப்போய்விட்டது. இதனால் அவர்கள் பேசுவதை கிரகிக்க முடியாமல் எத்தனை நாள் அவஸ்தைபட்டுள்ளேன் என்பது எனக்கு மட்டுமேவெளிச்சம். மனிதர்கள் மட்டுமா இப்படி... இல்லை இல்லை எல்லா உயிரினங்களும் அப்படித்தான் என்பதற்காகத்தான் நரியும் வடையும், முயலும் சிங்கமும் என்று கதைகளை வடித்துவைத்திருப்பார்களோ... இந்த மனிதர்கள் ஏன் இப்படி மாறினார்கள்...

எந்த உயிரினங்களும் தன் இனத்தை அழிப்பதே இல்லை. ஆனால் மனிதன் மட்டும் ஏன் தன்னையொத்த இனத்தை அழிப்பதே கர்மமாக எண்ணி காலத்தை கழிக்கின்றான். பத்திரிகையிலும் வானொலிகளிலும் எப்போதும் கொலை, கொள்ளை, பாலியல்வல்லுறவு வாழ்க்கை எங்கும் பயங்கரமாக காட்சி அளிக்கின்றது. மனிதமனங்கள் மரணித்துவிட்டன. பாடசாலைக்குபோன பிள்ளைகள் தாமதமாவீடுவந்தால் ஒரே பதற்றமாக இருக்கின்றது நாசி அடித்திருப்பானோ. என்ன நடந்திருக்கும் என்ற தேவையற்ற கற்பனையில் மூழ்கி நான் தினம் தினம் செத்துக்கொண்டிருக்கின்றேன். முன்பு முற்றவெளிக்கு போன மாடுகள் காணமல் போனால் முனியப்பருக்கு நேர்த்திவைக்கும் அம்மா கடிதத்தில் எழுதியிருந்தா மாடுகள் காணமல்போன காலம் மாறி இப்போ மனிதர்கள் காணமல் போகிறார்கள் எந்த கடவுளுக்கு நேர்த்திவைக்கலாம் என்று சிந்தித்தே காலம் கரைகின்றதாம். மனிதர் மட்டும் இல்லையம்மா மனிதமும் தொலைந்துபோகின்றது என பதில் எழுதவேண்டும் என்று நினைத்ததோடு சரி.

ஒன்று கூடலில் நான் அடிக்கடி கதைத்தது என் அம்மாவைபற்றித்தான். என் நட்புகளுக்கு புரியும் என்னை என் அம்மா எப்படியெல்லாம் செல்லம் தந்துவளர்த்தா, அதேபோல் பிறந்தநாளைத் தவிர மற்றைய நாட்களெல்லாம் எப்படி அடித்தா. பலகைக்கட்டையை பறித்துவிட்டு நல்லூரில் பாவைப்பிள்ளை வாங்கி தந்ததையும் ஆனால் நான் மறுபடியும் பலகைக்கட்டையை இடுப்பில் தூக்கி திரிந்ததையும் இதைப்பற்றி கதைத்து சிரித்து சிரித்ததனால் கண்ணீர்வழிந்ததும் வெளிப்பார்வைக்கு எல்லோரும் வசதியாகவும் மகிழ்வாகவும் இருப்பதுபோல் தோற்றமளித்தாலும் மனஆழத்தில் எத்தனையோ வடுக்கள். எல்லோரிலிருந்தும் சற்றுவிலகி அவர்களின் பேச்சை உற்றுநோக்கிய எனக்கு சிரிப்புதான் பிறந்தது. வெளியில் பிரச்சனை முடியவேண்டும் நாட்டுக்கு திரும்ப வேண்டும் என அளந்து கொண்டு இருப்பவர்கள். உள்ளூர நல்ல விசா

https://tamileelamarchive.com/

இல்லையே என பயந்தபடி பிரஜா உரிமை பெற்றவர்களிடம் ஆலோசனை கேட்பதும் அவர்களும் இரட்சிக்கவந்த இயேசுபிரான்போல் தங்களை உருவகப்படுத்திக்கொள்வதும் எனக்கு சிறுவயது நிகழ்வைத்தான் நினைவுபடுத்தியது. எங்கள் வீட்டுக்கு மா இடிக்கவரும் இலட்சுமியும் ஆவடையம்மாவும் இப்படித்தான் அன்று அழுதார்கள். பிரஜா உரிமை மறுக்கப்பட்டு நாடு திரும்பும் நாள் நெருங்க நெருங்க அவர்களின் கண்களிலிருந்து கண்ணீரும் பெருகிக்கொண்டே இருந்தது. ஆனால் எனக்குத்தான் எல்லாம் புரியாத புதிராகவே இருந்தது. தங்கட சொந்த நாட்டுக்கு போறதுக்கு இவை ஏன் அழுகினம்.

அங்கபோனால் நடிகைகளை நேரில பார்க்கலாம், புதிசா வாற படங்களை உடன பார்க்கலாம், கண்ணாடிக்காப்பு, மாலையெல்லாம் மலிவாக வாங்கலாம் பிறகு ஏன் அழுகினம். இவையள் எப்பவும் இப்படித்தான். கச்சைதீவுக்கு போறதுக்கு அம்மாட்டை காசுவாங்கி அதில பார்சோப், தேங்காய் எண்ணை எல்லாம் வாங்கிக்கொண்டு போவினம் பிறகு அங்கிருந்து தாழம்புசேலை, சின்னாளம்பட்டுசேலை என்று பண்டமாற்று செய்து அதை அம்மாவுக்கு விற்பதும். அப்பவும் அழுவார்கள். இப்ப ஏன் அழுகிறீங்கள் சகோதரங்களை சொந்தங்களை அடுத்த வருஷமும் சந்திக்கலாம்தானே என அம்மா ஆறுதல் கூறுவதும்.

அவர்கள் ஏன் அழுதார்கள் என்ற கேள்விகளுக்கான விடை என் கையில் கிடைப்பதற்கு எத்தனை காலம் காத்திருக்க வேண்டியிருந்தது. எமதுநாட்டுக்கு செல்லமுடியாத நிலையில் கொழும்பிலிருக்கும் அக்காவை இந்தியாவுக்கு அழைத்து செரெட்டோனிலும், எம். ஜி. எமிலும் தங்கி குழந்தைகளுக்கு உறவுகளை அறிமுகப்படுத்தி பிரியும்பொழுது அழுதஅழுகை. ரவி கூறினார் சரி சரி இப்ப ஏன் அழுகிறீங்கள் அடுத்த வருஷமும் சந்திக்கலாம்தானே....

சின்னவயதில படித்த கதையில் அந்த மந்திரவாதியின் உயிர் ஒரு மரப்பொந்தில் இருக்கிறது என்றமாதிரி என்னுடைய உயிர் என்னுடைய வீடு, அந்த முற்றம், அம்மாவின் சாய்மனை கதிரை அவைகளில்தான். வெட்ட வெட்ட முளைக்கும் ராவணனின் தலையைப்போல எனக்குள்ளும் பழைய நினைவுகளும் புதிய நிகழ்வுகளும் முளைத்துக்கொண்டே இருக்கின்றது. யாழ்போய் வந்த அண்ணா கூறினார் வீட்டுக்குபோகவேணும் என்று ஆசைப்படுகிறாய் அங்க அம்மாவின் நினைவாக என்ன இருக்கிறது. அந்த சாய்மனை கதிரையும் முகமறியா மனிதர்களையும்தவிர. அண்ணாவின் அறியாமை எனக்கு எரிச்சலைத்தான் அளித்தது. அதுவெறும் சீமெந்தும் மணலும் குழைத்து சக்கரைபோட்டு கட்டிய கட்டிடமாகத்தான் அண்ணாவுக்கு தெரிகிறது. ஆனால் எனக்கு அதன் ஒவ்வொரு சதுர அடியிலும் வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் என்தாயும் தந்தையும் அல்லவா வாழ்வதாய் தெரிகிறார்கள். என் உடல்மட்டும்தான் இங்கு வாழ்கிறது உள்ளம்.

ஆனால் ரவியும் பிள்ளைகளும் இது தங்கள் நாடு என்று எண்ணத்தொடங்கிவிட்டார்கள். அன்று ஒரு மதியம் பாடசாலை முடிந்து வீடுதிரும்பிய என்மகன்....

அம்மா ஏன் அம்மா எனக்கு உங்கட நாட்டைப்பற்றி பிழையா சொல்லித்தந்தனீங்கள்

என்ன பிழையா சொன்னனான்?

அது உங்கட நாடு என்று சொன்னது பிழை. நீங்கள்தான் இந்தியாவில இருந்து வந்தனீங்களாம். எங்கட ரீச்சர் இன்றைக்கு சரித்திரபாடத்தில் படிப்பிச்சவ!

புரியாத மொழிக்குள்ளும் மனிதர்களுக்குள்ளும் மூழ்கும் என் குழந்தைகளை நான் காப்பாற்ற வேண்டும். இப்படித்தான் அந்த சிங்கக்கொடியும் நமோ நமோ தாயே என்ற தேசியகீதமும் என்னையும் மூழ்கடித்திருந்தது. பாடசாலையில் அதை பாடும்பொழுது பக்திசிரத்தையோடு கண்மூடி நம.... என்று ஒரேயடியாக இழுப்பதும் பின்பு சினிமா தியேட்டரில் கறுப்பு வெள்ளை நிறத்தில் சிங்கக்கொடி பறக்க அண்ணாவின் மடியிலிருந்து குதித்து எழுந்து நின்றதும். நமது என்று நம்பி நாம் வாழ்ந்தபொழுது இல்லை என்பதை எத்தனை வழிகளில் குத்திக்காட்டினார்கள். குத்திய இடங்களில் ஏற்பட்ட எரிவு இன்னும் ஆறாமல் எரிந்து கொண்டுதானே இருக்கின்றது. நமது மூன்னோர்களின் ஆணிவேர் ஆழமாக பதிந்த எம்நாடே எமது இல்லையென்று அவர்கள் கூறும்பொழுது. அடைக்கலம் தந்த இந்த நாட்டை தமது நாடு என எண்ணும் எம் குழந்தைகளின் முகங்களின் முன்னே இவர்களின் விரல்கள் நாளை நீளலாம் நீளும். அப்போது எமது சிறார்களின் நிலை. எம்மைப்போல் எல்லாவற்றாலும் உடைந்து போகப்போகிறார்கள். இதிலிருந்து இவர்களை நாங்கள் எப்படிக் காப்பாற்ற போகிறோம்?

சமர் முடிந்து குளிர்காலம் ஆரம்பிக்கத்தொடங்கிவிட்டது. இந்த மூன்றுமாதமும் ஆராவாரித்துக்கொண்டிருந்த மனிதர்களும் மரங்களும் தங்களை கொஞ்சம் கொஞ்சமாக இழக்கத் தொடங்கி விட்டார்கள். எனது வீட்டுக்கு அருகாமையில் இருக்கும் நீண்ட கம்பிகளில் பறவைகள் தங்கள் இனங்களுடன் ஒன்று கூடி பேச ஆரம்பித்துவிட்டன. நான் சமையலையும் விட்டுவிட்டு யன்னலால் அவைகளை பார்த்தபடியே இருந்தேன். ஓ எத்தனை பறவைகள் இவைகள் என்ன பேசுவினம்? எந்த நாட்டுக்கு போகலாம் என்றா? ம் உங்களுக்கென்ன குளிர்காலம் ஆரம்பித்தவுடன் பறந்து போய்விடுவீர்களா? ஆனால் நான் இந்த குளிரில் உறைந்து பனியினில் நனைந்து.

மறுபடியும் பேசுகின்றன. அப்படி என்னதான் கதைக்கின்றீர்கள்? கேட்கவேண்டும்போல் இருந்தது. அதோ முக்கோண வடிவில் பறக்க ஆரம்பித்துவிட்டன. முன்னால் பறக்கும் பறவைதான் வழிகாட்டி காற்றின் தாக்கத்தையும் தாங்க வேண்டும் முதல் பறக்கும் பறவையின் சிறகு கீழ்நோக்கி அடிக்கும்பொழுது ஏற்படும் காற்றின் உதவியால் மற்றய பறவைகளின் சிறகுகள் மேலோக்கி எழுகின்றனவாம். முதல் செல்லும் பறவை களைத்தால் அடுத்தவர் இப்படியே ஒற்றுமையாக ஒற்றுமை ஏதோ மனதை நெருடியது. என்னை மறந்து போய்வாருங்கள் நான் இருந்தால் அடுத்த வருடம் சந்திப்போம் என பிரியாவிடை கொடுத்துவிட்டு திரும்பிய என் விழிகளில் ஒரு பறவைமட்டும் தனியாக அவைகள் போவதை ஏக்கத்துடன் பார்த்தபடி.... ஏன் ஏன் நீ போகவில்லை? பற பறந்து போ போ என என் மனம் அலறியது. ஆனால் அது மறுநாளும் அதற்கடுத்துவந்த நாட்களிலும் அவைகள் எல்லோரும் பிரிந்த அந்த நேரத்தில் அதே இடத்தில் வந்தமர்ந்து ஏதோ சோகமாக கத்தியபடி. இப்படித்தான் இப்படித்தான் அன்று எமது பெற்றோரும் நாளை நாங்களும்......

https://tamileelamarchive.com/

# தமிழ் மக்களுக்கு எதிரான போரில் அமெரிக்கா முனைப்பாக நிற்பது ஏன்?

வேல்ஸ் இல் இருந்து அருஷ்

அண்மையில் தமிழக ஊடகம் ஒன்றிற்கு பேட்டியளித்த இந்தியா வின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னான்டஸ் 'விடுதலைப்புலிகள் மீதான இந்தியாவின் தடை தொடர்வதற்கு அமெரிக்காவும் இலங்கை அரசுமே காரணம்' எனத் தெரிவித்து இருந்தார். அவரது கூற்றில் உண்மை உள்ளதுடன் இந்தியா வால் புரிந்து கொள்ளப்படாத பல அர்த்தங்களும் உள்ளன. தமிழ் மக்களுக்கு எதிராக அமெரிக்கா அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அதிகம். அதன் விளைவாக சிங்கள அரசுகளால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி தமிழ் மக்களும் ஏராளம்.

சிங்கள அரசுகளுக்கு அமெரிக்கா பொருளாதார, இராணுவ உதவிகளை தொடர்ந்து வழங்கி வருவது மட்டுமல்லாது. 1980 களில் இஸ்ரேலின் மொசாட்டின் துணையுடன் புலனாய்வு பயிற்சிகளையும் தகவல்களையும் வழங்கியிருந்தது. கிழக்கின் பாதுகாப்புக்கு என இஸ்ரேலின் உதவியுடன் உருவாக்கப்பட்ட விசேட அதிரடிப்படைக்கும் (STF) அமெரிக்காவின் ஆலோசனை தான் முக்கிய காரணம். இந்த படையினர் பயன்படுத்தும் கோல் கொமொண்டோ ஆயுதம் கூட இஸ்ரேலிய தயாரிப்புத்தான். ஆனால் அதிரடிப்படையினர் மேற்கொண்ட இனப்படுகொலைகள் பல ஆயிரம். அக்காலப்பகுதியில் அமெரிக்காவின் தலையீடுகள் எல்லை மீறவே இந்தியா, இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் 1987 இல் சிங்கள அரசை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முனைந்தது. ஆனால் இந்திய அரசினது தவறான கணிப்பீடுகளும், கொள்கைகளும் ஒப்பந்தத்தை செயலிழக்கச் செய்துவிட்டது.

இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமானது. அமெரிக்காவின் தலையீடுகள் மெல்ல மெல்ல மீண்டும் அதிகரித்தன. 1990 களின் நடுப்பகுதியில் சிங்கள படைகளுக்கு தனது விசேட படையணிகள் மூலம் (Green berets) பயிற்சிகள் கொடுத்து ஒரு படையணியையே (53 ஆவது படையணி) உருவாக்கி கொடுக்கும் அளவிற்கு அதன் உதவிகள் விரிவடைந்தன. இது மட்டுமல்லாது 1997 இல் சிங்கள அரசு ஒரு கொடூரமான இனஅழிப்பு போரை நடாத்தி கொண்டிருந்த வேளை, புலிகளை பயங்கரவாதிகளாக முத்திரை குத்தி தடை செய்ததுடன் 2001 இல் பிரிட்டன், 2006 இல் கனடா போன்ற நாடுகள் புலிகளை தடை செய்வதற்கும் அழுத்தம் கொடுத்ததும் அமெரிக்காவே.

1990 களின் நடுப்பகுதியில் இஸ்ரேலின் நவீன கிபீர் குண்டுவீச்சு விமானங்களை சிங்கள அரசு வாங்குவதற்கு துணைபுரிந்ததும் அமெரிக்கா தான். அமெரிக்காவின் அனுமதி இன்றி இஸ்ரேல் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை விற்பது இல்லை. கிபீர் விமானங்கள் கூட உலகில் நான்கு நாடுகளில் தான் பாவனையில் உள்ளன. இந்த போர் விமானங்கள் தான் கொத்து கொத்தாக அப்பாவித் தமிழ் மக்களை படுகொலை செய்வதற்கும், தமிழ் மக்களின் பொருளாதார வளங்களை நாசம் செய்வதற்கும் சிங்கள அரசிற்கு பேருதவி புரிகின்றன. அண்மையில் முல்லையில் வள்ளிபுனத்தில் 51 பள்ளி மாணவிகளை குண்டுகள் வீசி படுகொலை செய்ததும் இந்த விமானங்கள் தான்.

தரைப்படை, விமானப்படையுடன் மட்டும் நிற்கவில்லை அமெரிக்க அரசின் உதவி சிங்கள கடற்படைக்கும் இஸ்ரேலின் துணையுடன் டோரா, சுப்பர்டோரா போன்ற நவீன கடற்கலங்களை வழங்கியதுடன் இதற்கான பயிற்சிகள், தொழில்நுட்பங்களையும் வழங்கியிருந்தது. இதன் உச்சக்கட்டமாக போர் நிறுத்த காலத்தில் ரோந்துப்படகை P - 621 (Coast Guard Cutter Courageous) அமெரிக்கா வழங்கியிருந்தது. ஓயாத அலைகள் - 3, ஆனையிறவு சமர், தீச்சுவாலை போன்றவை சிங்களப்படைகளின் பலத்தை உடைத்து புலிகளை சமவலுநிலைக்கு உயர்த்தியிருந்த வேளை, போர்நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் அமெரிக்காவின் இந்த இராணுவ உதவிகள் சிங்கள படைகளின் படைவலுவை ஓங்க செய்வதற்கான முயற்சியாகவே புலிகளால் நோக்கப்பட்டது. இது போர்நிறுத்தத்தை குலைப்பதற்கான ஒரு முயற்சி என்றாலும் மறுக்க முடியாது.

தமிழ் மக்களின் மீதான அழுத்தங்களை படிப்படியாக அதிகரித்த அமெரிக்கா, இணைத்தலைமை நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றிலும் ஆதிக்கம் செலுத்தி புலிகளின் மீது ஒருதலைப்பட்சமான அழுத்தங்கள் தடைகளை ஏற்படுத்தி பேச்சுக்களை முடக்கியது. கடந்த கால அமெரிக்க அரச அதிகாரிகளின் அறிக்கைகளைப் பார்த்தால் கிளைமோரில் உயிர் விடும் ஆக்கிரமிப்பு படைகளுக்காகக் கூட கண்டனம் விட்டுள்ளது தெரியவரும். சிங்கள அரசும் அமெரிக்காவிற்கு விசுவாசமாகவே அன்று தொட்டு இன்று வரை இருக்கிறது. ஐ.நா செயலாளர் நாயகம் பதவிக்கு போட்டியிட்ட ஜெயந்த தனபால கூட ஒரு அமெரிக்க சார்பு பிரதிநிதிதான். இவரது அணுவாயுத பரவல் தடுப்பு கொள்கை தொடர்பான அறிக்கை இந்தியாவின் பாதுகாப்பு நலன்களைப் வெகுவாக பாதித்திருந்தது.

அமெரிக்க அரசின் தமிழ் மக்கள் விரோத செயற்பாடுகளின் அதி உன்னதமாக அண்மையில் 'ஆயுதம் வாங்க வந்த

https://tamileelamarchive.com/

புலிகள் கைது' என்ற செய்தியைக் கூறலாம். புலிகள் வாங்க வந்ததாக கூறப்படும் ஆயு தங்கள் தான் மிகப்பெரும் நகைச்சுவை. சாம் - 18 ரக ஏவுகணைகள் - 10, ஏ.கே ரக துப் பாக்கிகள் 500 இவை இரண்டும் சோவி யத்தின் ஆயுதங்கள் என்பதுடன் சோவியத் தில் இருந்து பிரிந்து சென்ற நாடுகளில் மிக மலிவாகவும், இலகுவாகவும் கொள்வனவு செய்யப்படவும் கூடியவை. அப்படி இருக்கும் போது சாதாரண விமானப்பயணிகளே கைப் பொதியாக பயணச்சீட்டையும், கடவுச்சீட்டை யும் பொலீத்தீன் பைகளிலேயே கொண்டு செல்லமுடியும் என்ற பாதுகாப்பு கெடுபிடி யுள்ள அமெரிக்காவிலா வாங்குவார்கள்? மேலும் ஓயாத அலைகள்-1 சமரில் மட்டும் ஏறத்தாழ 1800 ஏ.கே வகை துப்பாக்கிகளை கைப்பற்றிய புலிகளிடம் ஒட்டுமொத்த ஈழப் போர்களிலும் கைப்பற்றிய துப்பாக்கிகள் எவ்வளவு இருக்கும். எனவே 500 ஏ. கே களை அவசரமாக கொள்வனவு செய்யவேண்டிய தேவை புலிகளுக்கு இருந்தது என்றால் யார் நம்புவார்? இது 2006 இன் சிறந்த நகைச் சுவை தானே!

சரி! அமெரிக்கா ஏன் இப்படி ஒரு புர ளியை கிளப்பிவிட்டுள்ளது. சிங்கள அரசை குளிர்விக்கவும், தமிழ் மக்களை மேலும் மிரட்டவுமே இப்படி செய்ததாகக் தான் கொள்ள முடியும். அதாவது காலம் காலமாக அமெரிக்கா முழுக்க முழுக்க தமிழர் விரோத செயற்பாடுகளையே செய்து வருகிறது என்பது தெளிவு. இதற்கு காரணம் என்ன. தமிழ் மக்கள் அமெரிக்காவிற்கும் அதன் மக்களுக்கும் எதிராக என்ன செய்தார்கள். அமெரிக்கா ஏன் எமது விடுதலையை நசுக்க முனைகிறது.

காரணம், இந்தியா தான்! ஆச்சரியமாக இருக்கலாம் அது தான் உண்மை. அமெரிக் காவைப் பொறுத்தவரை தனது பிராந்தியத் தில் அமைதியையும், ஏனையநாடுகளின் பிராந்தியங்களில் அமைதியின்மையையும் தோற்றுவிப்பதன் மூலம் தனது தேசிய நலன்களை பாதுகாப்பது வழமை. இஸ் ரேலை கொண்டு மத்திய கிழக்கில் நெருக் கடியை தோற்றுவித்ததும் சோவியத்திற்கு நெருக்கடிகளை கொடுக்கவே. சோவியத் தின் வீழ்ச்சிக்கு பின்னர் அமெரிக்காவின் பார்வை தெற்கு ஆசியாவின் பக்கம் திரும்பி யுள்ளது. இதற்கு முக்கிய காரணம் சீனாவும், இந்தியாவும் தான். தாய்வானை மையப் படுத்தி சீனாவை நெருக்கடிக்கு உள்ளாக் கும் அதே சமயம், சிங்கள அரசைக் கொண்டு இந்தியாவை ஒரு நெருக்கடிக்குள் தள்ள முயற்சி செய்கிறது.

இதற்கும் எமது விடுதலைப்போருக்கும் என்ன சம்மந்தம் என நீங்கள் நினைக்கலாம். இலங்கை ஒன்றாக இருக்கும் வரை தான் அமெரிக்காவால் இந்துசமுத்திர பிராந்தியத் தில் இந்தியாவிற்கு ஒரு நெருக்கடியை தோற்றுவிக்க முடியும். தமிழீழம் உருவாகி விட்டால் இந்த நெருக்கடி, நடுநிலைப் படுத் தப்பட்டுவிடும் என்பதைவிட, இந்தியாவிற்கு சார்பாக மாறிவிடும் என்பதே உண்மை. ஏனெனில் சிங்கள அரசை இந்தியாவிற்கு எதிராக செயற்பட வைப்பது போல தமிழீ ழத்தை மாற்ற முடியாது. இந்தியாவிற்கும் ஈழத்தமிழர்களுக்கும் அப்படியான ஒரு பிணைப்பு உள்ளது. இது இன்று உரு வாகியது அல்ல இராமர் அணை போட்ட காலத்திற்கு முன்பே இருந்து உருவான பந்தம்.

அமெரிக்காவின் வர்த்தக மையம்




படம்: அமெரிக்காவினால் வழங்கப்பட்ட ரோந்துப்படகு
P 622 (Coast Guard Cutter Courageous)

https://tamileelamarchive.com/

மீதான தாக்குதல், இங்கிலாந்து நிலத்தடி தொடருந்து குண்டு வெடிப்பு உட்பட ஏராளமான தாக்குதல்களில் பாக்கிஸ்தானின் தொடர்புகள் மிக அதிகம். அது மட்டுமல்லாது தலிபான்களுக்கு முழு ஆதரவு கொடுத்து வந்ததும் பாகிஸ்தான் தான். ஆனால் அமெரிக்கா பாகிஸ்தானை பகைத்ததில்லை. ஏனெனில் தெற்கு ஆசியாவில் ஏற்படுத்தப்படும் நெருக்கடிகள் தான் அமெரிக்காவிற்கு அதன் பயங்கரவாதத்திற்கு எதிரான போரை விட முக்கியமானவை. எனவே தான் இன்றும் பாக்கிஸ்தானுடன் அதன் உறவை வலுவாக வைத்துள்ளது.

அமெரிக்காவின் இரட்டை வெளியுறவு கொள்கையை மேலும் விளக்க வேண்டுமானால் சோவியத்தின் சார்புநிலையை கொண்டிருந்த யுகோஸ்லாவாக்கியாவை ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் சிறு சிறு நாடுகளாக உடைத்து தனக்கு சார்பான சில நாடுகளை உருவாக்கியது ஒரு கொள்கை. அமெரிக்க சார்பு இலங்கை உடைந்து இந்திய சார்பு தேசம் ஒன்று உருவாவதை இயன்றவரை தடுக்க முனைவது மறு கொள்கை.

தற்போது பாகிஸ்தான் ஊடாக சிங்கள அரசை முழுமையாக தனது பிடிக்குள் கொண்டு வந்துள்ளது. அதாவது இந்தியாவின் தெற்குப் பகுதியில் ஒரு நிரந்தர நெருக்கடியை திட்டமிட்டு உருவாக்கிய அமெரிக்கா அது தமிழீழம் என்ற சொல்லின் மூலம் இந்தியாவிற்கு சார்பாக மாறுவதை விரும்பப் போவதில்லை. எனவே தான் இலங்கையில் ஒற்றை ஆட்சி முறைக்குள் தான் தீர்வு காணமுடியும் என கூப்பாடு போடுவதுடன், இந்தியாவிற்கும் புலிகளிற்கும் இடையேயான உறவு வளர்வதை தடுக்கும் முகமாக புலிகள் மீதான தடையை நீடிக்க அழுத்தமும் கொடுக்கிறது.

ஆனால் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் சொன்ன கருத்தில் ஒரு வெக்கக்கேடான அர்த்தம் ஒழிந்துள்ளது. அதாவது புலிகள் மீதான தடை என்பது ஒரு உள்நாட்டு விவகாரம் அல்ல அது இந்தியாவின் வெளிவிவகார கொள்கை சார்ந்தது. ஆனால் அந்த தடையை நீடிக்க அமெரிக்காவாலும் சிங்கள அரசாலும் முடியுமானால், இவ்விரு நாடுகளும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளில் எத்தகைய ஆளுமையை கொண்டுள்ளன என்பதை இந்திய மக்கள் எண்ணிப் பார்த்து உள்ளார்களா? தனது பிராந்திய நலன்களை பாதுகாக்க கூட வெளியுறவு கொள்கைகளை தன்னிச்சையாக மாற்ற முடியாத இந்தியா, எப்படி உலகில் வலிமை மிக்க நாடாக உயரமுடியும்?

சில வருடங்களுக்கு முன்னர் சீனா அமெரிக்காவின் போயிங் தனியார் விமான நிறுவனத்திடம் சீனா அதிபரின் தனிப்பட்ட பாவனைக்கு என ஒரு பயணிகள் விமானத்தை கொள்வனவு செய்திருந்தது. வாங்கப்பட்ட விமானத்தை பரிசோதித்த அதிகாரிகளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. 20 இற்கு மேற்பட்ட நுண்ணிய கமராக்கள் விமானத்தில் ஆங்காங்கே மறைவாக பொருத்தப்பட்டிருந்தன. அமெரிக்கா தனது ஒவ்வொரு செயலையும் மிகவும் தந்திரமாக செய்வதற்கு இது சிறு உதாரணம்.

இன்று அமெரிக்காவினால் வழங்கப்படும் ரோந்துக்கப்பல், பாக்கிஸ்தானின் உளவு விமானம், இஸ்ரேலின் கடற்படைக் கப்பல்கள் ஏன் சிங்கள அரசிற்கு இலவசமாகவும், மலிவாகவும் வழங்கப்படுகின்றன என்பதை இந்தியா உற்று நோக்கியது கிடையாது. சிங்கள அரசை கைவிட்டு நிரந்தர நண்பர்களான ஈழத்தமிழர்களுடன் கைகோர்க்க இந்தியா முனைந்ததும் இல்லை. 1930 களில் இருந்து இன்று வரை அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கைகளை ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு 10 வருடங்களுக்கும் பாரிய மாற்றங்கள் உண்டு. ஐரோப்பிய ஒன்றியமோ, அமெரிக்காவோ தமது பிராந்திய நலன்களுக்காக வெளியுறவு கொள்கைகளில் மாற்றங்களை காலத்துக்கு காலம் ஏற்படுத்துவதில் பின்நிற்பதில்லை.

இந்தியாவும் தனது பிராந்திய நலங்களை கருத்தில் கொண்டு வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி ஈழத்தமிழ் மக்களுடன் கைகோர்க்க வேண்டும். அது தான் ஏனைய நாடுகள் இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்துவதை தடுப்பதற்குரிய இராஜதந்திர வழியாகும். தற்போதைய உலகம் போர்களை விட பொருளாதார வளர்ச்சியிலேயே அதிக அக்கறை கொண்டுள்ளது. அதற்கு சிறந்த உதாரணம் சீனாவின் அதீத பொருளாதார வளர்ச்சியாகும். இந்தியாவும் சீனாவை பின்பற்றி தனது பொருளாதாரத்தை உயர்த்தவே போராடிவருகிறது. ஆனால் பிராந்தியங்களின் உறுதியான தன்மை தான் பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய காரணி என்பதை இந்தியா உணரப்போவது எப்போது?

இந்தியாவும் தனது பிராந்திய நலங்களை கருத்தில் கொண்டு, வெளியுறவு கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி ஈழத்தமிழ் மக்களுடன் கைகோர்க்க வேண்டும். அது தான் ஏனைய நாடுகள் இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்துவதை தடுப்பதற்குரிய இராஜதந்திர வழியாகும். தற்போதைய உலகம் போர்களை விட பொருளாதார வளர்ச்சியிலேயே அதிக அக்கறை கொண்டுள்ளது. அதற்கு சிறந்த உதாரணம் சீனாவின் அதீத பொருளாதார வளர்ச்சியாகும். இந்தியாவும் சீனாவை பின்பற்றி தனது பொருளாதாரத்தை உயர்த்தவே போராடிவருகிறது. ஆனால் பிராந்தியங்களின் உறுதியான தன்மைதான் பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய காரணி என்பதை இந்தியா உணரப்போவது எப்போது?

https://tamileelamarchive.com/

# பிணக்காவல்

கந்தையா நவரேந்திரன்

புலரிக்கு முன்னர்
ஒரு பறவையின் கூவிளி,
ஒரு நொடி நேரத்துக்கு மட்டும்.
அந்த இராப் பொழுதை
உறக்கம் விட்டெழுப்பியது.
அக்கூவிளியின் ஒளியும்
அடுத்த கணமே நிறம் வெளிறிப்போனது.
மரங்கள் யாவையும்
கருமைக்குள் கரைந்து போயின.
அனல் காற்றைத் தணிக்கும்
அச்சிறு தீவு சூழ் கடலும்,
அன்று மெல்லிய மிதப்புடன் மட்டும்
அமைதியாய்க் கிடந்தது.
இரவின் முனைப்பான அமைதிக்குள்,
திண்ணிய விரைவதிர்வுகள் மட்டும் வியாபித்திருந்தன.
என்றென்றைக்கும் அல்லும் பகலுமாய் வள்ளொலி கிளம்பி,
ஊராரின் காதுகளைத் துளைத்தெடுக்கும்
அயலவர்களின் நாய்கள் கூட
அன்றைக்கு மட்டும் ஏனோ அமைதியாயிருந்தன

மொத்தத்தில் ஓர் அதிசயமான அசைவின்மை
அச்சிறு தீவை மூடிக்கொண்டது
கேடு விளைவிக்குமாற்றலை
அன்று தன்னுள் மறைத்து வைத்திருந்த
அவ்விருட்டின், செறிநத் இறுக்கத்தில்
உறைந்திருந்த,
தந்தை, கருத்ததரித்திருந்த தாய்,
ப்தின்ம வயதெட்டாப் பிள்ளைகளிருவர்,
குதலை பேசும் மதலையுமாய்,
ஐவரது உடம்புகளும் மூளைகளும்,
உடனடி எதிர்விளைவாக,
அப்பறவையின் கூவிளியோசை சொல்லிய செய்தியின்
உள்ளுணர்வைப் புரிந்துகொண்டாற்போல்,
சட்டென விழித்துக்கொண்டன.
இறப்புக்கு முன் தோன்றும்
குளிர் வியர்வைக்கும், தொண்டை இரைச்சலுக்கும்,
அவகாசம் கொடுக்காத,
அங்கு வந்த இரக்கமற்ற வேட்டை நாய்கள்,
குறுக்கு மறுக்குமாய் ஒரே பாயில் படுத்திருந்த
அந்த அழகிய குடும்பத்தைக் கூண்டோடு
கொடுமையாய்க் கொன்றொழித்தனர்,
தமிழராய்ப் பிறந்த ஒரே குற்றத்திற்காக.

துயரத்தைத் தன் சிறகு மடிப்புக்குள் புதைத்துவிட்டு,
அக்கம்பக்கத்திலுள்ள இழவுகொண்டாடிகள்,
அச்சம் நீங்கி, வருகை தரும்வரை,
பிணக்காவல் விழிப்பில் காத்திருந்தது அந்தப்பறவை,
நாள் தோறும் அவ்வீட்டு அரிசிப் பருக்கைகளைத் தின்று
வளர்ந்த நன்றிக்கடனுக்காக,
விடியல் வரை.



https://tamileelamarchive.com/

# பயணம்

● குமுதினி

வாசலுக்கு இன்னும் கொஞ்சத் தூரந்தான் இருந்தது. ஆனாலுமென்னவோ யுகயுகங்களாக அந்தச் சிறுகற்பாதைகள் வழியே, இதே துன்பத்துடன் நடந்து கொண்டிருப்பதான பிரமை அவளுள் எழுந்தது. துன்பத்தின் தகிக்கின்ற ஓரங்களையெல்லாம் தன் கொடுங்கரங்களுள் பற்றியிருக்கின்ற அச்சம் வேறு. இன்று காலைக்குப்பிறகு வாரப்பட்டிராத கேசத்தினுள்ளும், கழுத்தோரங்களிலும் வியர்வை கசகசத்தது. தெருவோரப் பாரவண்டிச் சில்லினுள் எதிர்பாராமல் சிக்கிக்கொண்ட தீனமான பறவை போல இதயம் நலிந்துபோயிருந்தது.



ஒவ்வொரு காலடியையும் பெயர்ந்து வைப்பதற்கு அவள் மிகுந்த சிரமப்பட்டாள். பொங்கிப் பொங்கி எழுந்துகொண்டிருந்த அழுகையின் வீச்சு அவளைச் சுயவுலகப் பிரச்ஞையிலிருந்து அப்பாலே தள்ளிச் சூனியத்துடன் புதைத்து விடுவதான வலிமையுடன் இருப்பதாய்ப்பட்டது. அழுகையைப் புறங்கையினால் அழுத்தி அழுத்தி விழுங்க முற்பட்டாள் அவள். விக்கல்கள் விரல்களின் இடைவெளியீடு தடக்கிக் பாதையோடு நீண்டிருந்த வெளிக்குள் கலந்தன.

ஒரு சீரான கதியுடன், அவள் முன்னே ஸ்ட்ரெச்சரைத் தள்ளிக்கொண்டு நடந்துகொண்டிருந்த அந்தப் பையனுக்கு அவள் நிலை புரிந்திருக்க வேண்டும். ஒன்றில் நிழலை இன்னொன்று தாங்கியபடி நெடிதுயர்ந்து பாதையின் இரு மருங்கும் நீண்டுகிடக்கின்ற அந்த வைத்தியசாலைக் கட்டிடங்களை இலக்கின்றி வெறித்தவாறே அவன் நடந்துகொண்டிருந்தான். அவளின் தவிப்பும் கண்ணீரும் அவனையும் ஆழப் பிழிந்திருக்க வேண்டும். ஸ்ட்ரெச்சரைச் சற்றே தாமதப்படுத்தி "அக்கா..." என்றபடி சற்றே அவள் நடக்கும் பக்கமாய்த் தலையைத் திருப்பினான். அவன் குரல் அவளது உலகத்து

https://tamileelamarchive.com/

நிகழ்வுகளில் புதைந்திருப்பது தெரிந்தது.

அவள் அவசரமாய்க் கண்களைத் துடைத்தபடி திடுக்குற்றவளாய் முன்னும் பின்னும் பார்த்தாள். "தெரிந்தவர்கள் யாராவது தன்னை அடையாளம் கண்டுவிடக் கூடுமோ" என்று நினைவுகள் படிந்திருந்த எண்ணம் சட்டெனப் பீதியாய் விரவிற்று நெஞ்சில். கண்வரை நீண்டிருந்த பாதையின் வீச்சினுள் எவரும் தென்படாதது சற்றே அமைதியைத்தர அவனை நோக்கினாள். எதற்காய் அவன் அழைத்தான் என்ற கேள்வி முகத்திற் படர்ந்தது.

"அக்கா... அந்த வளைவு தாண்ட, மெயின்றோட்டுக்குப்போற வாசல் வரும்.... அந்த வளைவு வரைக்கும் நான் வரமுடியும். வாசல்ல ஆரும் தெரிஞ்ச ஆக்கள், நீங்கள் வாட்டில பிள்ளையை வைச்சிருக்கேக்கை இருந்த ஆக்கள் ஆரும் நிக்கலாம். உங்களில வித்தியாசம் தெரியாதபடி நீங்கள் உங்கள வைச்சிருக்க வேணும்அக்கா..."

தான் சொல்லவிரும்பியது, தன்னாற் சொல்ல முடிந்தது அவ்வளவுதான் என்பதுபோல ஸ்ட்ரெச்சரைத் தள்ளத்தொடங்கினான். அவனை, கடந்துபோன இந்தப் பத்து நாட்களிலும் வைத்தியசாலையின் ஏதேனுமொரு பகுதியில் எப்போதாவது கண்டிருந்ததாய் அவளுக்கு ஞாபகமில்லை. ஒரேமாதிரியான வெள்ளுடைகளில், ஸ்ட்ரெச்சரைத் தள்ளியபடி வைத்தியசாலைக் கட்டிடங்களிடையே நடக்கின்ற எத்தனையோ பேர்களில் அவனையும் எப்போதாவது அவள் சந்தித்திருக்கக்கூடும். ஆனாலும் புற உலகம் பற்றிய பிரக்ஞையே இல்லாமல் ரமணா கண் விழிக்கப்போகின்ற தருணத்திற்காகவும், அவனது "அம்மா..." என்கின்ற குழந்தைக் குரல் ஒலிக்கப்போகின்ற கணத்திற்காகவும் தன் உயிரை விழிகளிற் தேக்கிக் காத்திருந்தவளுக்கு அந்தப் பையனை முன்னர் அறிந்திருக்க நியாயமில்லை.

நேரம் பன்னிரெண்டு மணியைக் கடந்துவிட்டிருக்க வேண்டும். மதிய நேரப் பார்வையாளர்களால் வராண்டாக்களும், வாட்டுகளும் நிறையத்தொடங்கியிருந்தது. வழமையான நடைமுறைகள் முடிந்துவிட்டன என்பதாய்த் தாதி சொன்ன சிறிது நேரத்தில் ரமணாவின் ஸ்ட்ரெச்சரும் வார்ட்டின் அப்பாலே சற்றுத் தள்ளியிருந்த வராண்டாவுள் கொண்டுவந்து விடப்பட்டிருந்தது. அவள் சுவரோரமாய் இருந்த ஸ்ட்ரெச்சரினுள் படுத்திருந்த ரமணாவின் விழிகளை வெறித்தபடி எவ்வளவு நேரம் நின்றிருந்தாளோ!

பாதை கடந்து போவோரும் வருவோரும் தன்னைக் கவனிக்கக்கூடும் என்ற நினைப்பில்லாதவள் போலச் சிலையாய் உறைந்திருந்தாள் அவள்.

"என்ன புள்ள கனநேரமாய் நிக்கிறாய்...? வீட்டுக்காரருக்கு அறிவிச்சாச்சோ....?" காதுள் விழுந்த கேள்வியில் திடுக்குற்று நிமிர்ந்தாள்.

"ஓ... இப்ப வருவினம்...."

துன்பத்தின் அடர்வுகள் இடையிடையே படிந்த இரு கூறாக்கப்பட்டது போலிருந்தது அவள் குரல். கேட்டவர்கள் போய்விட்டிருந்தார்கள் அவள் சொன்ன வார்த்தைகளிலிருந்த பொய்மை அவளைத் தீயாய்த்தகித்தது.

தன் ஒரே மகளின் துணையிழந்த வாழ்வை எண்ணி விதியை நொந்துகொண்டிருக்கின்ற, தோல் சுருங்கி விழிகளின் ஒளிமங்கிப்போன அவள் தாயா... அந்த முதிய நிழலினுள் ஒடுங்கியபடி தங்கள் அம்மா அண்ணனைக் குணப்படுத்திக்கொண்டு வீடு வருவாள் என்று காத்திருக்கின்ற இவள் இரு சின்ன மகள்களா... யாரால் அவள் பொருட்டு அங்கு வரமுடியும்? துன்பம் பாறையாகி அவளின் நலிந்த இதயத்தை நெருக்கி நசிப்பதாய்த்தோன்றிற்று, அந்தக் கணத்தில். அவளின் மூடிய விழிகள் தாண்டிக் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது.

"அக்கா..."

ஒருவிதமான இரங்கும் தொனியுள்ள அழைப்பிற்கு அவள் விழிகளைத் திறந்தபோது இவன் அங்கு நின்றிருந்தான்.

"கனநேரமாய் நிக்கிறியள் அக்கா... ஆராவது வருவினமோ வீட்டையிருந்து?"

"....."

வார்த்தையெழாமல் அவள் தவிப்பது அவனுக்கு அவள் நிலையைக் கோடியிட்டிருக்க வேண்டும்.

"எங்க உங்கட வீடு...?"

அவள் சொன்னாள். அவன் மனத்துள் ஏதோ கணிப்பு ஓடிற்று.

"எப்பிடியும் ரெண்டு மணித்தியாலப் பயணம்... என்னத்தில போகப்போறியள்...?"

தன்னுள் தானே திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்து, விடை அறியாது தவித்த கேள்வியை அவனும் கேட்டபோது அவள் கண்கள் நிரம்பின.

"ஓட்டோவில போறதெண்டாலும் வழமையான றேற்றை விடக்கூடத்தான் கேட்பாங்கள்... ஆயிரத்து ஐந்நூறு, இரண்டாயிரம் வரும்...."

அவன் தனக்குத்தானே பேசுபவனாய்ச் சொன்னான்.

அவள் கைப்பையை எடுத்து விரித்தாள். கசங்கியிருந்த ஒரு ஐம்பது ரூபாத்தாளும், ஒரு இருபது ரூபாத்தாளும் தவிர வெறுமையாயிருந்தது கைப்பை. பிறகு நலிந்த குரலில் சொன்னாள்..

"என்ரை அம்மாவும் இவனுக்குக் கீழை ரெண்டு மகள்களுந்தான்... இடம் பெயர்ந்துதான் இருக்கிறம். இப்ப... பஸ்ஸிலதான் போகவேணும்... இல்லாட்டி நடந்து...."

அழுகைக்கிடையேயான இவளின் முறிந்த வார்த்தைகள் அவனை மௌனமாக்கியிருந்தன.

சிறிது நேர மௌனத்தின் பின் அவளுக்குமட்டும் கேட்கக்கூடியதான ஆழ்ந்த தொனியில் அவன் சொன்னான்...

"வாசல் வரைக்கும் நான் ஸ்ட்ரெச்சரில் கொண்டுவாறன். உங்கட இடத்துக்குப்போற பஸ் இரண்டரைக்கு வரும்... பின்பக்கப் பாதையால போறது சுகம்... சனம் கொஞ்சம் குறையட்டும்..." அவளின் துன்பங்களின் பரிமாணத்தை ஆத்மார்த்தமாய் உணர்ந்திருப்பதை அவன் முகம் சொல்லிற்று. அவள் வார்த்தையெலாமல் நின்றிருந்தாள். இடையீடின்றிப் பிரவகித்துக்கொண்டிருந்த கண்ணீரில் நன்றி தெரிந்தது.

பையன் ஸ்ட்ரெச்சரின் வேகத்தைக்



குறைத்து நிறுத்துவது தெரிந்தது. வளைவு வந்துவிட்டிருந்தது. சற்றே தூரத்தில் நின்றிருந்த காவலாளி தவிர எவரும் தென்படாதது. பதற்றம் தணித்தது. அந்தப் பொழுது பொதுவாயே அமைதியானதுதான் நோயாளியைப் பார்க்க வருகின்றவர்கள் மதியம் நிலவுகின்ற பரபரப்பையும் சந்தடியையும் தம்மோடே துடைத்து எடுத்துக்கொண்டு போகின்றாற்போன்ற அமைதி.

அவள் கையில் வைத்திருந்த தோட்பையை நிலத்தில் வைத்தாள். ஸ்ட்ரெச்சரின் நடு அரைப்பாகத்திற்கு குறைவான இடத்துள் களைத்தவன் போல ரமணா படுத்திருந்தான். தளர்ந்து சோர்கின்ற நடையுடன் அவள் ஸ்ட்ரெச்சரை நெருங்கினாள். அவன்மீது போர்த்தியிருந்த துவாலையை மெல்ல விலக்கினாள். ஒரு மென்மஞ்சட் தன்மையுடன் வெளிறியிருந்த முகத்தில் ஒரு பனிப்பூவின் மெல்லுறக்கம் போல கருமையான இமைப்போர்வையுள் விழிகள் மூடியிருந்தன. தாய்மையின் மகத்துவமான உணர்வுகளை அவளில் அறிமுகம்செய்த சின்ன மகன்! உயிரின் தாபமாய் சொல்லொணாத் தவிப்பு நிறைய அவள் விழிகள் பெருகிற்று.

"அக்கா.... ரெண்டரைக்கு வரும்...."

அவளின் முன்னே காத்திருக்கின்ற கடமையை ஒரு இரக்கத்துடன் நினைவு படுத்துவதாயிருந்தது அவன் குரல். அவள் அவசரமாய் விழிகளைத் துடைத்துக்கொண்டாள். ரமணாவை வாரியெடுத்து தோளில் சாய்த்துக்கொண்டாள். துவாலையால் கழுத்திலிருந்து பாதம் வரை போர்த்தாள்.

நிலத்திலிருந்த அவளது பையை எடுத்துக்கொடுக்கும்போது அவனது கண்களிலும் நீர் படலமிட்டிருந்தது தெரிந்தது.

அவனுக்கு அவள் நன்றி சொல்லத்தான் வேண்டும். எத்தனைப் பெரிய உதவி! அவள் நிலையறிந்து செய்த உதவி. விதிகளையும் நடைமுறைகளையும், வழக்கங்களையும் அவற்றின் எல்லை தாண்டி மீறுகின்றதான அவளது "குற்றத்திற்கு" அவனும் உடந்தையாயிருந்திருக்கிறான்.

அவளின் நெஞ்சுகள் துன்பத்தில் கரைந்து நன்றியுணர்வு கண்ணீரிற் தெரிந்தது. ஒரே கணத்தில் பலமாய் எழுந்து உருவழிந்து போகின்ற வார்த்தைகளைக் கோர்க்க முடியாமல் தடுமாறினாள் அவள்.

"பஸ் வந்திடுமக்கா..."

அவளின் உணர்வுகளைப் புரிந்துகொண்டவன்போல் இதமான குரலில் அவன் சொன்னான்.

"நாலு நாலரைக்குள்ள உங்கட இடத்துக்குப் போய்ச்சேர்ந்திடலாம் அக்கா...."

வாசலை நோக்கி யாரோ வருவது தெரிந்தது. தாமதிப்பது நல்லதல்ல. அவள் மௌனமாய் விடைபெற்று வாசற்பக்கமாய் நடக்கத்தொடங்கினாள். முதுகின் பின்னே ஸ்ட்ரெச்சரின் கடகடக்குமொலி தேய்ந்து மறைந்துகொண்டிருந்தது. வாசலைக் கடந்த போது பிரதான வீதியில் குறுக்கும் நெடுக்குமாய் பிரயாணிக்கின்ற மனிதர்கள் அவள் கவனத்தில் விழாமல் விழிகளில் தடக்கினார்கள்.

ரமணா வழமையைவிடக் கனப்பதாய்த் தோன்றிற்று. அல்லது ஏமாற்றங்களும் துயரங்களும் கீலங்கீலமாய்க் கிழித்திருந்த தாங்கும் வலுவற்றுப்போன மனத்திற்குத்தான் அத்துணை பாரமோ! சற்றே தூரத்தில் தெரிந்த பஸ்தரிப்பிடம் நோக்கி நடக்கத்தொடங்கினாள்.

ஒவ்வொரு அடிக்கும் நடை கெஞ்சிற்று. பயணம் பற்றிய அச்சம் பதற்றத்தை அதிகரித்தது. இந்த அச்சமும் துயரமும் தாங்கித் தன்னால் இரண்டு மணிநேரம் பயணத்தைத்தொடர முடியுமாவெனக் கிளர்ந்த சந்தேகம் அவளைத் தளர்வுறச் செய்தது.

பஸ் தரிப்பிடம் எவருமில்லாத தனிமையில் அமிழ்ந்திருந்தது.

அவள் அந்தச் சிறிய கட்டடத்தின் ஓரமாய் சாய்ந்து நின்றுகொண்டாள். இன்னும் சில நிமிடங்களுள் பஸ் வந்துவிடலாம். எவ்வளவு விரைவாய் வந்துவிட்டாலும் நல்லது. யாரேனும் தெரிந்தவர்கள் கண்டுவிடக்கூடும் என்ற எண்ணத்தால் எழுகின்ற கால்கள் நிலத்தில் நிலைகொள்ளாத பதற்றம் சற்றேனும் தணியக்கூடும். அச்சத் தீயின் தகிப்பிலிருந்து விலகிவிட இயலும்.

ரமணாவின் முதுகை விரல்களால் மெல்ல வருடினாள். எத்துணை அருமையான கொடையாய் இருந்தான் அவன்! ஒரு பெண்ணுக்குள் தாளை மலர்த்திய நேரங்களை தன்னோடு அழைத்துவந்து அவளுக்கு அறிமுகஞ்செய்தவன் அவன். அவள் கண்கள் ஊற்றெடுத்தன. 'காணாமற்போன' அவள் கணவனின் சின்ன வார்ப்பாய் அவன் இருப்பதாயே அறிந்தவர்கள் சொல்வதுண்டு.

கூச்சலும் கும்மாளமுமாய் மினிபஸ் ஒன்று அவளைக்கடந்து சென்றது. பாடசாலைச் சேவையாக இருக்க வேண்டும். சிறுவர்கள் உலகம் எத்துணை வினோதமான இனிமை மிக்கது! உலகின் மாசுபடியாத சின்னத்தேவதைகளும் தேவர்களும். இயற்கை எதன் பொருட்டு அவர்களிலும் நோயைச் சபித்துவிடுகின்றது கொடூரமாய்...? அவள் ஏக்கமாய் தொலைவில் மறையும் மினிபஸ்ஸில் பார்வையைப்பதித்திருந்தாள். ரமணாவின் வயதுச் சிறுவர்கள்தான் அவர்களும்.

தூரத்தில் பஸ் வருவது தெரிந்தது. துவாலையைச் சரிசெய்து ரமணாவை ஏறக்குறைய முழுமையாய் போர்த்தினாள். அவளுக்குரிய பஸ்தான். சனக்கூட்டம் அதிகமாயிருந்தது. அவள் ஏறும்போது நடத்துனரின் குரல் உயர்ந்தது..

"வருத்தக்காரப் பிள்ளையோட ஒரு அம்மா வாறா.. இடம் குடுங்கோ..."

அவளுள் திகில் படர்ந்தது. யாராவது இடங்கொடுத்தாலும் கூட அவள் உட்கார முடியாது. யாரோ 'உட்காரலாம்' என்பதுபோலத் தமது சீற்றில் விலகி உட்கார்ந்த போதும் அதைக் கவனியாதவளாய் பின்பக்கக் கதவுக்கும் சீற்றுக்கும் இடையேயிருந்த இடைவெளியில் அவள் தன்னைச் செருகிக்கொண்டாள். கால்கள் கெஞ்சினாலும் உட்காரமுடியாது. நேரம் நகர நகர இறுகிப்போகலாம். படலமிடத்தொடங்கிய விழிகளை கண்ணாடி ஜன்னலின் அப்பாலே தெரிந்த வெளியுள் புதைத்தாள்.

https://tamileelamarchive.com/

இன்றைய நாளின் கடந்துபோன கணங்களெல்லாம் ஒரு கனவாய் இருந்துவிடக் கூடாதா என்று வினோதமான ஏக்கம் பிறந்தது அவளுள். நாலாபுறமும் மணல்மாதிரி பொழிகின்ற உக்கிரப் பெருவெளியுள் தான்மட்டும் தனித்துநிற்பதான பிரமையில் மனது நலிந்து சிதைந்தது. வறுமை எத்தனை பரிமாணங்களில் வாழ்வை விழுங்கி மனிதர்களைச் சக்கையாகத் துப்பிவிடுகின்றது.

பஸ்ஸின் வேகத்தில் குலைகின்ற ரமணாவின் போர்வையை அடிக்கடி சரிசெய்யவேண்டியிருந்தது. அவனைத் தாங்கியிருந்த கை விறைத்து மரத்துப்போனது போலிருந்தது.

"புள்ள... இதில இரன்... உன்னைத்தான்...."

வயதான பெண்ணொருத்தி அவள் கைகளில் தட்டிச் சொன்னாள்.

"இல்லையமம்மா... இருந்தா இவன்ர நித்திரை குழம்பீடும்..."

அவள் குரல் தடுமாறிற்று.

"இரண்டு மூண்டு நாளா நல்ல நித்திரையும் கொள்ளேல்ல ஆஸ்பத்திரியில..."

ஒருவிதமான பதற்றம் குரலில் நிறைந்திருந்தது.

"ஏன் கடுமையான வருத்தமோ..." இப்ப எப்பிடிச் சுகமோ...?"

"ம்... வீட்டை போறம்..."

"பொடியின்ர முகத்தில தெளிவைக் காணயில்லை..."

மூதாட்டி யோசனையாய் முணுமுணுத்தாள்.

"இன்னும் சாப்பிடத் தொடங்ககேல்ல.."

அவள் அவசரமாய் மூதாட்டியின் யோசனையைத் தொடர அனுமதிக்காதவளாய்ச் சொன்னாள். மேலும் உரையாடலைத் தொடரவிருப்பாதவள்போல யன்னலின் வெளியே பார்வையைத் திருப்பினாள். வெற்று வெளியில் கொடு வெய்யிலில் துவண்டு நின்றிருந்தன சிறு மரங்கள்.

யார் யாரோ நிறுத்தங்களில் ஏறியும் இறங்கியும் கொண்டிருந்தார்கள். அவள் சூழல் பற்றி எந்தப் பிரச்னையும் இல்லாதவளாய் துவண்டிருந்தாள். இடையே யாரோ 'ஆஸ்பத்திரி மணம்..' என்பதாய்ச் சொன்னபோது இவள் திரும்பிப் பார்த்தாள். பட்டுப் பாவடையும் சட்டையுமாய் அழகிய சிறுமி. இவள் பக்கமாய் மூக்கைச் சுழித்துக்கொண்டு தாயின் கைகளைப் பிடித்தபடி நின்றிருந்தது. இவள் மேலும் அந்தக் குறுகிய இடத்துள் தன்னைச் சுருக்கிக்கொண்டாள். காற்றின் வாசனையை எவரும் இலகுவில் அடையாளங்கண்டு விடுகிறார்கள்.

கழுத்தோரங்கள் வியர்வையில் கசகசத்தன. கை இனிமேலும் தன்னால் சுமக்க முடியாது என்பதாய் மரத்துப்போனதாய்த் தோன்றிற்று இடது கையிலிருந்து வலது கைக்கு ரமணாவை மாற்றினால் நல்லது போலிருந்தது. மெல்ல இடது கையை மாற்ற எத்தனித்தபோது துல்லியமாய் உணர முடிந்திருந்த ரமணாவின் மாற்றம் அவளைத் திடுக்குறச் செய்தது. அவளின் கரங்கள் தோற்றுவிடும்படியான இறுக்கம்.

அவளுள் அச்சம் கிளர்ந்து படர்ந்தது. இந்தப் பயணத்தின் முடிவுவரை அவளால் தன் முயற்சியில் தோற்றுவிடாதிருந்த இயலாது என்று தோன்றிற்று. கால்கள் தளர்ந்து துவள ஜன்னலில் சாய்ந்துகொண்டாள். இனித் தன்னால் எதுவுமே முடியாது என்பதான ஆற்றாமையுள் தான் புதைந்துகொண்டிருப்பதாய் உணர்ந்தாள்.

"அரசடி இறங்கிறவை வாசலுக்கு வாங்கோ...."

நடத்துனரின் குரலில் அவளுள் திடீரென ஒரு விழிப்பு ஓடிற்று. யுகம்யுகமாகத் தொடர்ந்துகொண்டிருந்த பயணம் முடிவடையப்போகிறதா?

கண்களை விழித்து ஜன்னலின் வெளியே பார்வையைச் செலுத்தினாள். அவளுக்குப் பரிச்சயமான தெருவோரக் கட்டிடங்கள், தூசிபடிந்த மரங்கள். மெல்ல நகர்ந்து வாசலருகே வந்தாள். கையில் தயாராய் வைத்திருந்த சில்லறைகளையும் தாளையும் நடத்துனரிடம் கொடுத்தாள்.

"அரை டிக்கெட்டுத் தானே...?"

அவரின் பார்வை சந்தேகமாய் ரமணாவை ஏறிட, அவள் விழிகள் பொங்காதிருக்குமாறு தன்னைக்கட்டுப்படுத்த மிகுந்த பிரயத்தனப்பட வேண்டியிருந்தது.

அந்த இறக்கத்தில் அவளோடு இறங்குவதற்குப் பயணிகள் எவரும் இருக்கவில்லை. அவள் மெதுவாய் எவரிலும் இடித்துக்கொள்ளாமல் மிக மெதுவாய் இறங்கினாள். ரமணாவை வயிற்றிற் சுமந்த நாட்களிலும் அவள் இப்படித்தான் மிகக் கவனமாய் இருந்திருக்கிறாள்.

பஸ் புறப்பட்டுப்போய்விட எஞ்சியிருந்த வீதியின் வெறுமையின் ஒரு பாகமாய்த் தான் நடப்பதாய் அவளுக்குத் தோன்றிற்று. இரக்கமற்றுத் தொடர்கின்ற கோடைகால வெயில் விரிப்பினுள் சிறு மரங்கள் மிக வாடியிருந்தன தெருவோரமாய்.

கடந்துபோன நாட்களினதும் பக்கமாய் தொடர்கின்ற நேரங்களினதும் துன்பம் தாங்கி அடுத்த பொழுது அவளுடன் எவ்வாறு இணைந்து கொள்ளப்போகிறது என்பதான மலைப்பான துயர் எழுந்தது அவளுள். கால்கள் நடக்கும் வலுவை அறவே இழந்தாற்போல் சோர்ந்துவிட, அருகிருந்த பெயர் தெரியாத மரத்தின்கீழ் தளர்ந்து அமர்ந்தாள் அவள். வீதியின் வெறுமை அவளை மையமாக்கி விரிந்து படர்ந்தது.

ரமணாவைப் போர்த்திருந்த துவாயை எடுத்து நிலத்தில் விரித்தாள். மெல்லக் குனிந்து அவனைத் தன் தோளிலிருந்து விடுவித்து சரித்து துவாவையில் அவனைப் படுத்தினாள். கை கால்களை நிமிர்த்தி ஒருசேர வைக்கமுடியாதெனப்பட்டது. குனிந்து ஆதுரத்துடன் அவன் முகத்தை வருடினாள். எப்போதும் போலவே சின்ன உதடுகளின் ஓரத்தில் இப்போதும் குறும்பு சுழித்திருப்பதாய்த் தோன்றிற்று.

ஆத்மாவின் ஆழத்துள்ளிருந்து எழுவதான துயரில் அவள் வயிறு குழைந்தது. உயிரற்றுப்போன அவள் உயிரின் கொடி, அனலுள் தகிவதாய் அவள் உடம்பு நலிந்தது.

அவளின் தீனமான அழும் குரலில் எழுந்த துயர வார்த்தைகள் உருவழிந்து உருவழிந்து அந்த வெளியிற் கரைந்துகொண்டிருந்தன.

https://tamileelamarchive.com/

திலீபன் நினைவு நாள்



பின்லாந்து

திலீபன் நினைவு நாள்



நெதர்லாந்து

திலீபன் நினைவு நாள்



பிரான்ஸ்

எழுச்சி விழா




சுவிற்சலாந்து

திலீபன் நினைவு நாள்



இத்தாலி

நினைவெழுச்சி நாள்



ஜேர்மனி

https://tamileelamarchive.com/

திலீபன் நினைவு நாள்



அவுஸ்திரேலியா

காந்தரூபன் விருது - 2006



சுவிற்சலாந்து

திலீபன் நினைவு நாள்



சுவீடன்

ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் முன்பாக எழுச்சிப்பேரணி




ஸ்ராஸ்பேக்-பிரான்ஸ்

நினைவெழுச்சி மாலை



பிரான்ஸ்

பேர்லின் எழுச்சிப்பேரணி



ஜேர்மனி

https://tamileelamarchive.com/

பிச்சைக்காரனைக் கூட
சுட்டுக்கொன்றவனே

இம்முறை

பச்சிளங் குருத்துக்களையுமா
பிச்செறிந்தாய்

பாவம் இது

குற்றமறியாத நெஞ்சமடா
இக் குழந்தை
நீ
தூக்கிட்டு கொல்ல
யாருக்கு உழவாய் உடந்தை

பால் முகத்தை கண்டு கூட
பாவியருக்கு
பாவம் வரவில்லை
போலும்

புசித்த உணவு
செமிக்கு முன்னர்- இது
சுருக்கிட்டவனின்
பாணம்

பசித்த பிள்ளைக்கு
பால்தானே வேண்டும்

பழி தீர்க்க வந்தவனே
உயிராடா வேண்டும்

எம்
உணர்வுகளை இழந்ததில்லை ...
நிலம்!
எம் உறவுளை
இழப்பதில் இல்லை பலம்!

பகைவனே!...
பிஞ்சுக் கால்களுக்கா
அந்தரத்திலாடா
ஆசை
பெற்ற உறவுகளுக்குமா
உருக்குலைய
ஆணை

பாவியரே! பாரடா
இன்னும் கூட
குருதி கரையவில்லை
முகத்தில்!

பாதகனே கேளடா
நீ நினைப்பது
நடவாது
தமிழ் நிலத்தில்!
ஓடி விளையாடும் கால்களுக்கா
ஓய்வு கொடுத்தாய்!
இதோ...

உணர்வுகள் கூடிக் கொண்டிருக்கின்றன
தூங்கவில்லை
தமிழ்த்தாய்

உயிரைக் கொன்றொழித்தா
தமிழ் குருதி குடித்தாய்

இதோ...


ஒன்றாகவே அணி திரண்டு
ஓ[ர்]மம்
வளர்க்கின்றோம்.

ஐ. துஷ்யந்தன்
அந்திவானம் பதிப்பகம்
கிளிநொச்சி

கடற்புலிகளின் துணைப்படை வீரர்கள்
ஒளிப்படம்: தி.தவபாலன்



https://tamileelamarchive.com/



https://tamileelamarchive.com/

எரிமலை
ERIMALAI

ஒக்ரோபர் 2006

